# ஐயப்பன் சரிதம்



வெளியீடு :

சண்டிலிப்பாய் வேவிற்பதி

**பூர்ணா புஷ்கலாதேவி சமேத**

**ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் சரிதம்



வெளியீடு :

சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார்
தேவஸ்தான பரிபாலனசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : ஐயப்பன் சரிதம்
பதிப்புரிமை : ஆலய பரிபாலனசபைக்கே.
வெளியீடு : சண்டிலிப்பாய் வேவிற்பதி ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான பரிபாலனசபை
முதற் பதிப்பு : 2019 மார்கழி
பக்கங்கள் : xviii + 247
தொ.பே.இல. : 0778403173
வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு :
ருவின்ஸ்ரார் ஐரி யுனிற்,
பிரதான வீதி,
சங்கானை.

Book : Iyappan Saritham
Copyright : Temple Paripalana Sabai
Published by : Sandilipay Vevitpathy Harihara Puthira Iayanar Dhevasthana Paripalanasabai.
First Edition : 2019 December
Pages : xviii + 247
Telephone : 0778403173
Design & Printed : TwinStar IT Unit,
Main Street,
Chankanai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



சண்டிலிப்பாய் வேவிற் பதியில் எழுந்தருளியிருக்கும் ஹரிஹர புத்திர ஐயனார் திருத்தலத்தில் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக 2007ம் ஆண்டு தொடக்கம் மகரஜோதி மண்டலபூசை மிகவும் சிறப்பாக நடைபெற்று வருவது சிறப்புமிக்க ஒன்றாகும். ஆரம்பத்தில் ஒருசாமியுடன் மாலை அணிவிக்கும் நிகழ்வு ஆரம்பமாகி முதலில் திரு.இ.விஜயன் சாமி மட்டும் மாலை அணிந்து ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வானது வருடா வருடம் பல சாமிமார் தொடர்ச்சியாக மாலை அணியும் நிலை பெருகி 2019ம் ஆண்டில் ஐம்பதிற்கு மேற்பட்ட சாமிமார் மாலை இந்த ஆலயத்தில் அணியும் நிகழ்வானது இவ் ஆலயத்தின் ஐயப்ப பக்தர்களின் வளர்ச்சிப் போக்கை காட்டி நிற்பதையிட்டு இவ்வாலயத்தில் மாலையணி விக்கும் குருசாமி என்ற வகையில் அளவு கடந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாலயத்தில் நடைபெறும் மகரஜோதிக் காலங்களில் எமது மணிகண்டசபையின் குருமார்கள் ஏனைய சாமிமார்கள், அடியவர்களும் வருகைதந்து இவ்வாலயத்தின் வளர்ச்சியில் எம்மோடு இணைந்து பூசைகளில் பங்குபற்றியவர்களுக்கும் பாராட்டுக்கள்.

ஆன்மிகமும், இறைபக்தியும் மனிதனின் நல்வாழ்விற்கு வழிசமைக்கும் என்பதற்கு இறை அன்பு கொண்டோரின் செயற்பாடு முக்கியம் பெறுகின்றது. கருணை வடிவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் எல்லோர் மீது அன்பு கொண்டவர் நாங்களும் நன்நெறி வாழ்வதால் ஆன்ம ஈடேற்றத்திற்கு இறை வழிபாடு முக்கியம் பெறுவதை நாம் எல்லோரும் அறிந்திருத்தல் வேண்டும். இந்த ஆன்மிக ஐயப்ப பக்தர்களின் விருப்பிற்கமைய வும் ஆலய பரிபாலன சபையின் பெரும் முயற்சியிலும் ஐயப்ப சரிதம் என்ற நூல் ஐயப்பனின் வரலாறும், சிறந்த பஜனைப் பாடல்களுடனும், ஆன்மிகத்தின் மூலம் மனிதனை நன்நெறி வாழ வைக்கும் கட்டுரைகளுடனும் வெளியிடப்படுவதை யிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன்.

இவர்களின் இம்முயற்சியை மனதாரப் பாராட்டு கின்றேன். இம்மலரை அனைத்து சாமிமாரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்பது எனது விருப்பமாகும். ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மனிதனை அழிவிற்கு இட்டுச் செல்லும் கொடிய அசுரத் தன்மையிலிருந்து விலகி எல்லா மனிதர்களும் நன்நெறி வாழ்ந்து ஆன்ம ஈடேற்றத்தைப் பெற வேண்டும் என்பது ஐயப்ப வழிபாட்டின் நோக்கமாகும். பதினெட்டுப் படிகளின் தத்துவத்திற்கேற்ப குரோதங்களைத் தவிர்த்து நன்நெறி காட்டும். சண்டிலிப்பாய் ஐயனார் தேவஸ்தானத்தின் முதல் வெளியீடான ஐயப்பன் சரிதம் என்ற இம்மலருக்கு ஆசி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைவதோடு எல்லோர் உள்ளங்களும் நன்நெறி வாழ்ந்து இறை அருள்பெற ஐயப்ப பெருமானை வேண்டி ஆசி வழங்குகின்றேன்.

சிவஸ்ரீ பா.பாலஸ்கந்தரூபக்குருக்கள்
குருமுதல்வர்,
மணிகண்டசபை,
கந்தர்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



எமது சண்டிலிப்பாய் ஹரி ஹர புத்திர ஐயனார் ஆலய தேவஸ்தான வெளியீடாக வரும் ஐயப்பன் சரிதம் என்ற இம்மலருக்கு ஆசி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பகுதியில் ஐயப்பன் மண்டல பூசை 60 நாட்கள் சிறப்பாக நடைபெறும் இவ்வாலயத்தில் ஒரு சிறந்த நூலையும் எமது தேவஸ்தான பரிபாலனசபை வெளியிடுவது மிகவும் சிறப்பான அம்சமாகும். ஆன்மிக நெறி வாழ எண்ணி 60 நாட்கள் விரதம் இருந்து சபரிமலை யாத்திரை செல்லும் யாத்திரிகர்களும், ஐயப்பன் விரதத்தைக் கடைப்பிடித்து நன்நெறி வாழ நினைக்கும் எல்லா உள்ளங்களுக்கும் ஏனைய சமய ஆன்மிக உண்மைகளை அறிந்து அதன்வழி வாழ எண்ணும் நல் உள்ளங்களிற்கும் இந்த மலர் மிகவும் சிறப்பு மிக்கதாய் அமைத்தமை பாராட்டுக்குரியது. இம்மலர் பயனுடையதாக எல்லோர் கைகளிலும் தவழ்ந்து அதை வாசித்து பயன்பட வேண்டும் என்பதுடன் இம்மலரை வெளியிட்ட எமது பரிபாலனசபைக்கு நன்றிகளையும் தெரிவித்து ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ கு. சோமாஸ்கந்தக்குருக்கள்
பிரதம குரு,
சீரணி அம்மன் தேவஸ்தானம்,
சண்டிலிப்பாய் ஐயனார் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயம் பல நூற்றாண்டுகள் பழமையானது. வேண்டு வோர்க்கு வரமருளும் தெய்வமாக இருக்கும் இவ்வாலயத்தில் நடைபெற்றுவரும் உற்சவங்களில் மகரஜோதி மண்டலப் பெருவிழா முக்கியமான நிகழ்வாகும். தொடர்ச்சியாக கார்த்திகை மாதம் 1ஆம் நாள் தொடக்கம் தை மாதம் 1ஆம் நாள் வரை அறுபது (60) நாட்கள் இங்கு சிறப்பாக பூசை நடைபெறும். பல சுவாமிகள் மாலை அணிந்து இருமுடி கட்டி சபரிமலைக்கு யாத்திரை செல்லும் நிகழ்வு சிறப்பாக நடைபெறுகின்றமை முக்கியமானதாகும்.

யாழ் கந்தர்மடம் மணிகண்டசபையின் குருமுதல்வர் குருசாமி இருபத்து இரண்டு தடவைகள் சபரிமலைக்கு யாத்திரை செய்து அருள்பெற்ற சிவஸ்ரீ பா.பாலஸ்கந்தரூபக் குருக்கள் வருடா வருடம் இங்கு வருகை தந்து சாமிமார்களுக்கு மாலை அணிவித்து ஆசி வழங்கி வருவது முக்கியமானது.

2007ஆம் ஆண்டு எமது ஆலயத்தில் முதல் மாலை அணிவிக்கும் நிகழ்வு ஆரம்பமாகியது. இப்பகுதியில் செல்வம் சுவாமி மூலம் முதல் மாலையணிந்த திரு.விசயன் சாமி, ஆலய பரிபாலனசபையின் முன்னாள் செயலாளராகப் பணியாற்றிய திரு.செ.திருஞானம் அவர்களின் ஏற்பாட்டில் இங்கு ஐயப்பன் மண்டல பூசை ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று இன்று பன்னிரெண்டு வருட காலமாக அறுபது நாட்கள் மண்டல பூசை இடம்பெற்று வருவது முக்கிய ஒன்றாகக் குறிப்பிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் இந்த ஆலயத்தில் ஓர் ஐயப்பன் வரலாறும் பஜனைப் பாடல்களும் அடங்கிய நூலை வெளியிட வேண்டும் என ஆலய பரிபாலனசபையினரும் சாமிமார்களும் விரும்பிக்கொண்டதற்கமைய இந்த நூல் வெளியிடப்பெறுகின்றது. ஐயப்பன் வரலாற்றை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும் என்ற விருப்புடனும் பஜனைப் பாடல்களையும் ஆன்மீக சிந்தனை கொண்ட பல சிறிய கட்டுரைகளையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

இறைவனைப் பற்றி அறிந்து அவனைப் பாடிப் புகழ்ந்து நன்நெறி வாழ வேண்டும் என்ற அடிப்படையில் பலரின் ஆலோசனைக்கேற்ப குருசாமி சிவஸ்ரீ பா.பாலஸ்கந்தரூபக் குருக்களின் வழிகாட்டலில் இந்நூல் உருவாக்கம் பெற்றுள்ளது. இந்நூலினை வெளியிடுவதில் நிதிப் பற்றாக்குறைகள் வந்தபோது லண்டனில் வசித்து வரும் திரு.இ.சிவகுமார் அவர்கள் ஒருபகுதி பங்களிப்பைச் செய்ய முன்வந்தமை எமக்கு பெரும் உதவியாக அமைந்தது.

அத்துடன் சண்டிலிப்பாய் அம்பாள் அரிசியாலை உரிமையாளரும் உதவி புரிந்தமை இந்த இடத்தில் குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

அத்துடன் எமது ஆலய பரிபாலனசபையும் இந்த நூல் வெளியிட வேண்டும் என்பதில் விருப்பம் கொண்டு செயற்பட்டமை முக்கிய விடயமாகும். மனிதன் நல்ல மனிதனாக வாழ வேண்டும் என்றால் நல்ல வழிகாட்டல்கள், ஆன்மிக சிந்தனைகள் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் இங்கு பல சிறிய கட்டுரைகள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவற்றை வாசிப்பதன் மூலம் நன்நெறி வாழ வழிகளைத் தேடிக்கொள்ளலம் என்பது எமது நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாழ்வு நல்லதாக வல்லதாக அமைய வேண்டு மானால் எமது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றிலும் நன்நெறியில் வாழ எம்மைப் பழகிக் கொள்ள வேண்டும். அதற்கு எமது மனம் தூய்மையானதாக அமைய எம்மை மாற்றிக்கொள்ள நாம் தயாராக வேண்டும். எல்லோரும் நன்நெறி வாழ வேண்டும் என்ற விருப்புடனேயே இம்மலரை ஆக்கியுள்ளோம். இம்மலரைப் பெற்று அனைவரும் விருப்புடன் முழுமையாக வாசித்து பயனடைவீர் கள் என்பது எமது நம்பிக்கையாகும். இம்மலரை வெளியிடு வதற்கு பல வழிகளிலும் உதவிய நல்லுள்ளங் களுக்கும் எமது நன்றிகள்.

நல்லையா செல்வராசா,
செயலாளர்,
ஆலய பரிபாலனசபை
அதிபர்,
யா/ பலாலி சித்திவிநாயகர்வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டிலிப்பாய் வேவிற்பதி
## ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் தேவஸ்தான
## பரிபாலனசபை

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. செ. சிவஞானம் |
| உபதலைவர் | : | திரு. சி. செல்வரத்தினம் |
| செயலாளர் | : | திரு. நல்லையா செல்வராசா |
| உபசெயலாளர் | : | திரு. கு. சத்சனாமூர்த்தி |
| பொருளாளர் | : | திரு. இ. விஜயன் |

கௌரவ நிர்வாக உறுப்பினர்கள்

திரு. இ. இராசையா

திரு. செ. சிவகுருநாதன்

திரு. சி. தாமோதரம்பிள்ளை

திரு. இ. இரத்தினராசா

திரு. ந. இந்திரமோகன்

திரு. ப. தேசிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் வேவிற்பதி

பூர்ணா புஷ்கலாதேவி சமேத ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

* ஸ்ரீ ஐயப்பன் சரித்திரமும் படங்களும் ------ 01-16
* மாலை அணியும் முறைகள் -------------- 17
* மாலை அணிந்து கொள்ளும் போது... ----- 18
* மாலை கழற்றுவதற்கான மந்திரம் --------- 18

**கணபதி தோத்திரங்கள்**

* பாஹி பாஹி ------------------------------ 19 20
* உச்சிப் பிள்ளையார் ------------------- 20 21
* தும்பிக் கணேசன் ---------------------- 22
* பம்ப பம்மதா தெய்ய தெய்யனுக்கு -------- 23 24

**சிவன் தோத்திரம்**

* தில்லை அம்பல நடராஜா --------------- 25
* சிவாய பரமேஸ்வராய ------------------ 26
* கங்கை அணிந்தவா -------------------- 26
* நமசிவாய நமசிவாய ------------------- 27
* ஓம் நமசிவாய ------------------------- 28
* ஓம் சிவாய நமசிவாய ------------------ 29
* ஓம் நமசிவாய சிவாய நம ஓம் ------------ 30
* பிட்டுக்கு மண் சுமந்து ------------------- 30 31
* கோவிந்தா ஹரி கோவிந்தா -------------- 32 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆனந்த ஸாகரா ---------------------------- 34
* சலங்கை கட்டி ஓடி... ------------------- 35
* கோகுலத்துப் பசுக்களெல்லாம்... ----------- 36
* ஆயர் பாடி... ---------------------------- 37
* கீதை சொன்ன கண்ணன் ------------------ 38
* கோவிந்தா கோவிந்தா -------------------- 39
* கண்ணன் எங்கள் எண்ணனாம் ------------ 40
* சின்னச் சின்ன பாதம் வைத்து -------------- 41
* ஸ்ரீ லட்சுமி ரமணா நாராயணா ------------ 42
* கோவிந்த ஜன கோபால ------------------- 42
* நாதர் முடி மேலிருக்கும்... ----------------- 43
* நாகராஜா தோத்திரங்கள் - ஆடுராஜா ------ 44

**அம்மன் தோத்திரங்கள்**

* அம்மா முத்துமாரி ----------------------- 45
* அன்னை உருவம்மா ---------------------- 45 46
* அஞ்சாத செஞ்சடைச்சி ------------------- 46
* சமயபுரத்தாளே மாரியம்மா -------------- 47
* ஓசை மணி ------------------------------ 48
* ஜெய ஜெய தேவி ------------------------ 49 50
* ஆதிசக்தி ஆதிசக்தி ஆதிசக்தியே ----------- 51
* ஜனனி ஜனனி --------------------------- 52
* ஓம் சக்தி ---------------------------------- 53
* மாணிக்க வீணை ஏந்தும் ------------------ 54
* கற்பூர நாயகியே -------------------------- 55
* பாவம் எல்லாம் தீர்ப்பவளே... -------------- 56 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முருகன் பாடல்**


* சத்தியம் சிவம் சுந்தரம்... ---------------- 58
* ஆடு மயிலே கூத்தாடு மயிலே... ----------- 59
* ஓடி வா முருகா ----------------------- 60
* பழனிமலையும், சபரிமலையும் ----------- 61
* கனலில் கருவாகி ----------------------- 62
* வேல் முருகா மால் மருகா --------------- 63


**வைரவர் பாடல்**


* ஆதிமூல நாதனே... --------------------- 64
* அகரத்தின் சிவப்பொருளே ------------- 65
* சூலமா நாயகன்... --------------------- 66


**ஆஞ்சநேயர் தோத்திரங்கள்**


* வெற்றிலையில மாலை கட்டுங்க ---------- 67
* பத்துப்படி ஏறிவந்தேன் ----------------- 68
* ராம தூதனே --------------------------- 69
* சுந்தர அனுமான் ---------------------- 70


**ஐயப்பன் தோத்திரங்கள்**


* கன்னிமூல கணபதியை... ---------------- 71
* பகவான் சரணம் ----------------------- 72-73
* ஓம் குருநாதா ஐயப்பா ------------------ 73
* ஜீவன் என்பது உள்ளவரை -------------- 74
* இருமுடி தாங்கி... ---------------------- 75-76
* ஐயப்பா உன்னை... -------------------- 77


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சன்னதியில் கட்டுங்கட்டி -------------- 78
* திம்தகத்தோம் ------------------------ 79
* சுவாமியே சரணம் ஐயா ------------------ 80
* என்ன மணக்குது... --------------------- 81-82
* தள்ளாடி தள்ளாடி --------------------- 82-83
* கட்டும் கட்டு... ---------------------- 84
* எங்கே மணக்குது ---------------------- 85
* இருமுடி கட்டு ------------------------- 86
* குழந்தைகளே குழுந்தைகளே... ----------- 87
* இருமுடியை சுமந்து வந்தேன் ------------ 87 -88
* தாலாட்டுப் பாடவா -------------------- 88 89
* லாகி லாகி ---------------------------- 90
* கந்தர்மடம் வந்து ---------------------- 91
* அம்மாவும் நீயே ----------------------- 92
* சாமி சரணம் என்றால் ------------------ 92- 93
* அச்சங்கோவில் அரசே ------------------ 93
* ஹரி நின்று அருள் புரியும்... ------------ 94
* பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால் 95
* நிலாவில் ஒளி வீசும் ------------------ 96
* சத்திய ஜோதி ------------------------- 97
* காடுமலை கவலை இல்லை --------------- 98
* சரணம் சொல்லி கூப்பிடுவோம் ---------- 99
* பள்ளிக்கட்டு பள்ளிக்கட்டு -------------- 100
* தேவாதி தேவன்... --------------------- 101


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அன்னதானப் பிரபுவே வாருமையா... ------ 102 -103
* பம்பை நதிக்கரையே! -------------------- 104
* ஐயப்பா ஐயப்பா ----------------------- 105
* மணிகண்டனே மணிகண்டனே ----------- 106
* அன்னதானப் பிரபுவே சரணம் ஐயப்பா ---- 107
* சரணம் விளித்தால்... ------------------- 108 -109
* மஞ்சமாதா கோவிலுக்கு... -------------- 109 - 110
* வாறாராம் சாமி வாறாராம் --------------- 111 -112
* சாமியே ஐய்யப்போ... ------------------ 113
* பம்பை வாசனே... --------------------- 114 -115
* மங்களங்கள் தருபவனே... --------------- 116-117
* அரிகரபுத்திரன் ஆனந்தமானவன் ---------- 118 - 119
* சரணம் சரணம் சுவாமி சரணம் ------------ 120 -121
* காந்தமலை வேந்தன் அவன் பவனி --------- 122 - 123
* வாடா கண்ணா வா --------------------- 124
* பொன்னூஞ்சல் ஆடுகிறார்! --------------- 124 - 126
* வட்ட நல்ல பொட்டு வச்சு --------------- 127
* அம்பலத்தமர்ந்தவனே ------------------ 128 - 129
* காற்றில் வாழும் சாந்தசொரூபா ----------- 130 - 131
* புவி போற்றும் மலைகளிலே ------------- 131 - 132
* பந்தள மன்னனுக்கு --------------------- 133 -134
* உலகாளும் ஐயப்பன் ஐயப்பா ------------- 134 - 135
* ஸ்ரீ சபரிசா பம்பா வாசா ----------------- 136 -137
* கனகவாசத்திலே ----------------------- 138 -140
* பந்தள ராஜனைத் தேடி ------------------ 141 -142

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பள்ளிக்கட்டு சபரிமலைக்கு -------------- 143-145
* ஐந்து மலையில் அருளும் தெய்வம் -------- 146-147
* சுவாமியே சரணமய்யப்பா
நெய் அபிஷேகப்பிரியனே ---- 148-150
* தேவாதி தேவன் திருவருள் -------------- 151
* சாமிக்கெல்லாம் சாமியப்பா ------------- 152
* சபரிமலைக்கு யாத்திரை ----------------- 153-154
* குருவே சரணம் ------------------------ 154-155
* நாற்பது நாட்கள் நோன்பிருந்தோம் ------- 156
* வந்தகடன் தீரவில்லை ------------------ 157-158
* மோகினி தந்த மன மோகனன் ------------- 159
* ஓம் ஹரிகர சுதனே --------------------- 160-161
* தேடுகின்ற கண்களுக்கு ----------------- 162
* இஸ்ரமான தேய்வமே ------------------ 163
* கானகமலையில் பெருவெளியில் ---------- 164
* காட்டுவழிப் பாதையிலே --------------- 165-166
* ஆடிவருகுது அசைந்தாடி வருகுது -------- 167-168
* கட்டுநிறை கட்டலாமா ----------------- 169-170
* மலையாளம் வாருங்கையா --------------- 171
* சபரியிலே தெரியுதுபார் மகரஜோதி ------- 172
* சந்தனப்பூ வாசம் ---------------------- 173-175
* நெய்யபிக்ஷேகம் சாமிக்கே --------------- 176-179
* ஓங்கார ரூபனே... --------------------- 180-181
* மலையாண்டி பெற்றெடுத்த... ------------ 182
* அப்பனுக்கு மலையுண்டு ---------------- 183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உலகாளும் ஐயன் ------------------------ 184
* சதாசிவன் மகனே ----------------------- 185 -186
* சரணம் விளித்தால் மரணம் இல்லை ------- 187
* மூனுகண்ணுத் தேங்கா ------------------- 188 -189
* நல்முத்து மணிமாலை ------------------- 190
* ஸ்ரீ ஐயப்ப கவசம் ---------------------- 191 -196
* நூற்றெட்டு சரணக்கோவை -------------- 197 -200
* பதினெட்டாம் படிப்பாடல் ------------- 201 -204
* ஸாஸ்தா ஆராத்தி தீபமங்களம் ----------- 204- 205
* எங்க கறுப்பு சாமி ---------------------- 206- 210
* கருப்பண்ண சாமி ---------------------- 211 -212
* தர்ம சாஸ்தா காயத்ரி ------------------- 213 -214
* வழிநடைப் பாடல் ---------------------- 215 -218
* மங்களம் -------------------------------- 219
* ஹரிவ ராஸனம் சுவாமியே சரணம் ஐயப்பா - 220 -221
* எங்கே நிம்மதி! ------------------------- 222 -224
* வேழமுகத்து விநாயகன் ----------------- 225 -227
* வாழ்விற்கு நல்லவை --------------------- 228 -230
* நாளாந்த கடமைகளில் இறை சிந்தனை ----- 231 -234
* விழுமியப் பண்புகளைக் கடைப்பிடிப்போம் 235 -240
* அன்னதானத்தின் சிறப்பு ----------------- 241 -245
* சைவ சிறுவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை 246 - 247


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன்
## சரித்திரமும் படங்களும்



அரம்பன் என்ற அரக்கனுடைய மகன் மகிஷாகரன் என்பவன் பிரம்மாவை நோக்கி நீண்ட காலமாகக் கடும் தவம் புரிந்து வந்தான். அவனுடைய கடும் தவத்தைக் கலைக்கப் பெரிதும் முயன்றும் முடியாமல் போகவே இறுதியில் பிரம்மா அவன் முன் தோன்றி "பக்தனே! உன் தவபலத்தை மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ அதை கேட்பாயாக" என்றார். மகிஷாசுரனும் மகிழ்ச்சியடைந்து "அய்யனே! இந்த பூமியில் பிறந்த யாரும் என்னைக் கொல்லாதிருக்கும் வரம் வேண்டும்" என்று கேட்டான். பிரம்மாவும் அரக்கன் கேட்ட வரத்தை அளித்துவிட்டு மறைந்தார். மகிஷாகரன் தான் பெற்ற வரத்தைத் தவறாகப் பயன்படுத்தி பூலோகத்திலும் தேவலோகத்திலும் பெரும் கொடுமைகள் புரிந்து வந்தான். மக்களும் தேவர்களும் அரக்கனுடைய கொடுமைகளுக்கு ஆளாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் சரித்திரம்



பண்டைய திருவிதாங்கூரில் பந்தளநாடு என்பதுவும் ஒன்றாகும். இந்த பந்தள நாட்டைப் பாண்டிய வம்சத்தில் தோன்றிய இராஜசேகர பாண்டியன் என்பவன் ஆண்டு வந்தான். இவன் வீரதீர பராக்கிரமத்தில் மிகவும் வல்லவன். முறையாக நாட்டை இவனது ஆட்சியில் மக்கள் எவ்வித குறைபாடுமின்றி வாழ்ந்து வந்தனர். அழகிய இராணியும், அன்பான குடிமக்களும் ஆண்டனுபவிக்கப் பெருஞ் செல்வமும் இருந்த போதிலும், தனக்குப் பின் நாட்டை ஆள ஒரு வாரிசு இல்லையே என்ற பெருங்குறை அந்த மன்னனுக்கு இருந்தது. பந்தள நாட்டுக் குடிமக்களும், அன்பே வடிவான தம் மன்னனுக்கு பிள்ளைச் செல்வம் இல்லையே என்று பெரிதும் வருந்தினர். சிவ பக்தனான மன்னன் இராஜசேகரனும், இராணியும் தங்களுக்கு வாரிசு வேண்டி சிவபெருமானைத் தினமும் வழிபட்டு வந்தனர். மன்னன் மீது மாறாத அன்பு கொண்ட மக்களும் மன்னனுக்கு வாரிசு வேண்டி சிவபெருமானை வழிபட்டு வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகிஷாசுரனின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி மும்மூர்த்திகளாகிய சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகியோரிடம் சென்று தங்களைக் காத்தருளும்படி வேண்டினர். ஆனால் மும்மூர்த்திகளும் தாங்கள் தனியாக அரக்கனுடன் போரிட்டு வெல்வது இயலாது எனக் கருதினர். இருப்பினும் தேவர்களும், மானிடர்களும் படும் தொல்லைகளைக் கண்டு மனமிரங்கி மூலவரும் தம் தம் சக்திகளை எல்லாம் ஒன்றுகூட்டி சண்டிகாதேவி என்னும் சக்தியைப் படைத்து மகிஷாசுரனை அழிக்கும்படி ஏவினர். சண்டிகாதேவியும் அரக்கன் முன் தோன்றி அவனுடன் கடும் போர் புரிந்து அவனை அழித்தொழித்தாள். தேவர்களும் மானிடர்களும் துன்பம் நீங்கி மகிழ்ச்சி அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரம்பனின் சகோதரன் கரம்பனுடைய புத்திரி மகிஷி தன்னுடைய சகோதரன் மகிஷாசுரனின் அழிவுக்குக் காரணமான தேவர்களைப் பழிவாங்க முடிவெடுத்து அதற்கான சக்தியைப் பெற பிரம்மாவை நோக்கி கடும் தவம் புரிந்தாள். அவளுடைய தவத்தை மெச்சிய பிரம்மா அவள் கேட்டபடி சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் பிறந்த புத்திரனால் அல்லாது வேறு எவராலும் தனக்கு சாவு நேரக்கூடாது என்ற வரத்தைக் கொடுத்து மறைந்தார். வரம் பெற்ற அரக்கி தேவலோகம் சென்று தேவர்களுக்குப் பல கொடுமைகள் புரிந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துர்வாசருடைய சாபத்தால் தேவர்களுக்கு நரை ஏற்பட்டது. பாற்கடலைக் கடைந்தெடுத்த அமுதம் ஒன்றினால் தான் நரை சாபத்தைப் போக்க முடியும் என்ற மகா விஷ்ணுவின் யோசனையின் பேரில் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தார்கள். அதில் தோன்றிய அமுதத்தை அசுரர்கள் பறித்துக் கொண்டார்கள். அதை மீட்க மகா விஷ்ணு மோகினி வடிவில் சென்று அமுதத்தை அவர்களிடமிருந்து மீட்டு தேவர்களிடம் கொடுத்தார். இதை அறிந்த பரமசிவன் மோகினி வடிவைக் காண மகா விஷ்ணுவை அணுகினார். மோகினியின் அழகிய வடிவு கண்டு மனம் மயங்கினார். அதன் விளைவாக ஓர் ஆண் குழந்தை உருவாயிற்று. அந்த குழந்தையை புத்திரப் பேறில்லாத தன்னுடை பக்தனான இராஜசேகர மன்னனிடம் ஒப்படைக்க பூமிக்கு கொண்டு செல்லும் பரமசிவன் அக்குழந்தைக்கு ஒரு மணி மாலையை அணிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னன் இராஜசேகரன் பரிவாரங்களோடு பம்பாநதி தீரத்துக்கு வேட்டையாடச் சென்றான். அங்கு ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டு அப்பக்கம் சென்று பார்த்தான். குழந்தையைக் கண்டு அதிசயித்து என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த போது ஒரு முனிவர் அங்கு தோன்றி அரசனிடம் "மன்னவா! நீ குழம்ப வேண்டாம். இவன் உன்னுடைய பிள்ளையில்லாக் குறையைப் போக்கவே அவதரித்திருக்கிறான். இவனை எடுத்துச் சென்று வளர்ப்பாயாக. கழுத்தில் மணிமாலை இருப்பதால் இவனுக்கு மணிகண்டன் என்று பெயரிட்டு வளர்த்துவா. பன்னிரெண்டு வயதில் இவன் யார் என்று நீ அறிந்துகொள்வாய்" என்று சொல்லி மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளையில்லாத குறையினால் வருந்திய பந்தள மன்னனும் பெரும் மகிழ்ச்சியடைந்து அக்குழந்தையைத் தன் அரண்மனைக்கு எடுத்துச் சென்றான். குழந்தையை ராணியிடம் கொடுத்து நடந்ததை எல்லாம் கூறினான். குழந்தையைக் கண்ட ராணியும் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தாள். பந்தள நாட்டு மக்களும் மன்னனுக்குப் பிறகு நாட்டையாள வாரிசு கிடைத்தது பற்றி மகிழ்ந்தனர். ஆனால் வாரிசற்ற மன்னனுக்குப் பின் தானே மன்னனாகலாம் என்று மனக்கோட்டை கட்டி வந்த பந்தள நாட்டு திவான் மட்டும் வருத்தப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிகண்டன் சிறந்த ஒரு குருவின் கீழ் வித்தைகளைத் திறமையுடன் கற்று வந்தான். அவனது அசாதாரணமான திறமையைக் கண்ட குரு இவன் சாதாரண சிறுவனல்ல, தெய்வாம்சம் பொருந்தியவன் என்று அறிந்துகொண்டார். கல்வியை முடித்து மணிகண்டன் குருதட்சணை கொடுக்கக் குருவை அணுகியபோது அவர் தனக்கு குருதட்சணை எதுவும் வேண்டாம். பார்வையும் பேச்சுத்திறனுமற்ற தன் மகனுக்கு பார்வையும் பேச்சுத்திறன்களையும் அளித்தருள வேண்டும் என்று கேட்டார். மணிகண்டனும் குருவின் மகனை ஆசிர்வதித்து கண் பார்வையையும் பேச்சுத் திறனையும் அளித்து குருவை வணங்கி அரண்மனைக்குத் திரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதற்கிடையில் ராணிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. மன்னன் மணிகண்டனுக்கு முடிசூட்ட தீர்மானித்தான். இதை அறிந்த திவான் விஷம் கொடுத்து மணிகண்டனைக் கொல்ல நினைத்தான். அது முடியாத நிலையில் ராணியை அணுகி "உன் சொந்த மகனிருக்க மணிகண்டனுக்கு முடி சூட்டல் தவறு. நான் சொல்வது போல் கேட்பாயானால் உன் மகனுக்கு முடிசூட்ட முடியும்" என்று சொல்லி சதித் திட்டம் தீட்டினான். மனம் மாறிய இராணியும் "என் மகன் முடிசூட்டிக் கொள்ள நான் எதுவும் செய்யத் தயார்" என்று கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திவானின் திட்டப்படி ராணி தலைவலியால் அவதிப்படுவதாக நடித்தாள். திவானால் அனுப்பப்பட்ட மருத்துவர் "புலிப்பால் ஒன்றினால் தான் இந்நோய் குணமாகும்" என்று சொன்னர். புலிப்பால் கொண்டு வருவது அசாத்தியம் என்று அறிந்த மன்னன் தன் ராணியின் நலம் பொருட்டு புலிப்பால் கொண்டு வருபவருக்கு தன் ராஜ்யத்தில் பாதியைக் கொடுப்பதாக பறையறிவித்தான். காட்டுக்குச் சென்று திரும்பியவர்கள் "புலிகளைக் கண்டோம், ஆனால் புலிப்பால் கிட்டவில்லை" என்று கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துக்கத்துடன் இருந்த மன்னனிடம் "நான் இருக்கும் போது நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் போய் புலிப்பால் கொண்டு வருகிறேன்" என்றான். அதற்கு மன்னன் "நீ சிறுவன் போக வேண்டாம்" என்றார். மணிகண்டனோ "என் தாயின் நலம் காக்க நான் அவசியம் போய் புலிப்பால் கொண்டு வருவேன். என்னைப் போய்வர அனுமதியுங்கள்" என்றான். மணிகண்டனின் நிர்ப்பந்தத்தின் பேரில் அரை மனத்தோடு மன்னன் மணிகண்டனைக் காட்டுக்குச் செல்ல அனுமதித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலிப்பாலுக்காக காட்டுக்குள் சென்ற மணிகண்டனுக்கு சிவபெருமானால் அனுப்பப்பட்ட பஞ்ச பூதங்கள் துணையாகச் சென்றன. நரைநோயால் பாதிக்கப்பட்ட தேவர்கள் அமுதம் உண்டு குணமானது கண்டு ஆத்திரம் அடைந்த மகிஷி தேவலோகம் சென்று தேவர்களுக்கு கொடும் தொல்லைகள் கொடுக்கலானாள். அதை அறிந்த மணிகண்டன் அங்கு சென்கு மகிஷியை தூக்கி பூமியில் எறிய மகிஷி அழுதையாற்றின் கரையில் வந்து விழுந்தாள். அவளுடன் போரிட்டு மணிகண்டன் மகிஷியைக் கொன்று தன்னுடைய அவதார நோக்கத்தினை நிறைவேற்றிவிட்டு புலிப்பால் பெறும் பொருட்டு புலிகளைத் தேடியலைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகிஷியைக் கொன்ற நன்றிக்கடனுக்காக தேவர்கள் மணிகண்டனை வணங்கினர். சிவபெருமான் அவன் முன் தோன்றி அவனுக்கு வாழ்த்துக் கூறி இந்திரன் ஆண் புலியாகவும் தேவர்கள் பெண் புலிகளாகவும் வடிவெடுப்பார்கள் என்றும் மணிகண்டன் புலி மீது அமர்ந்து மாளிகைக்குச் செல்லலாம் என்று கூறி மறைந்தார். பெண் புலிகள் புடைசூழ ஆண் புலி மீது மணிகண்டன் வருவதைப் பார்த்த மக்கள் வியப்பும் அச்சமும் கொண்டு நடுங்கி இங்குமங்கும் ஓடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலி மீதமர்ந்து மணிகண்டன் வருவதை தூரத்திலிருந்து பார்த்து அதிசயித்த அரசன் இவன் சாதாரண மனிதனல்ல. பன்னிரெண்டு வயது இன்றுடன் முடிகிறது. அவன் யார் என்று இன்று தெரியும் என்று நினைத்து மாளிகை முற்றத்திற்கு வந்தான். மணிகண்டன் தன் தந்தையைப் பார்த்ததும் புலிமீதிருந்து இறங்கி "தந்தையே நான் புலிகளைக் கொண்டு வந்திருக்கிறேன். உடனடியாக பாலைக் கறந்து தாயின் நோய் தீர்த்து புலிகளை அனுப்புங்கள்" என்றான்.

மன்னன் மணிகண்டன் யார் என்று அறிந்துகொண்டு அவன் காலில் விழுந்து வணங்கி இனியும் தன்னைச் சோதிக்க வேண்டாமென்றும், மணிகண்டன் காட்டுக்குச் சென்ற பின் அங்கு நடந்த சதித்திட்டத்தைத் தான் தெரிந்துகொண்ட தாகவும் தன்னை மன்னித்தருளி புலிகளை அனுப்பிவிடுமாறும் கேட்டுக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிகண்டனும் "மன்னிப்பதற்கு எதுவுமில்லை. எல்லாம் என் இச்சைப்படியே நடந்துள்ளன. நான் பூமியில் எதற்காகப் பிறந்தேனோ அந்த வேலை முடிந்துவிட்டது. இனி நான் தேவலோகம் செல்கிறேன்" என்றான். மன்னன், பகவானே! தாங்கள் எங்களுடன் இருந்ததன் நினைவாக தங்களுக்கு ஒரு கோயில் கட்ட நினைக்கிறோம். கோவில் கட்ட வேண்டிய இடத்தை எங்களுக்குக் காட்ட வேண்டுமென வேண்டிக்கொண்டான். மணிகண்டன் ஒரு அம்பை எடுத்து எய்து இந்த அம்பு எங்கு போய் விழுகிறதோ அங்கு கோயில் எழுப்புங்கள் என்று கூறி மறைந்தான். அந்த அம்பு சபரிமலையில் போய் விழுந்தது. அங்கு பதினெட்டு படிகளுடன் கிழக்கே நோக்கி மணிகண்டனுக்கும் பக்கத்தில் மாளிகைப் புறத்தம்மனுக்கும் கோவில்கள் கட்ட முடிவெடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிகண்டன் கட்டளைப்படி அகத்திய முனிவரின் ஆலோசனையுடன் இராஜசேகரப் பாண்டியன் ஊண் உறக்கமின்றி தானே மேற்பார்வைசெய்து சபரிமலையில் பதினெட்டுப் படியோடு கூடிய அழகிய கோயிலைக் கட்டினான். ஆண்டுதோறும் லட்சோப லட்சம் மக்கள் ஜாதி மத பேதமற்று மாலை அணிந்து 41 நாட்கள் கடும் விரதம் அனுசரித்து ஐயனின் பூஜைக்குரிய நெய் நிரப்பிய தேங்காய், பூஜைப் பொருள்கள் அடங்கிய ஒரு முடியும், நடந்து செல்லும் போது வழியில் தேவைப்படும் உணவுப் பொருள்கள் அடங்கிய மற்றொரு முடியுமான இருமுடிக்கட்டுடன் ஐயப்பன் நாமம் சொல்லி பம்பை நீராடி சபரிமலை அடைந்து புனி பதினெட்டுப் படி ஏறி ஐயப்பன் அருள் பெற்று வருகிறார்கள். ஆண்டு தோறும் மகர சங்கராந்தி தினத்தன்று ஐயப்பன் பக்தர்களுக்கு ஜோதி உருவில் காட்சியளித்து ஆசி அளிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
"ஸ்வாமியே சரணம் ஐயப்பா"
ஸ்ரீ கணேச ஸ்ரீ சாரதா குருப்யோ நம:

# மாலை அணியும் முறைகள்

சபரிமலை தரிசனத்திற்குச் செல்லும் பக்தர்கள் ஒரு மண்டலம் முன்னதாக, அதாவது கார்த்திகை மாதம் முதல் தேதியே முத்திரை மாலையான உருத்திராட்சம், துளசிமணி இவைகளில் ஒன்றைக் குருநாதர் மூலம் தெய்வ சந்நிதியிலோ அல்லது வீட்டிலோ பூஜை செய்து அணிந்து கொள்ளலாம். மாலை அணியும் முன் தாய், தந்தையரை வணங்கி மாலை அணிந்து கொள்ள வேண்டும். மலை சென்று வந்தவர்கள் குருவாகக் கிடைக்காவிட்டால் ஆலயம் சென்று கடவுள் பாதத்தில் மாலையை வைத்து அர்ச்சகரிடம் தட்ஷிணை கொடுத்து, அர்ச்சனை செய்து தாய், தந்தையரை வணங்கி, அர்ச்சகரிடமிருந்து மாலையை வாங்கி ஐயப்பனையே குருவாக நினைத்தும் மாலையைத் தரித்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை அணிந்து கொள்ளும் போது...

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம்
குரு முத்ராம் நாமாம்யஹம்
வனமுத்ராம் நமாம்யஹம்
வனமுத்ராம் சுத்த முத்ராம் ருத்ர
முத்ராம் நமாம்யஹம்
சாந்த முத்ராம் சத்திய முத்ராம்
வ்ருத முதராம் நமாம்யஹம்
சபரியாஸ்ரம சத்யனே முத்ராம்
பாது ஸதாபதிமே
குருதஷிணயா பூர்வம் தஸ்யாது
அநுக்ரஹ காரிணே
சரணாகதே முத்ராக்யாம் த்வன் முத்ராம்
பக்த முத்ராம் நமாம் யஹம்
சின்முத்ராம் கேசரிமுத்ராம் பத்ர முத்ராம் தாராயாம்யஷம்
சபரியாசல முதராயை நமஸ்துப்யம்
நமோ நம
தீபா நந்த்ரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி

இதைச் சொல்லிச் சரணம் கூப்பிட்டுப் பின் மாலை அணிந்து கொள்ள வேண்டும்.

# மாலை கழற்றுவதற்கான மந்திரம்

அபூர்வம் மசலா ரோஹி - திவ்யதர்சன காரண
ராஸ்த்ரு முத்ராத் யாஹாதேவ - தேஹோி மோசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதி தோத்திரங்கள்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித ஸுத்ர
வாமனரூபமஹேஸ்வவரபுத்ர
விக்ன விநாயக பாதநமேஸ்தே
ஓம் கன்னிமூல கணபதி பகவானே
சரணம் ஐயப்பா

## பாஹி பாஹி

பாஹி பாஹி கிஜானனா பார்வதி புத்ரா கஜானனா
மூஷிகவாஹன கஜானனா-மோதஹஸ்தா கஜானனா
சாமரகர்ண கஜானனா விளம்பித சூத்ரா கஜானனா
வாமன ரூபா கஜானனா மஹேஸ்வர புத்ரா கஜானனா
விக்ன விநாயக கஜானனா தவபாத நமஸ்தே கஜானனா
(பாஹி)

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

ஆறுமுக வேலவனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் தீர்த்துவைக்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சளிலே செய்திடினும் மண்ணினாலே செய்திடினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
(பிள்ளையார்)

அவல் பொரி கடலையும் அரசி கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணை மூடித் தூங்குவார்
(பிள்ளையார்)

கலியுகத்தின் விந்தைகளை காணவே அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார் (பிள்ளையார்)

## உச்சிப் பிள்ளையார்

உச்சி பிள்ளையார் கோவில் கொண்ட இடம்
திருச்சி மலையினிலே...
நம் அச்சம் நீங்கவும் ஆனந்தம் பெருகவும்
அமர்ந்தார் மனதினிலே..
உச்சி பிள்ளையார் கோவில் கொண்ட இடம்
திருச்சி மலையினிலே...
நம் அச்சம் நீங்கவும் ஆனந்தம் பெருகவும்
அமர்ந்தார் மனதினிலே..

சச்சிதானந்த சற்குருவாகிய நிமலன்
துதி தந்தையானபின் தாயுமான திரு நகரன்
அச்சுதன் மனம் அன்பினால் மகிழ் மருகன் (2)
எங்கள் ஆனை முகம் கொண்ட ஆதிநாதனாம் இறைவன்

அந்த உச்சி பிள்ளையார் கோவில் கொண்ட இடம்
திருச்சி மலையினிலே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் அச்சம் நீங்கவும் ஆனந்தம் பெருகவும்
அமர்ந்தார் மனதினிலே..

பாடுதலும் அடி பரவுதலும் தொழிலாகும்
உனை நாடுதலும் அருள் நண்ணுவதும் நினைவாகும்

பாடுதலும் அடி பரவுதலும் தொழிலாகும்
உனை நாடுதலும் அருள் நண்ணுவதும் நினைவாகும்
கூடுதலும் கரம் கூப்புவதும் நமதெண்ணம்
கூடுதலும் கரம் கூப்புவதும் நமதெண்ணம்
வினை ஓடுவதும் பகை ஒடுங்குதலும் இனி திண்ணம்

அருள் உச்சி பிள்ளையார் கோவில் கொண்ட இடம்
திருச்சி மலையினிலே...
நம் அச்சம் நீங்கவும் ஆனந்தம் பெருகவும்
அமர்ந்தார் மனதினிலே..
உச்சி பிள்ளையார் கோவில் கொண்ட இடம்
திருச்சி மலையினிலே...
நம் அச்சம் நீங்கவும் ஆனந்தம் பெருகவும்
அமர்ந்தார் மனதினிலே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பிக் கணேசன்

தும்பிக்கணேசனைப் பாடுங்கள்
தோப்பு கரணங்கள் போடுங்கள்
நம்பி அவன் கோயில் கூடுங்கள்
நல்ல மலர்மாலை சூடுங்கள் (தும்பிக்)

பால்பழம் தேங்காய் அவல் அப்பம்
படைத்து வேண்டுங்கள் விண்ணப்பம்
மூலப்பொருளாய் முன்வருவான்
ஊழ்வினை நீங்கி சுகந்தருவான் (தும்பிக்)

அறுகு தாமரை மந்தாரை
அலரி சண்பகப் பூ அல்லி
நறிய பூவினை திருவாத்தி
நந்தி மல்லிகை புனைந்தேத்தி (தும்பிக்)

வக்கிர துண்டா உமைபாலா
வல்லபை நாதா சிபரூபா
விக்கின ராஜா கஜஹனா
விநாயகா எனப் புகழ் பேசி (தும்பிக்)

கல்வியும் செல்வமும் அகவாழ்வும்
கனத்த வீரமும் தந்திடுவான்
வல்லினைத் துன்பம் தீர்த்திடுவான்
மலரடி தன்னில் தேர்த்திடுவான் (தும்பிக்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்ப பம்மதா தெய்ய தெய்யனுக்கு

பம்ப பம்மதா தெய்ய தெய்யனுக்கு
தின்னாக்கு நகுர்திம் பஜன்கரே...
உடனித்த நகுர்திமி பித்தாம் பித்தாம் தோம்
தெய் தெய் கணபதி நாம்சதா (2)
திம்மி திரகடக் திம்மிகிரகடக் திக்கித் தாளத் திமிக்கிட
தகிர்த தகிர்த தல தபோடுதான் (2)
உடனித்த நகுர்திமி பித்தாம் பித்தாம் தோம்
தெய் தெய் கணபதி நாம்சதா (1)

அபறு வாசுவை கரம்பாகிதி
அகேநாம்கது கணராஜா
தாளமந்திர வகுப்தாம்சத்
துறமண்டலகி துறவாஜா
பம்ப பம்மதா தெய்ய தெய்யனுக்கு
தின்னாக்கு நகுர்திம் பஜன்கரே
உடனித்த நகுர்திமி பித்தாம் பித்தாம் தோம்
தெய் தெய் கணபதிநாம்சதா (1)

வேணு வாசரே! அமிர்தகுண்டலிக்கு
தறிக்கிட தறிக்கிட தவாற் கஜா (2)
நாருததுன்புறு வைணவ ஜாகே
நாரத கணமே இபசர்ஜா (2)
திம்மி கிரகடக திம்மி கிரகடக் திக்கித் தாளத் தமிக்கிட
தகிர்த தகிர்த தல தபோடுதான் (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனித்த நகுர்திமி பித்தாம் பித்தாம் தோம்
தெய்தெய் கணபதி நாம்சதா

அபறுவாசுவை கரம்வாகிதி த்ரமி
த்ரிமி த்ரிமி மிருதங்கா (2)
நவாப்பூ சாரங்கு சித்தாரி கிளறி
அபறுவாசுபை முகர்சிங்கா (2)
பம்ப பம்மதா தெய் தெய்யனுக்கு
தின்னாக்கு நகுர்திம் பஜன்கரே
உடனித்த நகுர்திமி பித்தாம் பித்தாம் தோம்
தெய் தெய் கணபதி நாம்சதா (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் தோத்திரம்

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

மண்ணினைச் சுமந்தவா ஓம் நமசிவாய
நஞ்சினைக் குடித்தவா ஓம் நமசிவாய
கயிலையில் அமர்ந்தவா ஓம் நமசிவாய
கங்கையைத் தரித்தவா ஓம் நமசிவாய
தாண்டவம் புரிந்தவா ஓம் நமசிவாய (என்)
தாயுமாகி வந்தவா ஓம் நமசிவாய
விந்தைகள் புரிந்தவா ஓம் நமசிவாய (என்)
சிந்தையுள் நிறைந்தவா ஓம் நமசிவாய

# தில்லை அம்பல நடராஜா

தில்லை அம்பல நடராஜா உன்
திருவருள் வேண்டும் சிவராஜா
திருநீலகண்ட ஜெகதீசா
தினமும் தொழுவேன் மகாதேவா (தில்லை)

கயிலையில் வாழும் கைலாசா என்
கருத்தினில் வந்திடு சுகவாசா
தோடணி செவியுடை பெருமானே
பீடுடை பிரம்மா புரியோனே (தில்லை)

கங்கை கொண்டாய் நடராஜா
திங்கள் கொண்டாய் சதாசிவா
மங்கை கொண்டாய் மகேசா என்
மனதில் இருப்பாய் மலைவாசா (தில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாய பரமேஸ்வராய

சிவாய பரமேஸ்வராய சசி சேகராய நம ஓம் //
பவாய குணசம்பவாய சிவ தாண்டவாய நம ஓம் //
ஸர்வாய ஸர்வேஸ்வராய விஸ்வேஸ்வராய நம ஓம் //
லோகாய லோகேஸ்வராய ரிஷிபத் பஜாய நம ஓம் // (சிவாய)

# கங்கை அணிந்தவா

கங்கை அணிந்தவா கண்டோர் தொழும் விலாசா
சதங்கை ஆடும் பாதவினோதா லிங்கேஸ்வரா
நின்தாள் துணை நீதா

தில்லையம்பல நடராஜா செழுமை நாதனே பரமேசா//
அல்லல் தீர்த்தாண்டவா வா வா அமிதானவா//(தில்லை)

எங்கும் இன்பம் விளங்கவே அருள் உமாபதி//
எளிமை அகல வரம் தா வா வா வளம் பொங்கவா//(தில்லை)

பலவித நாடும் கலை ஏடும் பணிவுடன் உனையே துதி பாடும் //
- கலையலங்கார பாண்டிய ராணி நேசா//

மலையின் வாசா மங்கா மதியானவா (தில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமசிவாய நமசிவாய

பெ: நமசிவாய நமசிவாய ஓம் நமசிவாய//
நமசிவாய நமசிவாய ஓம் நமசிவாய//

ஆ: ஹரஹர சிவனே அருணாசலனே அண்ணா-
- மலையே போற்றி சிவ ஓம் நமசிவாய

சிவ சிவ ஹரனே சோனாச்சலனே
அண்ணாமலையே போற்றி-ஹர ஓம் நமசிவாய

பெ: அனலே நமசிவாயம் - அழலே நமசிவாயம்
கனலே நமசிவாயம் - காற்றே நமசிவாயம்

ஆ: புலியின் தோலை இடையில அணிந்த
புனிதக் கடலே போற்றி- சிவ ஓம் நமசிவாய

கலியின் தீமை யாவும் நீக்கும்
கருணைக் கடலே போற்றி ஓம் நமசிவாய

பெ: புனலே நமசிவாயம் - பொருளே நமசிவாயம்
புகழே நமசிவாயம் - புனிதம் நமசிவாயம்

ஆ : நமசிவாய
பெ : நமசிவாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் நமசிவாய

ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
உலகை ஆளும் இனிய நாமம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
உணர்வை அள்ளும் இனிய கீதம் ஓம் நமசிவாய
அனல் முக நாதனே தினம் உனைப் போற்றிடும்
அருள் நிறை மந்திரம் ஓம் நமசிவாய
அரசிவ யோகமாய் தினம் உனைக் காட்டிடும்
அன்பெனும் மந்திரம் ஓம் நமசிவாய
சிவாய நம சிவாய எனும் நாமம் அது
விடாத வினை தொடாதபடி காட்டும் (ஓம் நடசிவாய)

ஐந்தெழுத்தில் அவதரிக்கும் ஓம் நமசிவாய
அதிசயத்தை மனம் நிறுத்தும் ஓம் நமசிவாய
அருணகிரி ஈசனே சிவமலை வாசனே
அமுதென ஆகுமே என் திருநாமமே
அண்டமாளும் உந்தன் நாமம் சொல்லவே
அஷ்டசித்தி யோகம் வந்து சேருமே
ஓம் நமஹ சிவனே நமஹ (ஓம் நமசிவாய)

எந்த துன்பம் வந்தபோதும் ஓம் நமசிவாய
என்று சொல்ல துயரம் போக்கும் ஓம் நமசிவாய
மந்திர கீதமாய் வந்தொலி செய்யுமே
மாமலை உன்னையும் வணங்கிட வெல்லுமே
பஞ்சபூதம் எந்த நாளும் பேசுமே
உந்தன் நாமம் புனித மள்ளி வீசுமே
ஓம் நமஹ சிவனே நமஹ (ஓம் நமசிவாய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சிவாய நமசிவாய

ஓம் நமசிவாய நமசிவாய ஓம்சிவாய சங்கரா
நமசிவாய ஓம் சிவாய நம சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரனே ஓம் சிவாய சங்கரா
சகலலோக நாயகனே ஓம் சிவாய சங்கரா (ஓம் சிவாய)

ஆடும்பாம்பை அணிந்தவனே ஓம்சிவாய சங்கரா
ஆட்டுவிப்பாய் எங்களை ஓம்சிவாய சங்கரா
கங்கையை தரித்தவனே ஓம்சிவாய சங்கரா
காத்தருள வேண்டுமையா ஓம்சிவாய சங்கரா (ஓம் சிவாய)

பார்வதி தேவனே ஓம் சிவாய சங்கரா
பாததரிசனம் தந்திடுவாய் ஓம்சிவாய சங்கரா
கைலாச வாசனே ஓம் சிவாய சங்கரா
கஷ்டங்களை போக்கிடுவாய் ஓம் சிவாய சங்கரா (ஓம் சிவாய)

பூலோகநாகனே ஓம் சிவாய சங்கரா
பூமிப்பிரபஞ்சனே ஓம் சிவாய சங்கரா
நீலகண்டனே ஓம் சிவாய சங்கரா
நிர்மலா ரூபனே ஓம் சிவாய சங்கரா (ஓம் சிவாய)

நந்தி வாகனனே ஓம் சிவாய சங்கரா
நாக பூசனனே ஓம் சிவாய சங்கரா
தீன தயாளனே ஓம் சிவாய சங்கரா
டிகளரி மணாளனே ஓம் சிவாய சங்கரா
சங்கரா சங்கரா ஓம் சிவாய சங்கரா
சங்கரா சங்கரா ஓம் சிவாய சங்கரா (ஓம் சிவாய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் நமசிவாய சிவாய நம ஓம்

ஓம் நமசிவாய சிவாய ஓம்
அர ஹர சங்கரா நமசிவாய
அனலான தலம் இந்த அருணாசலா
அரஹர சங்கர நமசிவாய (ஓம் நமசிவாய)

ஆகாய தலம் கொண்ட நடனேஸ்வரா
அரஹர சங்கர நமசிவாய (ஓம் நமசிவாய)

நிலமான தலம் கொண்ட ஏகாம்ரேசா
அரஹர சங்கர நமச்சிவாய (ஓம் நமசிவாய)

ஆத்மான ஸ்ரீ கான கஸ்தீஸ்வரா
அரஹர சங்கர நமச்சிவாய (ஓம் நமசிவாய)

நீரான தலம் கொண்ட ஜம்புகேஸ்வரா
அரஹர சங்கர நமச்சிவாய (ஓம் நமசிவாய)

ஓர் அங்க பூதங்கள் அனசிவாய
அரஹர சங்கரா நமச்சிவாய (ஓம் நமசிவாய)

# பிட்டுக்கு மண் சுமந்து

பிட்டுக்கு மண் சுமந்து கங்கைத் தலை சுமந்து
உமையை தன் இடம் சுமந்தவன் - ஈசன்
உமையைத் தன் இடம் சுமந்தவன்!
தில்லையாடும் நடராஜன்
உமையைத் தன் இடம் சுமந்தவன்! (2 முறை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதகணத் தலைவன்! நாட்டியத்தின் முதல்வன்!
கயிலயங்கிரி இறைவன்!
கயிலை வாழும் சிவன்!

சிவன் ஆட, உமை சேர,
சிவன் ஆட, உமை சேர,
ஆனந்த தாண்டவம் அரங்கேற,
உலகாளும் சிவன் ஆட...
அண்ட சராசரம் அசைந்தாட (சிவன் ஆட)

நரம்பினை வீணையின் கம்பியாய் ஆக்கி,
இசையினை மீட்டிய இராவணனே! அவன்
பக்தியை மெச்சி வரம்பல தந்து அருளிய நந்தி வாகனனே!
மலைமகனே! தலைமகனே!
என் உடலில் ஒவ்வொரு அணுவிலும் கலந்தவனே!
(பிட்டுக்கு)

மீனாட்சி... கல்யாண...
மீனாட்சி... கல்யாண... வைபவம் மதுரையில் நடந்தேற!
திருமால் தன் திருத்தங்கை கைகளை பரமனின் கரம்சேர்க்க!
(மீனாட்சி)

வஸ்திரமாய்ப் புலித்தோலினை சார்த்தி
கழுத்தினில் பாம்பினைச் சுற்றியவன்! - இன்று
தேவர்கள் வியந்திடும் திருமுகம் காட்டி
அழகின் இருப்பிடம் ஆகியவன்!
ஈசனவன்! சுந்தரேசனவன்!
ஸ்ரீகாளஹஸ்தியில் வாழ்கின்ற இறைவனவன்! (பிட்டுக்கு)

(மீண்டும் முதல் 8 வரிசைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிந்தா ஹரி கோவிந்தா

கோவிந்த ஹரி கோவிந்தா - கோகுல ரமணா கோவிந்தா
திருப்பதி வாசா - கோவிந்தா
திரு அவதார - கோவிந்தா
திருமால் ஜோதி - கோவிந்தா
தேவ தேவனே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

வைகுண்ட வாசா - கோவிந்தா
மாமகள் நேசா - கோவிந்தா
சக்தி கிரீசா - கோவிந்தா
சாஸ்வத நாதா - கோவிந்தா (கோவிந்தாஹரி)

லட்சுமி பதியே - கோவிந்தா
நவமணிக்கு குகையே - கோவிந்தா
நித்தியச் சுடரே - கோவிந்தா
நீலாஞ்சனா ஹரி - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

கருட வாகனா - கோவிந்தா
கமல நாதனே - கோவிந்தா
பிரணவநாதா - கோவிந்தா
பேரின்பநதியே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

சக்ர தாரியே - கோவிந்தா
சங்கர ராஜா - கோவிந்தா
நித்தன ரூபா - கோவிந்தா
வேதாகமனே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரண நிலவே - கோவிந்தா
பொன்னலங்காரா - கோவிந்தா
ஆரணப் பொருளே - கோவிந்தா
அமலப் பிரகாசா - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

அருள் பிரகாசா - கோவிந்தா
அமர மகேசா - கோவிந்தா
திருச்சர்த்தி ஹரி - கோவிந்தா
திவ்விய நாதனே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

ஓங்கார நாதா - கோவிந்தா
ஓங்கிடும் மலையாய் - கோவிந்தா
வெங்கட வாசா - கோவிந்தா
லோக நாதனே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

புண்ணிய தீர்த்தா - கோவிந்தா
புஸ்கரனீசா - கோவிந்தா
கண்மணி அழகா - கோவிந்தா
கடல்நிற வண்ணா - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

முரளீதரனே - கோவிந்தா
மோகன வண்ணா - கோவிந்தா
கருணைப் பிரகாசா - கோவிந்தா
கலியுக நாதா - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

அருமணி முகிலே - கோவிந்தா
அதிரூப சுந்தரா - கோவிந்தா
திருமணிக் குன்றே - கோவிந்தா
தேவுத்தமரே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவமாலையாய் - கோவிந்தா
உஸ்ண விஸ்னுரா - கோவிந்தா
மணிப்புரம் காத்தாய் - கோவிந்தா
மச்சாவதாரா - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

பாமா ருக்மணி - கோவிந்தா
பாரி நாதனே - கோவிந்தா
ஆலாளி வண்ணா - கோவிந்தா
ஸ்படிக மணியாய் - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

கற்பூர நாயகா - கோவிந்தா
தயாபரா ஹரி - கோவிந்தா
பத்மபாதனே - கோவிந்தா
பரந்தாமா ஹரி - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

## ஆனந்த ஸாகரா

ஆனந்த ஸாகரா முரளீ தரா
மீரா பிரபு ராதே ஸ்யாம வேணு கோபாலா
நந்த யசோதா ஆனந்த கிசோரா
ஜெய் ஜெய் கோகுல பாலா ஜெய் ராஜ கோபாலா

ஹர கோவிந்த மாதவ க்ருஷா
ஹர பாண்டுரங்கா கிருஷ்ணா
ஹரே பாண்டுரங்கா ஹரே பாண்டுரங்கா
ஹரி நாராயண ஹரி நாரயணா க்ருஷ்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலங்கை கட்டி ஓடி...

சலங்கை கட்டி ஓடி ஓடி வாவா எந்தன்
கமலக் கண்ணா ஆடி ஆடி வாவா நின்தன்
பிஞ்சுப் பாதம் தேடி தேடி வாவா உந்தன்
திவ்ய நாமம் பாடிப்பாடி வந்தேன் (சலங்கை)

தேவசி நந்தன ராதா ஜீவன
கேசவா ஹர மாதவா கேசவா ஹர மாதவா
பூதன மர்த்தன பாபவிமோசன
கேசவா ஹரே மாதவா கேசவா ஹர மாதவா
கோகுல பாலனே ஓடி வாவா
கோபால பாலனே ஆடி வாவா (சலங்கை)

கம்ச விமர்த்தன காலிய நர்தத்ன
கேசவா ஹரே மாதவா கேசவா ஹர மாதவா
ஆசிரித வத்சல ஆபத் பாந்தவ
கேசவா ஹர மாதவா கேசவா ஹர மாதவா
ஓங்கார நாதனே ஓடி வாவா
ஆனந்த கீதமே பாடி வாவா (சலங்கை)

அர்ஜுன ரக்ஷ்க அக்ஞான நாசக
கேசவா ஹரேமதவா கேசவா ஹர மாதவா
பாண்டவ ரக்ஷ்க பாவ விநாசன
கேசவா ஹர மாதவா கேசவா ஹரே மாதவா
கீதாம்ருதமே ஓடிவாவா
ஹ்ருதயானந்தமே ஆடி வாவா (சலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோகுலத்துப் பசுக்களெல்லாம்...

கோகுலத்துப் பசுக்களெல்லாம் கோபாலன் குழலைக் கேட்டு
நாலுபடி பால் கறக்குது ராமாரி அந்த மோகனனின் பெயரைச்
சொல்லி மூடி வைத்த பாத்திரத்தில்
மூன்றுபடி நெய்யிருக்குது கிருஷ்ணாரி
ராமாரி ஹரி கிருஷ்ணாரி
ஹரி ஹரி ராமாரி ஹரி கிருஷ்ணாரி (கோகுலத்து)

கண்ணனவன் நடனமிட்டு காளிதியை வென்றபின் தான்
கன்னிப் பாம்பில் நஞ்சு இல்லை ராமாரி அவன்
கனியிதழில் பால் குடித்து பூஜதியை கொன்றபின்தான்
கன்னியர்க்கோர் வஞ்சமில்லை கிருஷ்ணாரி
ராமாரி ஹரி கிருஷ்ணாரி
ஹரி ஹரி ராமாரி ஹரி கிருஷ்ணாரி (கோகுலத்து)

குளத்தில் மூழ்கி குளிக்கையிலே
கோவிந்தன் பெயரைச் சொன்னால்
கழுத்தில் உள்ள தாலி மின்னுது ராமாரி சேலை
திருத்தும் போது அவன் பெயரை
ஸ்ரீரங்கா என்று சொன்னால்
அழுத்தமான சுகமிருக்குது கிருஷ்ணாரி
ராமாரி ஹரி கிருஷ்ணாரி
ஹரி ஹரி ராமாரி ஹரி கிருஷ்ணாரி

படிப்படியாய் மலையில் ஏறி பக்திசெய்தால் துன்பமெல்லாம்
பொடிப்பொடியாய் நொறுங்குதடி ராமாரி அடி
படிப்பில்லாத ஆட்கள் கூட பாதத்திலே போய் விழுந்தால்
வேதத்துக்கே பொருள் விளங்குது கிருஷ்ணாரி
ராமாரி ஹரி கிருஷ்ணாரி (கோகுலத்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர் பாடி...

ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப் போல்
மாயக் கண்ணன் தூங்குகிறான் தாலேலோ
அவன் வாய் நிறைய மண்ணை உண்டு
மண்டலத்தைக் காட்டியபின்

ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ
ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ (ஆயர்பாடி)

பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னம்வைத்து
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ
அந்த மந்திரத்தில் அவன் உறங்க மயக்கத்திலே இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ (ஆயர்பாடி)

நாகபடம் மீதில் அவன் நர்த்தனங்கள் ஆடியபின்
தாகமெல்லாம் தீர்த்துக் கொண்டான் தாலேலோ
அவன் மோன நிலை கூட ஒருயோக நிலை போலிருக்கும்
யார் அவனைத் தூங்க விட்டார் ஆராரோ
யார் அவனைத் தூங்கவிட்டார் ஆராரோ (ஆயர்பாடி)

கண்ணன் அவன் தூங்கிவிட்டால் காசினியே தூங்கிவிடும்
அன்னையரே துயில் எழுப்ப வாரீரோ
அவன் பொன்னழகை பார்ப்பதற்கும்
போதை முத்தம் கேட்பதற்கும்

கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ (ஆயர்பாடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதை சொன்ன கண்ணன்

கீதை சொன்ன கண்ணன் வண்ணதேரில் வருகிறான்
கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகிறான்
வள்ளல் வருகிறான் அன்பு வள்ளல் வருகிறான்
வருகிறான், வருகிறான், வருகிறான் *(கீதை)*

நீலமேனி கோலம்காண கண்கள் மறுக்குமோ அவன்
நிமிர்ந்த தோளும் விரிந்த மார்பும் நெஞ்சம் மறக்குமோ
வீரன்வடிவும் மீசை அழகும் திருஷ்டி ரகசியம் - அவன்
பாரதப்போர் நடத்திவைத்த யுக்தி அதிசயம் -
அது முகதிரகசியம் *(கீதை)*

அல்லிக்கேணி குளத்தின் அருகில் வள்ளல் இருக்கின்றான்
அன்பு கொண்டு வருபவர்க்கு ஒன்று உரைக்கின்றான் - திரு *(2)*

சொல்லும் அந்த எட்டெழுத்தில் சொர்க்கம் தோன்றுதே
சொல்ல சொல்ல ஐயன் தோற்றம் வானில் நீண்டதே
விஷ்வரூபம் தோன்றுதே *(கீதை)*

பார்த்தனுக்கு பாடம் சொன்ன கீர்த்தன் வருகிறான்
பசித்தவர்க்கு விருந்தளிக்க அமுதும் கொணர்கிறான்
காப்பதற்கு கையில் ஏந்தும் சங்கு சக்கரம் - அவன்
கரங்களுக்கு விளைவுதானே பிரம்மசூத்திரம்
நான்கு வேத சாஸ்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிந்தா கோவிந்தா

கோவிந்தா கோவிந்தா கோகுல ரமணா கோவிந்தா
ஜெய்ஹிந்தா ஜெய்ஹிந்தா ஜெய ஜெயராம ஜெய்ஹிந்தா

குழலிசையாலே கோவிந்தா மாடுகள் தன்னை கோவிந்தா
மேயத்தவன் நீயே கோவிந்தா மாதவ ராஜா கோவிந்தா
(கோவிந்தா)

நச்சுப் பாம்பில் கோவிந்தா நடனம் புரியும் கோவிந்தா
நல்லவர் யாவர்க்கும் கோவிந்தா நலமே அருள்வாய் கோவிந்தா

பாண்டவர் துயரம் கோவிந்தா தீர்த்தவன் நீயே கோவிந்தா
திரௌபதை மானம் கோவிந்தா காத்தவன் நீயே கோவிந்தா
(கோவிந்தா)

பாரதப் போரில் கோவிந்தா தர்மத்தை வளர்த்தாய் கோவிந்தா
கீதை கொடுத்த கோவிந்தா சிந்தை நிறைந்த கோவிந்தா

ராதா கிருஷ்ணா கோவிந்தா தர்மத்தை வளர்த்தாய் கோவிந்தா
மாயக் கண்ணா கோவிந்தா மலரடி தொழுதோம் கோவிந்தா
(கோவிந்தா)

பாமா ருக்மணி கோவிந்தா பரந்தாமனே கோவிந்தா
சங்கு சக்கரம் கோவிந்தா சங்கடம் தீர்க்கும் கோவிந்தா

தேவகி மைந்தா கோவிந்தா திருபடி சரணம் கோவிந்தா
மீரா பாடிடும் கோவிந்தா கிருஷ்ணா முகுந்தா கோவிந்தா
(கோவிந்தா)

நீலநிறமே கோவிந்தா நின் திருமேனி கோவிந்தா
நாராயணனே கோவிந்தா பாராயணமே கோவிந்தா
(கோவிந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன் எங்கள் எண்ணனாம்

கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்

குழலினாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்
கூட்டமாகக் கோபியர்
கூட ஆடும் கண்ணனாம்

மலைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்
நச்சுப் பாம்பு மீதிலே
நடனமாடும் கண்ணனாம்

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்
தூது சென்ற பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச் சின்ன பாதம் வைத்து

*சின்னச் சின்ன பாதம் வைத்து*
*கண்ணா நீ வா வா மணி*
*வண்ணா நீ வாவா*
*வண்ண வண்ண உடை எடுத்து*
*கண்ணா நீ வா வா மணி*
*வண்ணா நீ வா வா.* (சின்ன)

*மல்லிகை முல்லை மலரால்*
*அர்ச்சனை செய்தோம் வாவா*
*மாதவனே மாதவனே*
*கேசவனே கேசவனே*
*யாதவனே நீ வா வா*
*கண்ணா நீ வா வா மணி*
*வண்ணா நீ வா வா*

*திரௌபதை மானம் காத்தவனே*
*அடியார் கருளிடவாவா*
*மாதவனே மாதவனே*
*கேசவனே கேசவனே*
*யாதவனே நீ வா வா*
*கண்ணா நீ வாவா மணி*
*வண்ணா நீ வா வா*

*கண்ணில் தெரியும் காட்சி எல்லாம்*
*கண்ணா உன் திருவுருவம்*
*மாதவனே மாதவனே*
*கேசவனே கேசவனே*
*யாதவனே நீ வாவா*
*கண்ணா நீ வா வா மணி*
*வண்ணா நீ வா வா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லட்சுமி ரமணா நாராயணா

ஸ்ரீ லட்சுமி ரமணா நாராயணா
ஓம் அனந்தா நாராயணா

ராம கிருஷ்ண கோவிந்த நாராயணா (2)
நாராயணா ஹரி நாராயணா (2)
(ரா)

ஸ்ரீ லட்சுமி ரமணா நாராயண (2)
ஹரி ஓம் அனந்தா நாராயணா (2)
வைகுண்ட புரவாசா நாராயணா (ரா)

தேவகி நந்தன வேணு விலாசா
கருணாஸாகர தீன தயாளா

# கோவிந்த ஜன கோபால

கோவிந்த ஜய கோபால ஜய ஜய
ராதா ரமண ஹரி கோவிந்த ஜய ஜய (கோவி)

ராதா கிருஷ்ண ஜய குஞ்ஜ வினாரி
கருணா சாகர கிருஷ்ண முரளிதரா (கோவி)

சங்கு சக்ர பீதாம் பரதாரி
முரளிதர கோவர்த்தன தாரி (கோவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதர் முடி மேலிருக்கும்...

நாதர் முடி மேலிருக்கும் நல்ல பாம்பே
உனக்கு நல்ல பெயர் வைத்தவர் யார் சொல்லு பாம்பே
ஆதி சிவன் தலை அமர்ந்த ஆணவமா
அவன் அங்கமெல்லாம் விளையாடும் தைரியமா
(நாதர் முடி)

ஊர் கொடுத்த பால் குடித்து உயிர் வளர்ந்தாய்
பால் உண்ட சுவை மாறும் முன்னே நன்றி மறந்தாய்
வஞ்ச மற்ற தொண்டனுக்கே நஞ்சு கொடுத்தாய்
பெயருக்குத் தகுந்தாற்போல் மாறிவிடு
எங்கள் பிள்ளையை மறுபடியும் வாழவிடு
நெஞ்சம் மாறிவிடு பிள்ளையை வாழவிடு
நெஞ்சம் மாறி விடு பிள்ளையை வாழவிடு

சங்கமர்ந்தொருமுத்தமிழ் பாடிய சங்கரன் மீதினில் ஆணை
சங்கப் புலவர்கள் நாவிலடங்கிய செந்தமிழ் மீதினில் ஆணை
மங்கலக் குங்குமம் மஞ்சம் நிறைந்த சங்கரி மீதினில் ஆணை
மாதொரு பாகன் சூடியநாக பாம்பே உன்மேல் ஆணை
தேவன் மீதில் ஆணை அவன் திருவடி மீதும் ஆணை
திருமறை மீதில் ஆணை என் திருநாவின் மீதும் ஆணை
மண்மேல் ஆணை சொல்மேல் ஆணை
என்மேல் ஆணை உன்மேல் ஆணை (நாதர் முடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகராஜா தோத்திரங்கள்
## ஆடுராஜா

ஆடுராஜா பிரபு நாகராஜா எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரப நாகராஜா எங்கள்
ஐயப்பன் பேரைச் சொல்லி பாடு ராஜா

சரண கோஷம் போட்டுவரும் பக்தரபாரு
சன்னதியை நாடிவரும் கூட்டத்த பாரு
ஐயப்பனை பாடும் கன்னி சாமியப்பாரு
காட்டில் கருணையுடன் வழி நமக்கு கொடுத்திடும் பாரு

அழைக்கட்டுமா சுவாமி அழைக்கட்டுமா
இந்த ஐயப்பன் பஜனைக்கு அழைக்கட்டுமா
இந்த பக்தர்கள் குறை தீர்க்க அழைக்கட்டுமா
நம்ம சுவாமிமார்கள் முகம் பார்க்க அழைக்கட்டுமா

ஓடிவா ஐயப்பா ஓடிவா சாமி
நீ ஓடிவா ராஜா நீ ஓடிவா கண்ணா
உன் சன்னிதானம் தான் கடந்து ஓடிவா சாமி
உன் 18 ஆம் படி தாண்டி ஓடிவா சாமி
பம்பா நதிகடந்து ஓடிவா சாமி
அழுதா நதிகடந்து சாமி
இந்த 18 படி தாண்டி ஓடிவா சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் தோத்திரங்கள்

## அம்மா முத்துமாரி

அம்மா முத்துமாரி எங்கள் அழகு முத்துமாரி
ஆனந்தமாய் வீற்றிருப்பாள் அன்னை முத்துமாரி (அம்மா)
எங்கும் நிறைந்திருப்பாள் எங்கள் முத்துமாரி
இதயச் சுமையை குறைத்திடுவாள் எங்கள் முத்துமாரி
(அம்மா)

மஞ்சள் முகத்தழகி எங்கள் முத்துமாரி
மங்காத தீபமவள் எங்கள் முத்துமாரி (அம்மா)
வேப்பிலைக் காரியவள் எங்கள் முத்துமாரி
வேடிக்கை காட்டிடுவாள் எங்கள் முத்துமாரி (அம்மா)
உலகனைத்தும் காப்பவளே எங்கள் முத்துமாரி
உன்பாதம் சரணடைந்தோம் எங்கள் முத்துமாரி (அம்மா)

## அன்னை உருவம்மா

அன்னை உருவமம்மா ஆதிபராசக்தியம்மா
அய்யப்பனை கண்டுவர அருள்வரம் தாருமம்மா
காசியிலே வீற்றிருக்கும் விசாலாட்சி தாயேயம்மா
காந்தமலை நாதனையே காணவரம் தாருமம்மா
காஞ்சியிலே வீற்றிருக்கும் காமாட்சி தாயேயம்மா
கண்கண்ட தெய்வத்தையே காணவரம் தாருமம்மா
மதுரையிலே வீற்றிருக்கும் மீனாட்சி தாயேயம்மா
மணிகண்ட தேவனையே காணவரம் தாருமம்மா
சோற்றாணிக் கரை வாழும் பகவதியே தாயேயம்மா
சண்முகசோதரனை காணவரம் தாருமம்மா
இருக்கன்குடி மாரியம்மா இன்னல்களை தீருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுடிகள் தாங்கிவர அருள் வரம் தாருமம்மா
சமயபுரம் மாரியம்மா சடுதியில் வாருமம்மா
சங்கரன் மைந்தனையே காணவரம் தாருமம்மா
பாளையில் வீற்றிருக்கும் ஆயிரத்தாள் தாயேயம்மா
பம்பையின் பாலனையே காணவரம் தாருமம்மா
வண்ணநகர் வீற்றிருக்கும் பேராட்சி தாயேயம்மா
வன்புலி வாகனனை காணவரம் தாருமம்மா
நெல்லையிலே வீற்றிருக்கும் காந்திமதி தாயேயம்மா
நெய்யபிஷேகம் செய்ய அருள் வரம் தாருமம்மா

## அஞ்சாத செஞ்சடைச்சி

அஞ்சாத செஞ்சடைச்சி மாகாளி அம்மா
ஆதிசிவன் பத்தினியே திரிசூலி (அஞ்சாத)

கொஞ்சம் சதங்கை ஒலி கேட்குதம்மா உன்
கெண்டை கூத்துக்கண்டு மனம் குளிருதம்மா (அஞ்சாத)

செஞ்சடையை அலங்கரிக்கும் நாகமம்மா உன்
தேகமெல்லாம் விளையாடும் நாகமம்மா (அஞ்சாத)

பாலாபிஷேகம் செய்து மாகாளி உந்தன்
பாதம் தனை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)

தேனாபிஷேகம் செய்து மாகாளி உன்
சேவடியை சேவித்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)

செவ்வரளி மாலை போட்டு மாகாளி உனக்கு
செய்திடுவோம் பூஜைகளும் திரிசூலி (அஞ்சாத)

மல்லிகைப்பூ சரம் தொடுத்து மாகாளி உந்தன்
மலரடியைத் தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயபுரத்தாளே மாரியம்மா

சமய புரத்தாளே மாரியம்மா அம்மா
சங்கரியே எங்கள் முன்னே வாருமம்மா } 2
(சமயபுரத்தாளே)

மல்லிகைச் சரம் தொடுத்து மாலையிட்டோம்
அரிசி மாவிளக்கு ஏற்றி வைத்து
பொங்கலும் வைத்தோம்
துள்ளியே எங்கள் முன்னே வாருமம்மா
அம்மா தூயவளே என் தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)

பட்டு பீதாம்பரத்தில் தாவணியும் - உனக்கு
பாவாடை சேலைகளும் கொண்டு வந்தோம்
எட்டுத் திசைகளையும் ஆள்பவளே
அம்மா ஈஸ்வரியே என் தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)

கத்திக் கதறுகிறோம் கேட்கலையோ
தாயே கல்லேதான் உன் மனமும் கரையலையோ
உலகமே ஆடுதம்மா உன் சிரிப்பிலே
எங்கள் உமையவளே தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓசை மணி

ஓசைமணி காளியம்மா ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
சலங்கை யொலி சலசலக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
பட்டாடை பளபளக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
மஞ்சள் முகம் மினுமினுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
தங்கமுகம் தளதளக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
செங்கை நீரும் கிலுகிலுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலிலெழுப்பி ஆடிவாம்மா
மகிழ்ச்சியுடன் சிலுசிலுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
வேதங்கள் முழங்கிடவே ஓடிவாம்மா
வேதனைகள் தீர்த்திடவே ஆடிவாம்மா
செம்பவள பேரழகி ஓடிவாம்மா
செல்வமழை பொழிந்திடவே ஆடிவாம்மா
அருளமுது பருகுவதற்கு ஓடிவாம்மா
ஆசிகளைத் தந்திடவோ ஆடிவாம்மா
ஓசைமணிக்காளியம்மா ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய ஜெய தேவி

ஜெய ஜெயதேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம் (ஜெய ஜெய தேவி)

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம்
துக்கை அம்மனைத் துதித்தால் என்றும்
துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும் அவளை
தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் ஓடும்
சர்வமங்களம் கூடும் (ஜெய ஜெய தேவி)

பொற்கரங்கள் பதினெட்டும் நம்மை
சுற்றிவரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டும்
வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கண்கள் உடையவளே
ஆதிசக்தியவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய் போல் நம்மைக் காப்பவளே (ஜெய ஜெய தேவி)

சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்க கைகளில் தாங்கி நிற்பாள் - அவள்
தங்க கைகளில் தாங்கிநிற்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடி மேல் சூடிநிற்பாள்
கருணைக் கண் கொண்டு பார்த்திருப்பாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள்
மங்கையற் கரசியும் அவளே
திருமகள் கலைமகள் அவளே திருவருள் புரியும்
மலைமகள் அவளே (ஜெய ஜெய தேவி)

முண்டக்கண்ணியும் அவளே அபிராமி அம்மையும் அவளே
ஜெய ஜெய தேவி துர்க்கா சரணம் (ஜெய ஜெய.....)

கனக துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிசக்தி ஆதிசக்தி ஆதிசக்தியே

ஆதிசக்தி ஆதிசக்தி ஆதிசக்தியே
ஏதுசக்தி உன்னை யன்றி காவல்சக்தியே

குங்குமத்தில் குடியிருக்கும் குங்குமசக்தி
மஞ்சளிலே நிறைந்திருக்கும் மங்கள சக்தி
வேப்பிலையில் மறைந்திருக்கும் மூலிகைச்சக்தி
வேண்டுதலைத் தீர்க்கவரும் தாயெனும் சக்தி (ஆதிசக்தி)

புற்றினிலே படமெடுக்கும் பாம்பெனும் சக்தி
பூவுலகை ஆட்சிசெய்யும் அம்மனின் சக்தி
சூலத்தினை ஏந்திவரும் வீரத்தின் சக்தி
வேலனுக்கு வேல் கொடுத்த தாயெனும் சக்தி (ஆதிசக்தி)

ஆதி அந்தம் இல்லாத ஆதியின் சக்தி
ஆதி சிவன் பாதி என வாழ்ந்திடும் சக்தி
சிங்கத்திலே ஏறிவரும் சிம்மத்தின் சக்தி
சிந்தையிலே நிறைந்திருக்கும் தாயெனும் சக்தி (ஆதிசக்தி)

தாலி வரம் தருபவளே தாலியின் சக்தி
காளி என மாறிவரும் உத்தம சக்தி
நாகமென ஆடிவரும் நந்தினி சக்தி
மேகமென மழை பொழியும் தாயெனும் சக்தி (ஆதிசக்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனனி ஜனனி

ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத்தாரணி நீ பரிபூரணிநீ (ஜனனி ஜனனி)

ஒரு மான் மழுவும் சிறு பூம் பிறையும்
சடைவால் குழலும் இடை வாகனமும்
கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே
நின்ற நாயகியின் இடை பாகத்திலே
ஜகன் மோகினி நீ சிம்ம வாகினி நீ (ஜனனி ஜனனி)

சதுர் வேதங்களும் பஞ்ச பூதங்களும்
சன்மார்க்கங்களும் சர்வ கீர்த்தங்களும்
அஷ்ட யோகங்களும் நவயாகங்களும்
தொழும் பூங்கடலே மலைமாமகளே
அலை மாமகள் நீ கலை மாமகள் நீ (ஜனனி ஜனனி)

சொர்ண ரேகையுடன் சுயமாகி வந்த
லிங்க ரூபிணியே மூகாம்பிகையே
பலசேத்திரங்கள் தர்மசாஸ்திரங்கள்
பணிந்தே துவளும் மணி மேத்திரங்கள்
சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ (ஜனனி ஜனனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி

ஓம்சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம்சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம்சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம்சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்

ஸுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே (ஓம்)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச்சிலம்பு சலசல வென்றிட
தாண்டவ மாடித் தயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் என்னை வேண்டிப்பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்தமான ஜோதீஸ்வரூபி
ராஜராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்க வீணை ஏந்தும்

மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமி சொல்லெடுத்து பாடவந்தோம்
அம்மா பாடவந்தோம்
அருள் வாய் நீ இசை தருவாய் நீ
இங்கு வருவாய் நீ நலம் தரவே நீ அம்மா (மாணிக்க...)

நாமணக்க பாடிநின்றால் ஞானம் வளர்ப்பாள்
பூமணக்கப் பூசை செய்தால் பூவை நீ மகிழ்வாய்
(மாணிக்க...)

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள்
எங்கள் உள்ளக் கோயிலிலே உறைந்திருப்பாள்
கள்ள மெல்லாமல் தொழும் அன்பருக்கே
என்றும் அள்ளி அறிவைத் தரும் அன்னையும் நீயே

வாணி சரஸ்வதி மாதவி பாரதி
வாக தீஸ்வரி மாலினி
காணும் பொருளினில் தோன்றும் கலைமணி
வேண்டும் வரம் தரும் தேவி நீ
நான்முகன் நாயகி மோஹன ரூபினி
நான்மறை போற்றிடும் தேவி நீ
வானவர் கமுதே தேனருள் சிந்தும்
கான மனோகரி கல்யாணி

அருள் வாய் நீ இசை தருவாய் நீ
இங்கு வருவாய் நீ நலம் தருவே நீ அம்மா (மாணிக்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பூர நாயகியே

கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்தவல்லி தெய்வயானை அம்மா
விற்கோல வேத வல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே
கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே நாகேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி
கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவம் எல்லாம் தீர்ப்பவளே...

பாவம் எல்லாம் தீர்ப்பவளே.... நல்லவளே தில்லையம்மா
வாடி அடிக்கும் போதினிலே.... ஓடிவரும் காளியம்மா.....
மலைபோல குங்குமத்தில்.....மறைந்தருளும் காளியம்மா
தில்லைகாளி சந்நிதிக்கு வந்தோம் குறை தீருமம்மா....
எங்களுக்கு குறையும் உண்டு
அதனை நான் அழுது சொல்லலாமா..... -2
என்தாயும் நீ இருக்க; உந்தன் செல்ல மகன் வாடலாமா!
காளி மகமாயி கருமாரி அபிராமி என பாடியது
கேட்கவில்லையோ... -2
செல்வங்களும் நற்புகழும்; வந்துவிடும்
மனமதில் நிம்மதியும் தேவையம்மா... 2
தாயே நிம்மதியும் தேவையல்லவா... -1
எங்களுக்கு குறையும் உண்டு அதனை... -1
ஆறுதலடைய யாருமில்லை;
ஆசைவைக்கும் எண்ணமில்லை
ஆணவத்தில் ஆடிவரும் ஜீவனுமில்லை -2
சொந்த பந்தம்யாருமில்லை
சூழும் ஜனம் நல்லதில்லை உண்ணைப்பற்றி
இவ்வுலகில் வல்லதொரு தெய்வம் இல்லை
தடுமாறி திருக்கோயில் வந்தேனம்மா.....
(Speed) அம்மா ஜெகதீஸ்வரி;
உந்தன் குழந்தை என்னை ஆதரி...... -2
நீ வந்து தாயாக எனைத்தாங்கனும்;
உன் மடிமீது தலைவைத்து நான் தூங்கனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலனங்கள் இல்லாமல் மனம் தூங்கனும்
(மனம் தூங்கனும் -2)

எங்களுக்கும் குறையும் உண்டு
அதனை நான் அழுது சொல்லலாமா
வெண்சங்கு நாதமழை; மங்காத மணியோசை;
வெள்ளியங்கிரி முழவதும் உன் ஆட்சியே -2
முத்துமணி பாதங்களில் ரத்தின சலங்கை ஒலி
மொத்தமாய் உனதழகை சொல்லிவிட
ஒது ஒளி; உனைப்பாடும் நாளெல்லாம் தீருநாளம்மா
speed
எனையாளும் தில்லைகாளி; அம்மா உலகாளும் திரிசூலி நீ...
சிவனாடந் தோற்ற எதையும் பொய்யே
அவனாட்டம் தனில் உள்ள சத்தியும் நீயே...
மனம் கனிந்து அருள்வாயே
தில்லைக்காளியே.......(தில்லைக்காளியே-2)
எங்களுக்கும் குறையும் உண்டு
அதனை நான் அழுது சொல்லலாமா.....
என் தாயும் நீ இருக்க உந்தன் செல்லமகன் வாடலாமா
காளி மகமாயி கருமாரி அபிராமி என பாடியது
கேட்கவில்லையா
செல்வங்களும் நற்புகழும்;
வந்துவிடும் மனமதில் நிம்மதியும் தேவையம்மா....-2
தாயே நிம்மதியும் தேவையல்லவா....
எங்களுக்கு குறையும் உண்டு
அதனை நான் அழுது சொல்லலாமா.....
என்தாயும் நீ இருக்க; உந்தன் செல்ல மகன் வாடலாமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பாடல்
# சத்தியம் சிவம் சுந்தரம்...

சத்தியம் சிவம் சுந்தரம் ஆ ஆ ஆ ஆ........
சரவணன் திருப்புகழ் மந்திரம்
அழகன் முருகனிடம் ஆசைவைத்தேன்...ஆஆ....
அழகன் முருகனிடம் ஆசைவைத்தேன்
அவன் ஆலயத்தில் அன்பு மலர் பூசை வைத்தேன்
அன்னல் உறவு கென்றே உடல் எடுத்தேன்;
அவன் அருளைப் பெறுவதற்கே உயிர் வளர்த்தேன்-2 ஆஆ....
அழகன் முருகனிடம் ஆசைவைத்தேன்அவன் ஆலயத்தில்
அன்பு மலர் பூசை வைத்தேன்.....-1
பனி பெய்யும் மாலையிலே பழமுதிர்ச்சோலையிலே ஆ ஆ....
கனி கொய்யும் வேளையிலே....
கன்னி மனம் கொய்து விட்டான்
பன்னிரண்டு கண்ணழகை; பார்த்திருந்த பெண் அழகை
வள்ளல்தான் ஆளவந்தாள்; பெண்மையை வாழவைத்தான்
பெண்மையை வாழவைத்தான் ஆ ஆ ஆ
அழகன் முருகனிடம் ஆசைவைத்தேன்
அவன் ஆலயத்தில் அன்பு மலர் பூசை வைத்தேன்
மலைமேல் இருப்பவனே... மயில்மேல் வருபவனே...
மெய்யுருகப் பாடிவந்தால்; தம்மைதான் தருவானே
அலைமேல் துரும்பானேன்; அனல் மேல் மெழுகானேன்: -2
வையகத்தை தொட்டவுடன்; அழகுக்கு அழகானேன்!
அழகுக்கு அழகானேன்... ஆ ஆ...
அழகன் முருகனிடம் ஆசைவைத்தேன்
அவன் ஆலயத்தில் அன்பு மலர் பூசை வைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடு மயிலே கூத்தாடு மயிலே...

ஆடு மயிலே கூத்தாடுமயிலே!

கதிர்காம கந்தனைக் கூத்தாடு மயிலே...

அருகினில் நின்று அருள்புரியும் குகன் கந்தன்

அருமையாய் அந்தரங்க திருக்குமரன்

கருவிழி வள்ளி மானில் உகந்த குகன் கந்தன்

திருவடி தாங்கி நின்றே ஆடு மயிலே......

ஆடுமயிலே....கூத்தாடுமயிலே...

கதிர்காமகந்தனைக் கூத்தாடுமயிலே... -1

துள்ளி துள்ளி விளையாடும்; பாலமுருகன் கந்தன்

அள்ளி அள்ளி அருள்தரும் சீலமுருகன்

வள்ளியின் கரம்பிடித்த வேலன் முருகன் கந்தன்

திருவடி தாங்கிநின்றே ஆடுமயிலே......

ஆடுமயிலே... கூத்தாடு மயிலே...

நீ ஆடு... விளையாடு... கூத்தாடு மயிலே...

விளையாடு மயிலே......

ஆடுமயிலே... கூத்தாடுமயிலே...

கதிர்காமகந்தனைக் கூத்தாடுமயிலே...

அருகினில் நின்று அருள்புரியும் குகன் கந்தன்... -2

திருவடி தாங்கி நின்றே ஆடுமயிலே...

ஆடு.....விளையாடு! கூத்தாடுமயிலே

கூத்தாடுமயிலே

ஆடுமயிலே கூத்தாடுமயிலே...

கதிர்காமகந்தனைக் கூத்தாடுமயிலே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடி வா முருகா

ஓடிவா முருகா நீ ஓடி வா கந்தா
உமையவள் தன் மகனே ஓடிவா முருகா
(ஓடி வா முருகா)

வள்ளி தெய்வானை யோடு ஓடிவா முருகா
(அரோகரா)

வையம் எல்லாம் காத்திடவே ஆடிவா முருகா
(ஓடி வா முருகா)

கணபதியின் தம்பியே நீ ஓடிவா முருகா
கவலைகளைத் தீத்திடவே ஆடிவா முருகா
(ஓடி வா முருகா)

கதிர்காமக் கந்தனே நீ ஓடிவா முருகா (அரோகரா)
கதிரமலை நாதனே நீ ஆடிவா முருகா (ஓடி வா முருகா)

பழனிமலை முருகனே நீ ஓடி வா முருகா
(அரோகரா)
பழவினையைத் தீர்த்திடவே ஆடிவா முருகா
(ஓடி வா முருகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழனிமலையும், சபரிமலையும்

(வெற்றிவேல் வீரவேல் ஞானவேல் சக்திவேல்)

பால்மணக்குது பழம்மணக்குது பழனி மலையிலே
பள்ளிக்கட்டு நெய்மணக்குது சபரிமலையிலே ஐயா
பால் மணக்குது பழம் மணக்குது பழனி மலையிலே
பள்ளிக்கட்டு நெய் மணக்குது சபரிமலையிலே
அரோஹரா ஓசைகேட்குது சபரிமலையிலே
சரண கோஷசப்தம் கேட்குது சபரிமலையிலே - ஐயா
(பால் மணக்குது பழம் மணக்குது)

காவடிகள் ஆடிவரும் பழனிமலையிலே
பள்ளிக்கட்டு நாடி வரும் சபரிமலையிலே ஐயா
சூரனையே வென்றவரும் பழனிமலையிலே
மஹிஷயை வென்றவனாம் சபரிமலையிலே
(பால் மணக்குது பழம் மணக்குது)

சேவல்கொடி கொண்டவரும் பழனிமலையிலே
புலிக்கொடியை கொண்டவரும் சபரிமலையிலே
(பால் மணக்குது பழம் மணக்குது)

பச்சைமயில் வாகனமும் பழனி மலையிலே
வன்புலி வாகனமும் சபரிமலையிலே ஐயா
(பால் மணக்குது பழம் மணக்குது)

பஞ்சாமிர்த பிரியனாம் பழனி மலையிலே
பாயாசான்ன பிரியனாம் சபரிமலையிலே
பால்மணக்குது பழம் மணக்குது பழனிமலையிலே
பள்ளிக்கட்டு தெய் மணக்குது சபரிமலையிலே
(பால் மணக்குது பழம் மணக்குது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனலில் கருவாகி

கனலில் வருவாகி புனலில் உருவான
கந்தன் ஊர் எந்த ஊர் - 2
கணமும் மறவாமல் தினமும் நினைக்கின்ற
மனிதர்களின் சிந்தை ஊர் - 2

கனலில்...

குன்றங்களில் கோயில் கொண்ட வடிவேலன்
கண்ட சுகம் என்னவோ
தொண்டர் பல பேரும் கொஞ்சும் தமிழ் பாடல்
தந்த சுகம் அல்லவோ

கனலில்...

உருகி அவன் பெயரை உரைக்கும் பலபேரும்
அடையும் பலன் என்னவோ 2
கருகி துயர் ஓட கவலை பறந்தோட
பெருகும் அருள் அல்லவோ

கனலில்...

அழகன் குமரன் நல்லாவினன் குடி தன்னில்
கிழவன் பெயர் கொண்டதேன்
பழகும் தமிழ் பாட்டி ஔவை மூதாட்டி
பழம் நீ எனச் சொன்னதால் - 2
ஞானப் பழம் நீ எனச் சொன்னதால்

கனலில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் முருகா மால் மருகா

வேல் முருகா மால் மருகா வாவா ஷண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வாவா ஷண்முகா

நால்வேதப் பொருளான நாதா ஷண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா ஷண்முகா
செல்லமாக சிலை அனைக்கும் சேயே ஷண்முகா
செங்கதிர்வேல் தாங்கிய என் தேவா ஷண்முகா

ஆறுபடை வீடுடைய ஆண்டவா ஷண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா ஷண்முகா
தேறுதலை தருபவனே தேவா ஷண்முகா
சிங்கார ஓங்கார சீலனே ஷண்முகா

நாறுமாலை யணிமார்பா நாயகா ஷண்முகா
நாதவிந்து கலாநீத நாயகா ஷண்முகா
ஏறுமயில் வாஹணனே ஏந்தலே ஷண்முகா
நீறணிந்தார் வினை போக்கும் நீதமே ஷண்முகா

பாடும்பணி தந்திடுவாய் பண்டிதா ஷண்முகா
பக்தருடன் கூட்டிடுவான் முக்தனே ஷண்முகா
ஆறும் சேவற் கொடியழகா ஆண்டவா ஷண்முகா
அடியார் உள்ளக் குறையமர்ந்த ஆனந்த ஷண்முகா

வீடும் நாடும் நின் திருத்தாள் வேண்டினேன் ஷண்முகா
வீரன் சூரன் உடல் கிழிந்த வேலனே ஷண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா ஷண்முகா
ஒருவன் என் வினை யழித்த உத்தமா ஷண்முகா

(வேல் முருகா...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் பாடல்
## ஆதிமூல நாதனே...

ஆதிமூல நாதனே பால வைரவா
ஆதி சிவன் பாலனே பாலவைரவா
திரிசூல நாதனே பால வைரவா
தில்லை நாதன் பாலனே பாலவைரவா

வடை மாலை தரித்தவரே பால வைரவா
வரம் தந்து பாருமையா பால வைரவா
சுடலை நடனம் ஆடியவா ஞான வைரவா
சுத்திசிவமானவரே ஞான வைரவா

பிள்ளையாரின் தம்பியாரே பாலவைரவா
பிழைகள் எல்லாம் பொறுத்தருள்வாய் பாலவைரவா
வேலவனின் தம்பியரே ஞான வைரவா
வேதனைகள் தீர்த்திடுவாய் ஞான வைரவா

ஐயனாரின் அண்ணரே ஞான வைரவா
ஐயங்களை போக்கிடுவாய் ஞான வைரவா
சுவன வாகனம் கொண்டவரே பால வைரவா
சூழ்ச்சிக்கெல்லாம் ஆனவரே ஞான வைரவா

கந்தர்மடம் மீதமர்ந்த ஞான வைரவா
எம் கவலைகளை தீர்த்திடுவாய் ஞான வைரவா
உன்னடியார் துயர் தீர்த்த பால வைரவா
உடன் இருந்து காத்திடப்பா பால வைரவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரத்தின் சிவப்பொருளே

அகரத்தின் சிவப்பொருளே ஞான வைரவா
ஆலயத்தை காப்பவரே ஞான வைரவா
சூலம் ஏந்தும் தேவனல்லோ ஞான வைரவா
சூழ்ச்சிக்கெல்லாம் ஆனவரே ஞான வைரவா
சாஸ்திரங்கள் சொல்லிடுவாய் ஞான வைரவா
சஞ்சலங்கள் எப்போ தீரும் ஞான வைரவா
கருநாயின் மீதேறி ஞான வைரவா
காத்திடுவீர் என்று சொல்லி ஞான வைரவா
மகாகாளி பங்குசனே ஞான வைரவா
காலை மாலை பாராது ஞான வைரவா
இல்லங்களில் வீற்றிருக்கும் ஞான வைரவா
இம்மை எல்லாம் அகற்றிடுவீர் ஞான வைரவா
சொல்லோணாத் துன்பத்திலும் ஞான வைரவா
நினைந்தும் இல்லை என்கிறோமே ஞான வைரவா
மாலையில்லா எங்கள் மகா ஞான வைரவா
எங்களை நீர் காத்திடுவீர் ஞான வைரவா
வடை மாலை சாத்திடுவோம் ஞான வைரவா
வல்லினையைத் தீர்த்திடுவீர் ஞான வைரவா
எட்டுத் திக்கும் உலாவிவரும் ஞான வைரவா
ஏழ்மை வினை போக்கிடுவீர் ஞான வைரவா
சரணம் சரணம் என்று சொல்வோம் ஞான வைரவா
பாதமலர் சரணம் என்போம் ஞான வைரவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூலமா நாயகன்...

சூலமா நாயகன் வைரவப் பெருமான்
துட்டரை அழிப்பவன் வைரவப் பெருமான்
காலனின் காலன் வைரவப் பெருமான்
கருவினை ஒழிப்பான் வைரவப் பெருமான்

காளித்தா யுடனே வைரவப் பெருமான்
களிநடம் புரிவான் வைரவப் பெருமான்
சூழுலக மெல்லாம் வைரவப் பெருமான்
துணைநின் றான் வைரவப் பெருமான்

வேள்வியின் நாயகன் வைரவப் பெருமான்
வேதத்து நாயகன் வைரவப் பெருமான்
கோள்வளை விதிப்பவன் வைரவப் பெருமான்
குலவீடு மாகமன் வைரவப் பெருமான்

உடுக்கிசைப் பிரியனார் வைரவப் பெருமான்
ஒளிர்பர உடையவன் வைரவப் பெருமான்
கடுத்திடு நடமிடும் வைரவப் பெருமான்
கபாலமொன்றுடையவன் வைரவப் பெருமான்

பற்பல வடிவினன் வைரவப் பெருமான்
பக்தரைக் காப்பவன் வைரவப் பெருமான்
சொற்பதங் கடந்தவன் வைரவப் பெருமான்
சுதந்திர கடவுளே வைரவப் பெருமான்

நெய்வடை பாயாசம் பல்வகை அமுது
நினைந்து படைத்தோம் நின்னடி தொழுது
ஐயனே எங்கணும் உன் குடியிருப்பு
அடைக்கலம் உனக்கே காப்பதுன் பொறுப்பு (சூலமா...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர் தோத்திரங்கள்

## வெற்றிலையில மாலை கட்டுங்க

வெத்தலையில மாலை கட்டுங்க மால கட்டுங்களே உங்க
வேதனையை சொல்லி சொல்லி மால கட்டுக்களே
துளசி இல கொழுந்தெடுத்து கோர்த்து கட்டுங்களே
தோத்திரத்த சொல்லி சொல்லி மாலை கட்டுங்களே
(வெத்தலயில)

கோடி பணம் கேட்பதில்லை மாருதி ராஜா அவன்
கொட்டும் பனி நேரத்திலும் பூத்திடும் ரோஜா
ராம ஜெயம் சொன்னிங்கன்னா வந்து நிற்பானே தினம்
ராம நாம சாமி பேர பாடி நிற்பானே
(வெத்தலயில)

ஆசையெல்லாம் வேரறுக்க அற்புதசாமி அவன்
ஓசை தரும் பணி இருக்கும் வால் கொண்ட சாமி
காத்தடிச்சா புயலடிச்சா கலங்கிடலாமா அந்த
கட்டித்தங்க மனசிருக்க தவிப்பது ஏம்மா (வெத்தலயில)

பொட்டுவச்சு பொட்டுவச்சு பூசை செஞ்சாலே அவன்
எட்டுவச்சு வாசல் கதவ தட்டிடுவானே
மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டெடுத்தாலே அவன்
மெல்ல வந்து தாளமிட்டு கேட்டுப்பானே
(வெத்தலயில)

கும்மி கொட்டி கும்மி கொட்டி கும்மி போடு எங்க
கோமகனாம் மாருதிக்கு சரணங்கள் பாடு
நம்பி வந்து நம்பி நின்று நல்லதைக் கேளு மனம்
வெம்பி வெடிக்க தேவையில்ல நன்மை கையோடு
(வெத்தலயில)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துப்படி ஏறிவந்தேன்

பத்துப்படி ஏறிவந்தேன் ஆஞ்சநேயனே
வெற்றி தர வேண்டுமய்யா ஆஞ்சநேயனே
பக்தியுடன் பாடி வந்தேன் ஆஞ்சநேயனே
முக்திதர வேண்டுமய்யா ஆஞ்சநேயனே
(பத்துப்படி)

கற்றதிந்த கையளவே ஆஞ்சநேயனே உன்னால்
பெற்றதிந்த வாழ்க்கையய்யா ஆஞ்சநேயனே
முத்துமணி மாலையில்லை ஆஞ்சநேயனே
மொத்தத்தில் நான் ஏழையய்யா ஆஞ்சநேயனே
பஞ்சமுக தரிசனமே ஆஞ்சநேயனே கண்ணால்
கண்டுமனம் குளிரவந்தேன் ஆஞ்சநேயனே
(பத்துப்படி)

வஞ்சமற்ற மனம்படைத்தாய் ஆஞ்சநேயனே அதில்
ஆசை விதை ஏன் விதைத்தாய் ஆஞ்சநேயனே
பொய்யுரைத்து வாழ்ந்தறியேன் ஆஞ்சநேயனே என்
மெய்ப்பொருளும் உன் அருளே ஆஞ்சநேயனே
மூஞ்சிருக்கும் நாள் வரைக்கும் ஆஞ்சநேயனே உன்
பேச் செனக்கு வேதமய்யா ஆஞ்சநேயனே
(பத்துப்படி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராம தூதனே

ராம தூதனே ராம தூதனே ராம ராம ராம் ராம்
உன்னைக் காணவே உள்ளம் ஏங்குதே ராம ராம ராம் ராம்
சித்தம் யாவிலும் நித்தம் வாழுதே ராம ராம ராம் ராம்
வெள்ளம் போலவே உள்ளம் பொங்குதே ராம ராம ராம் ராம்

பெற்ற அன்னைக்கும் பெரிய பாரமாய் ராம ராம ராம் ராம்
வாழலாகினேன் வாடலாகினேன் ராம ராம ராம் ராம்
கொட்டும் மழையிலும் கோடைப் பனியிலும்
ராம ராம ராம் ராம்
உந்தன் கோயிலே தஞ்சமாகினேன் ராம ராம ராம் ராம்
எங்கும் உன்னையே எதிலும் உன்னையே ராம ராம ராம் ராம்
கண்டு கொண்டபின் மனிதனாகினேன் ராம ராம ராம் ராம்
(ராம...)

அன்னை தந்தை நீ ஆக்கும் தெய்வம் நீ ராம ராம ராம் ராம்
வெண்ணெய் சாற்றியே உன்னைப் பாடினேன்
ராம ராம ராம் ராம்
பொய்யை நீக்கினேன் மெய்யைப் போற்றினேன்
ராம ராம ராம் ராம்
ஐயன் உன்னருள் ஐயம் நீங்கினேன் ராம ராம ராம் ராம்
நல்லிராவிலும் ஞானதீபமே ராம ராம ராம் ராம்
கண்டுகொண்ட பின் மனிதனாகினேன் ராம ராம ராம் ராம்
(ராம...)

நோயுமின்றி நொடியுமின்றியே ராம ராம ராம் ராம்
எங்கள் சுவாமியைக் காக்க வேண்டும் ராம ராம ராம் ராம்
உந்தன் பக்தனை உண்மை தொண்டனை ராம ராம ராம் ராம்
காக்க வேண்டும் காவல் தெய்வமே ராம ராம ராம் ராம்
மண்ணில் நாங்களே கண்ட மாருதி ராம ராம ராம் ராம்
சந்திர சேகர சுவாமியே ராம ராம ராம் ராம்
(ராம...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தர அனுமான்

சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக் சேவிக்க நலம் தருவான்
அந்தமும் ஆதியும் கடந்து நின்று
அன்பரைக் காத்திட முன்வருவான் (சுந்தர...)

ரகு குலம் காத்திட பெருவீரன்
இராமனுக் கினிய பெருந்தொண்டன்
கலங்கிடும் கலியுக மக்களுக்கு
கலங்கரை விளக்கமாய் வந்திடுவான் (சுந்தர...)

கலங்கரை விளக்காய் அனுமானை
அனுமதினம் பாடி நாம் பணிந்தால்
அட்டா சித்தி கைகூடும்
அல்லல் வினைகள் பறந்தோடும் (சுந்தர...)

தீயதை பாரினில் அழிப்பதற்கு
திரு நிறை பக்தியை வளர்ப்பதற்கு
கலியுகம் தன்னில் தனித்தெய்வம்
சுந்தர அனுமான் அவன் தானே (சுந்தர...)

சனிதோறும் அனுமானைப் பணிந்து நின்றால்
சனியெனும் ஈஸ்வரன் அவன் தானும்
அன்புடன் அவனிடம் கட்டுப்பட்டால்
அன்பான வாழ்வு அவன் தருவான் (சுந்தர....)

பக்தியை வளர்த்திட ராமனையும்
பாரினில் கை கண்ட அரு மருந்து
அரு மருந்தினை நீ அருந்தி
அவன் பிறப்பினை அறிந்திடுவாய் (சுந்தர...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் தோத்திரங்கள்

## கன்னிமூல கணபதியை...

கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு நாங்க
கார்த்திகை முதல் தேதி மாலை இட்டோம்
ஐயப்பா ஐயப்பா என்றே சொல்லி நாங்க
ஆறுவாரம் தானே நோன்பிருந்தோம் *(கன்னி...)*

எங்க குருசாமி துணைகொண்டு அவர் பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியை சுமந்துகிட்டு வந்தோமய்யா
ஆறு படை வீடு சென்று கந்தனையே வேண்டிக்கிட்டு
யாத்திரையாய் நடந்து வந்தோமய்யா *(கன்னி...)*

குருவாயூர் கோயில் முதல் கன்னியாகுமரி வரை
தரிசனமே செய்துவிட்டு வந்தோமய்யா
எருமேலிபேட்டை துள்ளி வாவரையே வேண்டிகிட்டு
பேரூர் தோட்டில் பொரிபோட்டு வந்தோமய்யா
*(கன்னி...)*

காளைகட்டி அஞ்சல் வந்து அழுதாமலை ஏறிக்கிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமய்யா
பம்பையிலே குளிச்சிப்புட்டு பாவங்களைத்தொலைச்சுப்புட்டு
சபரிமலை ஏறிக்கிட்டு வந்தோமய்யா நாங்கள்
நீலிமலை ஏறிக்கிட்டு வந்தோமய்யா *(கன்னி...)*

பதினெட்டாம் படிதாண்டி பகவானே உனைவேண்டி
கற்பூர ஜோதிதனைக் கண்டோமய்யா
மகரஜோதியைக் கண்டு மனமாரச் சரணம் போட்டு
மணிகண்டா உன் மகிமை அறிந்தோமய்யா (2) *(கன்னி...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் சரணம்

பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
பகவதி சரணம் பகவான் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
அகமும் குளிரவே அழைக்கிறோம்
சரணம் சரணம் ஐயப்பா
பகலும் இரவும் இல்லாமலே உன்நாமமே
வரணும் வரணும் ஐயப்பா
கரிமலைவாசா பாபவினாசா
சரணம் சரணம் ஐயப்பா
கருத்தினில் வருவாய் கருணையைப் பொழிவாய்
சரணம் சரணம் ஐயப்பா
மகிஷி சங் ஹாரா மதகஜ வாகனா
சரணம் சரணம் ஐயப்பா
சுகுணவிலாசா சுந்தரரூபா
சரணம் சரணம் ஐயப்பா
ஆறுவாரமே நோன்பிருந்தோம்
பேரழகா உன்னைக் காணவந்தோம்
பாலாபிஷேகம் உனக்கப்பா
இந்தப் பாலனைக் கடைக்கண் பாரப்பா
முத்திரை தேங்காய் உனக்கப்பா
தித்திக்கும் நாமம் எனக்கப்பா
கற்பூர தீபம் உனக்கப்பா உந்தன்
பொற்பாத மலர்கள் எனக்கப்பா
தேவன் பாதம் தேவி பாதம்
திருவடி சரணம் ஐயப்பா
நாவினில் தருவாய் கீதமப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை உன் திருப் பாதமப்பா
நெய்யபிஷேகம் உனக்கப்பா
உன் திவ்ய தரிசனம் எனக்கப்பா
தையினில் வருவோம் ஐயப்பா
அருள்செய்யப்பா மனம் வையப்பா
பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
பகவதி சரணம் பகவான் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா

# ஓம் குருநாதா ஐயப்பா

ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
அரனார் பாலா ஐயப்பா அம்பிகை பாலா ஐயப்பா
ஆபத்பாந்தவா ஐயப்பா அம்பிகை பராபரா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
இரு முடிப்பிரியா ஐயப்பா இரக்கம் மிகுந்தவா ஐயப்பா
ஈசன் மகனே ஐயப்பா ஈஸ்வரி மைந்தா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
உமையாள் பாலா ஐயப்பா உறுதுணை நீயே ஐயப்பா
ஊக்கம் தருபவா ஐயப்பா ஊழ்வினை அறுப்பவா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
எங்கும் நிறைந்தவா ஐயப்பா எங்கள் நாயகா ஐயப்பா
பம்பையின் பாலா ஐயப்பா பந்தள வேந்தே ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
வன்புலி வாகனா ஐயப்பா வனத்திலிருப்பவர் ஐயப்பா
சபரி கிரீசா ஐயப்பா சாந்தஸ்வ ரூபா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவன் என்பது உள்ளவரை

ஜீவன் என்பது உள்ளவரை என்
நெஞ்சம் வணங்கும் சபரிமலை
அரிகரன் புகழை பாடும் வரை
வாழ்வினில் தோன்றும் சாந்த நிலை
கார்த்திகைதோறும் மாலை அணிந்து
நாற்பது நாளும் நோன்பும் இருந்து
நாவில் ஐயன் நாமம் பொழிந்து
நடந்தே சென்று கோவிலடைந்து

இருமுடி சேர்த்தன் அவனிடத்தில்
கோடி மணி தந்தான் என்னிடத்தில்
நெய் விளக்காலே அலங்காரம் தன்னில்
நெஞ்சில் மறையும் அகங்காரம்
சரணம் என்னும் ஓங்காரம்
ஓங்கார ஸ்வரூபனே சரணம் ஐயப்பா
சரணம் என்னும் ஓங்காரம்
சர்வமம் அதிலே ரீங்காரம்
ஆசையில் போதும் அவையாவும்
ஜோதியை கண்டால் தெளிவாகும் - மகர
ஜோதியை கண்டால் தெளிவாகும் (ஜீவன்...)

பம்பை கரையில் அவதரித்தான்
பந்தள நாட்டில் பணிமுடித்தான்
மகிஷியை வென்றே வாழ்வளித்தான்
மழலைவடிவில் அருள் கொடுத்தான்
அன்னையின் நோய்க்கும் மருந்தளித்தான்
அகிலம் வாழவும் துணையிருப்பான் - இந்த
அகிலமும் வாழவும் துணை இருப்பான் (ஜீவன்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமுடி தாங்கி...

இருமுடிதாங்கி ஒருமனதாகி குருவெனவே வந்தோம்
இருவினை தீர்க்கும் எமனையும் வெல்லும்
திருவடியைக் காணவந்தோம்.

பல்லவி

பள்ளிக்கட்டு சபரி மலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே
நெய்யபிஷேகம் ஸ்வாமிக்கே
கற்பூர தீபம் ஸ்வாமிக்கே
ஐயப்பமார்களும் கூடிக்கொண்டு
ஐயனை நாடிச் சென்றிடுவார்
சபரிமலைக்கு சென்றிடுவார் (ஸ்வாமி...)

அனுபல்லவி

கார்த்திகை மாதம் மாலையணிந்து
நேர்த்தியாகவே விரதமிருந்து
பார்த்த சாரதியின் மைந்தனே உனை
பார்க்க வேண்டியே தவமிருந்து
இருமுடி எடுத்து எருமேலி வந்து
ஒருமனதாகிப் பேட்டை துள்ளி
அருமை நண்பராம் வாபரை தொழுது
ஐயனின் அருள் மலை ஏறிடுவார் (ஸ்வாமி...)

அழுதை ஏற்றம் ஏறும்போது
அரிஹரன் மகனைத் துதித்துச் செல்வார்
வழி காட்டிடவே வந்திடுவார் ஐயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்புலி ஏறி வந்திடுவார்
கரிமலை ஏற்றம் கடினம் கடினம்
கருணைக் கடலும் துணை வருவார்
கரிமலை இறக்கம் வந்தவுடனே
பெருநதி பம்பை கண்டிடுவார் (ஸ்வாமி...)

கங்கை நதிபோல் புண்ணிய நதியாம் பம்பையில் நீராடி
சங்கரன் மகனைக் கும்பிடுவார்
சஞ்சலமின்றி ஏறிடுவார்
நீலி மலை ஏற்றம் சிவபாலனும் ஏற்றிடுவார்
காலமெல்லாம் நமக்கே அருள் காவலனாயிருப்பார்
தேகபலம்தா என்றால் அவர் தன் தேகத்தைத் தந்திடுவார்
பாத பலம்தா என்றால் அவர்
தன் பாதத்தைத் தந்திடுவார் - நல்ல
பாதையைக் காட்டிடுவார் (ஸ்வாமி...)

சபரி பீடமே வந்திடுவார்
சபரி அன்னையைப் பணிந்திடுவார்
சரங்குத்தி ஆலில் கன்னிமார்களும்
சரத்தினைப் போட்டு வணங்கிடுவார்
சபரிமலை தனை நெருங்கிடுவார்
பதினெட்டுப்படி மீது ஏறிடுவார்
கதியென்றவனைச் சரணடைவார்
மதி முகம் கண்டே மயங்கிடுவார்... ஐயனைத்
துதிக்கையில் தன்னையே மறந்திடுவார்
பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்பா சுவாமியே ஐயப்போ
சரணம் சரணம் ஐயப்போ சாமி சரணம் ஐயப்போ
(ஸ்வாமி... 4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பா உன்னை...

ஐயப்பா உன்னை நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால இருக்க முடியல

வாபர் சாமி உன்னை நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால இருக்க முடியல

எரிமேலி பேட்டைத்துள்ளல் மறக்கமுடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

அழுதா நதி கல்லெடுத்தேன் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல
கறுப்புசாமி உன்னை நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல
பொன்னு 18 படி தொட்டத மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

காந்தமலை ஜோதியை மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல
(ஐயப்பா உன்னை நான்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்னதியில் கட்டுங்கட்டி

சன்னதியில் கட்டுங்கட்டி - வந்தோமப்பா ஐயப்பா
சபரிமலை காடுதேடி - வாறோமப்பா ஐயப்பா
கட்டுமுடி ரெண்டு கட்டி - வந்தோமப்பா ஐயப்பா
காந்தமலை ஜோதி காண - வாறோமப்பா ஐயப்பா
சபரிமலை பயணந்தானப்பா சாமி வழி துணையா வந்து
சேரப்பா

புலி ஏறும் என நெனச்சு - வந்தோமப்பா ஐயப்பா
புல் அரிக்க சரணம் இட்டு - வந்தோமப்பா ஐயப்பா
மணி மணியா மாலையிட்டு - வந்தோமம்பா ஐயப்பா
கனிவாக விரதம் வச்சி - வாறோமப்பா ஐயப்பா
காந்தமலை ஜோதியானவா எங்க காவலாக வந்து சேரப்பா
(சன்னதி...)

கறுப்பு வண்ண ஆடை கட்டி - வந்தோமப்பா ஐயப்பா
உத்தரவு வந்ததுன்னு - வாறோமப்பா ஐயப்பா
ஊருக்கெல்லாம் ஓலையிட்டு - வந்தோமப்பா ஐயப்பா
உச்சி மலை போறதுன்னு - வாறோமப்பா ஐயப்பா
சபரிமலை பயணந்தானப்பா சாமி வழி துணையா வந்து
சேரப்பா (சன்னதி...)

வீட்டையெல்லாம் தான் மறந்து - வந்தோமப்பா ஐயப்பா
காட்ட மடம் மனசில் வச்சி - வாறோமப்பா ஐயப்பா
சொந்தமெல்லாம் தான் மறந்து - வந்தோமப்பா ஐயப்பா
ஜோதி மட்டும் மனசில் வச்சு - வாறோமப்பா ஐயப்பா
காந்தாமலை ஜோதியானவா எங்க காவலாக வந்து சேரப்பா
(சன்னதி...)

கிடுகிடுவென ஏற்றமப்பா வந்தோமப்பா ஐயப்பா
குடுகுடுவென கீழிறங்கி வாறோமப்பா ஐயப்பா
சபரிமலை பயணந்தானப்பா சாமி வழித்துணையா
வந்து சேரப்பா (சன்னதி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திம்தகத்தோம்

திம்தகத்தோம் திம் தகத்தோம் ஐயப்பா
தெய்வத்தில் நீ ஒருவன் மெய்யப்பா
தேடினோம் கூடினோம் கருணை செய்யப்பா
தினம் உன்னை நாடினோம் சாமி ஐயப்பா

மார்கழியில் நாங்களெல்லாம் பேட்டை துள்வோம்
மலை மீது ஏறி வந்து உன்னைப் பாடுவோம்
வரிசையுடன் பம்பை நதி நீரில் ஆடுவோம்
வாவரெனும் துணைவனையும் வணங்கக்கூடுவோம்

மனதில் எமக்கு இடம்பொடுத்து உதவி செய்யப்பா
மகர ஜோதி காணவேண்டும் சாமி ஐயப்பா
சாமி திம் திகத்தோம் - தோம்
ஐயப்பா திம் தகத்தோம் (சாமி...)

சாமியே... ஐயப்பா
ஐயப்பா... சாமியே...

கடலும் வானும் உன்னாலே காற்றும் மழையும் உன்னாலே
உடலின் உறுதி உன்னாலே உள்ளம் செழிப்பதும் உன்னாலே

கன்னிபுரத்து மாதேவி காவலிருப்பதும் உன்னாலே
கார்த்திகை மாதம் வந்தாலே ஐயப்பா பக்தர்கள் உன்னோடே
வாக்கும் வலிமையும் நீயப்பா வாழ்வைத்தருவாய் ஐயப்பா
வீரமும் செல்வமும் நீயப்பா வெற்றியைத் தருவாய் ஐயப்பா

சாமி திம் திகத்தோம் - தோம்
ஐயப்பா திம் தகத்தோம்
சாமி ஐயப்பா (சாமி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமியே சரணம் ஐயா

சுவாமியே சரணம் ஐயா
தர்ம சாஸ்தாவே சரணம் ஐயா
அனுதினம் பூஜை செய்தோம் - ஐயனே
உமக்கு அனந்தகோடி நமஸ்காரம், நமஸ்காரம் நமஸ்காரம்
(சுவாமி...)

வன்புலி மீதினிலே ஏறி வீரமணி கண்டனே வா
உன் வீர விளையாடல்களைக் காண வாணிதடைகூறவில்லை
(சுவாமியே...)

கொஞ்சி கொஞ்சி பேசி உந்தன் பிஞ்சுமொழி
கேட்டிடவே அவந்த பந்தளத்தோர் செய்த தவம்
இந்த பாமரர் நாம் செய்யவில்லையோ
(சுவாமியே...)

பாலெடுக்கப் புலி எதற்கோ உங்கள் பார்வையின்ப சக்தி
அற்றதோ
உன் பார்வையொன்றே போதுமய்யா
உடனே பால்பொழிய வேண்டுமய்யா (சுவாமியே...)

வில்லும் அம்பும் கையில் எதற்கோ அந்த வாவரை
நீ வெற்றிகொள்ளவா, பக்தர்களின் துயர்களையே
நீங்கள் வேட்டையாடி விரட்டிடவே
(சுவாமியே...)

காந்தமலை ஜோதி தனை அந்த காந்தம் என்னை
இழுக்குதய்யா
அதைக் காமக்கொடி நாதன் உருவில்
காண அருள் வேண்டுமய்யா (சுவாமியே...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன மணக்குது...

என்ன மணக்குது எங்கே மணக்குது
எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே

அல்லி மலர் வாசமது எங்கே மணக்குது
அரிஹரா புத்திரனின் மேலே மணக்குது

மல்லிகைப்பூ வாசமது எங்கே மணக்குது
மஹிஷி மார்த்தனின் மேலே மணக்குது

முல்லைமலர் வாசமது எங்கே மணக்குது
முகுந்தனின் மைந்தனின் மேலே மணக்குது

சம்பங்கி வாசமது எங்கே மணக்குது
முகுந்தனின் மைந்தனின் மேலே மணக்குது

அத்தரும் பன்னீரும் எங்கே மணக்குது
அச்சன் கோவில் பாலகனின் மேலே மணக்குது

சந்தனத்து வாசமது எங்கே மணக்குது
சண்முகன் தம்பியின் மேலே மணக்குது

சாம்பிராணி வாசமது எங்கே மணக்குது
சண்முகன் தம்பியின் மேலே மணக்குது

சாம்பிராணி வாசமது எங்கே மணக்குது
சாஸ்தாவின் சன்னிதியில் தானே மணக்குது

கற்பூர ஜோதியது எங்கே தெரியுது
காந்தமலை வாசனின் முன்னே தெரியுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபூதி வாசமது எங்கே மணக்குது
விநாயகன் தம்பியின் மேலே மணக்குது

பக்தியின் வாசமது எங்கே மணக்குது
பந்தள பாலனின் மேலே மணக்குது

நெய்யபிஷேகம் எங்கே தெரியுது
சாஸ்தாவின் சன்னதியில் தானே தெரியுது

சரண கோஷசத்தமது எங்கே ஒலிக்குது
சாஸ்தாவின் சன்னதியில் தானே ஒலிக்குது

பதினெட்டுப்படிகளது எங்கே இருக்குது
சபரிமலை வாசனின் முன்னே இருக்குது

## தள்ளாடி தள்ளாடி

தள்ளாடி தள்ளாடி நடை நடந்து நாங்கள்
சபரிமலை நோக்கி வந்தோமய்யா (தள்ளாடி...)
கார்த்திகை நல்ல நாளில் மாலையும் போட்டுக்கிட்டு
காலையிலும் மாலையிலும் சரணங்கள் சொல்லிக்கிட்டு
(சாமியே ஐயப்பா! ஐயப்பா! சாமியே)
சரணங்கள் சொல்லிக்கொண்டு வந்தோமய்யா நாங்கள்
சபரி மலை நோக்கி வந்தோமய்யா நாங்க
சபரி மலை நோக்கி வந்தோமய்யா (தள்ளாடி...)

இருமுடியைக் கட்டிக்கிட்டு இன்பமாய் பாடிக்கிட்டு
ஈசன் மகனே உந்தன் இருப்பிடத்தை தேடிக்கிட்டு
பேட்டைகளும் துள்ளிக்கிட்டு வேஷங்களும் போட்டுக்கிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடிக்கையாக நாங்கள் ஆட்டங்களும் ஆடிக்கிட்டு
(சாமி தித்தகத்தோம்! ஐயப்பா திந்தகத்தோம்)
(தள்ளாடி)

காணாத காட்சியெல்லாம் கண்குளிரக் கண்டுக்கிட்டு
காடு மலைகளெல்லாம் கால் நடையாய்த் தாண்டிக்கிட்டு
பம்பையில குளித்து விட்டு பாவமெல்லாம் போக்கிக்கிட்டு
பக்தரெல்லாம் கூடி நின்று பஜனைகள் செய்துக்கிட்டு
(சாமியே ஐயப்பா! ஐயப்பா சாமியே என)
பஜனைகள் செய்துக்கிட்டு வந்தோமய்யா
(தள்ளாடி...)

நீலி மலை ஏற்றத்திலே நின்று நின்று ஏறிக்கிட்டு
நெஞ்சம் உருகி என்னை நினைச்சுமே பார்த்துக்கிட்டு
படியேறிப் போகும் போது பாங்கான காய் உடைத்து
பாலனான உன்னையே பார்த்துப் பார்த்து சொக்கிக்கிட்டு

நெய்யிலே குளிக்கும் போது நேரிலேயே பார்த்துக்கிட்டு
ஐயப்பா சரணம் என்று ஆர்ப்பரித்துப் பாடிக்கிட்டு
(தள்ளாடி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டும் கட்டு...

கட்டும் கட்டு பள்ளிக்கட்டு சபரிமலைக்கிண்ணு
இருமுடிகட்டு பெருமுடிகட்டு சபரிமலைக்கிண்ணு
அஞ்சுமலை அழகா ஐயா அஞ்சு மலை அழகா
எங்கள் நெஞ்சில் அழகா வந்து தங்கிட வாருமய்யா
மாலை போட்டு மனபாரம் போனதய்யா
காவி போட்டு கனகாமம் பறந்ததய்யா

காரணம் நீயில்லையா (கட்டு கட்டு பள்ளிக்கட்டு)
நோன்போடு நாமிருந்தோம் - நோயோடிப் போனதய்யா
சூடம் கொழுத்திக்கிட்டோம் - சூது மறைந்ததய்யா
சந்தனம் பூசிக்கிட்டோம் - சாந்தி கெடச்சதய்யா
தண்ணி தெளிச்சிக்கிட்டோம் - பக்தி வளர்ந்ததய்யா
நாடாளும் ராசாவே சத்தியம் நிச்சயம் நீயே

கட்டும் கட்டு பள்ளிக்கட்டு சபரிமலைக்கிண்ணு
இருமுடிகட்டு பெருமுடிகட்டு சபரிமலைக்கிண்ணு
(அஞ்சுமலை அழகா...)

பம்பா நதி குளிச்சோம் பாவம் தொலைஞ்சதய்யா
நீலிமலையடைஞ்சோம் நிம்மதி வந்ததய்யா
சாமி உன் சன்னதியில் சஞ்சலம் தீர்ந்ததய்யா
ஜோதி தரிசனத்தில் ஆவி குளிர்ந்ததய்யா
நாடாளும் ராசாவே சத்தியம் நிச்சயம் நீயே

கட்டும் கட்டு பள்ளிக்கட்டு சபரிமலைக்கிண்ணு
இருமுடிகட்டு பெருமுடிகட்டு சபரிமலைக்கிண்ணு
(அஞ்சுமலை அழகா...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே மணக்குது

*சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா//*
*சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா//*
*சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா//*
*எங்கே மணக்குது சந்தணம் எங்கே மணக்குது*
*ஐயப்ப சாமி கோயிலிலே சந்தணம் மணக்குது*
*என்ன மணக்குது மலையில் என்ன மணக்குது*
*இன்பமான ஊதுவத்தி எங்கே மணக்குது (எங்கே...)*

*என்ன மணக்குது மலையில் என்ன மணக்குது*
*நீல மணிகண்டன் சந்நிதியில் நெய்யும் மணக்குது*
*திருநீறும் மணக்குது பன்னீரும் மணக்குது*
*ஆண்டவனின் சந்நிதியில் அருளும் மணக்குது*
*ஐயன்மார்கள் உள்ளத்திலே அன்பும் மணக்குது*
*(எங்கே...)*

பள்ளிக்கட்ட சுமந்துக்கிட்டா பக்தி பிறக்குது
அந்த பனிமலையில் ஏறிடவே சக்தி இருக்குது
பகவானை பாத்துப்புட்டா பாவம் பறக்குது
பகவானை பாத்துப்புடடா பாடம் முடியுது
பதினெட்டாம் படிதொட்டா வாழ்வும் இனிக்குது
*(எங்கே...)*

பேட்டை துள்ளி ஆடும் போது மனமும் துள்ளுது
ஐயன் பெரும் புகழைக் காண உள்ளம் ஆசை கொள்ளுது
காட்டுக்குள்ளே சரணகோஷம் வானைப் பிளக்குது
சாமியே சரணம் ஐயப்பா
வீட்டை மறந்து மக்கள் கூட்டம் காட்டில் இருக்குது
*(எங்கே...)*

பூங்காவனத் தோப்புக்குள்ளே பவனி வருகிறான்
ஐயன் வேங்கை மேல் ஏறி வந்து நலமும் கொடுக்கிறான்
நோன்பிருந்து வருவோரைக் காத்து நிற்கிறான்
ஓங்கார நாதத்திலே எழுந்து வருகிறான் *(எங்கே...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமுடி கட்டு

இரு முடி கட்டு சபரி மலைக்கு...
நெய் அபிஷேகம் மணிகண்டனுக்கு...
ஐயப்பா ஆ... சுவாமியே...
ஐயப்பா ஆ... சுவாமியே...
இருமுடி கட்டு சபரி மலைக்கு
நெய் அபிஷேகம் மணிகண்டனுக்கு - 2
சாமி சரணம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா - 2 (இருமுடி கட்டு...)

தாயவள் தலை வலி தீரவே
வரிப்புலி, தேடியே சென்றான் மா மணிகண்டன்
வன் புலிகள் கூட்டம் தனியாய் கூட்டி வந்தான் - 2
இரு முடி கட்டு சபரி மலைக்கு
நெய் அபிஷேகம் மணிகண்டனுக்கு
சாமியே சரணம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா - 2 (இருமுடி கட்டு...)

கானகம் போய்த் திரும்பி, கலியுக வரதனாய்
காட்சியும் தந்தான் மா மணிகண்டன்
விண்ணவர்கள் கூட்டம் தன்னையே
கூட்டி வந்தான் (இருமுடி கட்டு.2)

சாமி சரணம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளே குழந்தைகளே...

குழந்தைகளே குழந்தைகளே எங்கே போறீங்க
குழந்தை மணிகண்டனைப் பார்க்க போறேங்க
அணில்களே அணில்களே எங்கே போறீங்க
அச்சங்கோவில் அரசனைப் பார்க்க போறேங்க
குருவிகளே குருவிகளே எங்கே போறீங்க
குளத்துப்புழை பாலகனை பார்க்க போறேங்க
எறும்புகளே எறும்புகளே எங்கே போறீங்க
எரிமேலி சாஸ்தாவை பார்க்க போறேங்க
காளைகளே காளைகளே எங்கே போறீங்க
காளைகட்டி ஈசனை பார்க்க போறேங்க
நாகங்களே நாகங்களே எங்கே போறீங்க
நாக ராஜனைப் பார்க்க போறேங்க
சாமிகளே சாமிகளே எங்கே போறீங்க
அச்சங்கோவில் அரசனைத்தான் பார்க்க போறேங்க
(குழந்தைகளே...)

# இருமுடியை சுமந்து வந்தேன்

இருமுடியை சுமந்து வந்தேன் இரக்கமில்லையா
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா (இரு)

அழுதையிலே குளித்து வந்தேன் அறியவில்லையா
அருகே ஓர் காலெடுத்தே வைக்கவில்லையா
கரிமலையில் ஏறிவந்தேன் காணவில்லையா அந்த
கருடன் என்னைக் கண்டதாகச் சொல்லவில்லையா (இரு)

பம்பையில் குளித்து வந்தேன் பார்க்கவில்லையா
பம்பா நதி போஜனம் நீ அருந்தவில்லையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பையிலே விளக்கெடுத்தேன் காணவில்லையா
பகவானே உனக்கு கூட சாட்சி தேவையா
பதினெட்டுப் படிகளேறி வரவுமில்லையா நான்
படித்தேங்காய் உடைத்த சப்தம் கேட்கவில்லையா
கொடிமரத்தை சுற்றிவந்தேன் காணவில்லையா அங்கே
கூடிநின்ற ஜனங்களைப் போய்க் கேட்டுப்பாரய்யா

நெய்யபிஷேகம் செய்தேன் நினைவுமில்லையா
நான் மெய்யுருகிப் பாடியதும் கேட்கவில்லையா
ஐயா உன் சரணமென்றே கூறவில்லையா நீ
விஸ்வமெல்லாம் காத்தருளும் ஜோதியல்லவா
(இருமுடியைச் சுமந்துவந்தேன்...)

## தாலாட்டுப் பாடவா

தாலாட்டுப் பாடவா
தாளம் தட்டி ஆடவா
கோலாட்டம் அடிக்கவா
கும்மி பல கொட்டவா (தாலாட்டு)

அச்சங்கோவில் அரசனாம்
அச்சம் தீர்க்கும் தெய்வமாம்
ஆரியங்காவு ஐயனாம்
ஆதரிக்கும் தெய்வமாம் (தாலாட்டு)

குளத்துப்புழைப் பாலனாம்
குறைகளையும் தீர்ப்பவனாம்
எருமேலி நாதனாம்
எங்கள் குல தெய்வமாம் (தாலாட்டு)

வாபர் சுவாமி தோழனாம்
வன்புலியின் வாகனனாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளை கட்டி நாதனாம்
காத்தருளும் தெய்வமாம் (தாலாட்டு)

அழுதமலை ஏற்றமாம்
அழுதமலை இறக்கமாம்
கரிமலையின் ஏற்றமாம்
கரிமலையின் இறக்கமாம் (தாலாட்டு)

பம்பை யாழும் சோதியாம்
பந்தளத்து வேந்தனாம்
நீலிமலை ஏற்றமாம்
நித்திய பிரம்மச் சாரியாம் (தாலாட்டு)

சின்னக் கறுப்பன் சாமியாம்
பெரிய கறுப்பன் சாமியாம்
பதினெட்டாம் படிவாணனாம்
பக்தர் குறை தீர்ப்பவனாம் (தாலாட்டு)

ஜெகதி சேகப் பிரியனாம்
நீலவஸ்திர தாரியாம்
மாளிகைப் புரத் தம்மையாம்
மஞ்சமாதா தேவியாம் (தாலாட்டு)

காந்தமலை ஜோதியாம்
காத்தருளுந் தெய்வமாம்
காத்தமலை ஜோதியாம்
காத்தருளும் தெய்வமாம் (தாலாட்டு)

தாலாட்டுப் பாடவா
தாளம் தட்டி ஆடவா
கோலாட்டம் அடிக்கவா
கும்மி பல கொட்டவா (தாலாட்டு).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாகி லாகி

லாகி லாகி லாகி லாகி இல்லல்லோ
வாபர் முகமது பேரெல்லோ
எரிமேனி நாங்கள் வந்தல்லோ
கரும் புள்ளி செம்புள்ளி இட்டல்லோ (லாகி லாகி)

மணிகண்டன் நண்பர் ஆனவரே
மாமலை மாமணி யானவரே
அஞ்சா நெஞ்சம் கொண்டவரே
அல்லாவின் இறையடி சென்றவரே (லாகி லாகி)

எதிர்த்தவர் யாரையும் வென்றவரே
இல்லாதவர்க்கு அருள் தந்தவரே
இஞ்சிப்பாறையில் அமர்ந்தவரே
எரிமேலியில் குடி கொண்டவரே (லாகி லாகி)

வீரமும் தீரமும் கொண்டவரே
எருமேலி கோட்டை ஆண்டவரே
முன்னும் பின்னும் துணைவருவீர்
கன்னிமார்களை காத்திடுவீர் (லாகி லாகி)

உன்னிடம் நாங்கள் வந்திடுவோம்
பேட்டையாடி துள்ளிடுவோம்
வாவருசாமி திந்தகத்தோம்
ஐயப்பசாமி திந்தகத்தோம் (லாகி லாகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர்மடம் வந்து

கந்தர்மடம் வந்துதித்தான் ஐயப்பன்
கண்கண்ட தெய்வமப்பா ஐயப்பன்
குருசாமி வடிவான ஐயப்பன்
ரூபனாகக் காட்சி தந்தான் ஐயப்பன்
சாமி திந்தகத்தோம் ஐயப்பா திந்தகத்தோம்
"ஐயப்பா திந்தகத்தோம் சாமி திந்தகத்தோம்

கருணை என்னும் தெய்வமான ஐயப்பன்
மணிகண்ட நாயகனாம் ஐயப்பன்
சாமிமாரை காத்துவிட்டான் ஐயப்பன்
சாமிகளில் காட்சி தந்தான் ஐயப்பன்
சாமி தித்தகத்தோம் ஐயப்பா தித்தகத்தோம்
ஐயப்பா தித்தகத்தோம் சாமி தித்தகத்தோம்

மணிகண்ட நாயகனாய் ஐயப்பன்
சபரி மலை ஏறவைத்தான் ஐயப்பன்
மகரஜோதி காணவைத்தான் ஐயப்பன்
மனங்குளிர காட்சி தந்தான் ஐயப்பன்
சாமி தித்தகத்தோம் ஐயப்பா தித்தகத்தோம்
ஐயப்பா தித்தகத்தோம் சாமி தித்தகத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும் நீயே

அம்மாவும் நீயே
அப்பாவும் நீயே
அன்புடனே ஆதரிக்கும் ஐயனும் நீயே (அம்மாவும்)

தந்தைமுகம் தாயின் முகம் கண்டறியோமே
மன சாந்தி தரும் இனிய சொல்லைக் கேட்டறியோமே
எங்களுக்கோர் அன்பு செய்ய யாரும் இல்லையே
இதை அறியாயோ ஐயப்பா உன் கருணையில்லையோ
ஐயப்பா! ஐயப்பா! ஐயப்பா!

பூனை நாயும் கிளியும் கூட மனிதர் மடியிலே
பெற்ற பிள்ளைபோல் நல் உறவால் சேர்ந்து வாழுதே
ஈ எறும்பு உன்படைப்பில் இனிமை காணுதே
இதை அறியாயோ ஐயப்பா உன் கருணை இல்லையோ
ஐயப்பா! ஐயப்பா! ஐயப்பா! (அம்மாவும்)

# சாமி சரணம் என்றால்

சாமி சரணம் என்றால் மன சாந்தி
கிடைக்கும் ஐயப்பா
சுவாமி நீரே அல்லால் வேறு கதியும்
இல்லை ஐயப்பா (2)

சரணத்தை சொல்வோம் மரணத்தை வெல்வோம்
சாமி சரணம் ஐயப்பா
இருமுடி பிரியனே ஈசன் குமார சாமி சரணம் ஐயப்பா (2)
சாமி சரணம் என்றால் மன சாந்தி
கிடைக்கும் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி நீரே அல்லால் வேறு கதியும்
இல்லை ஐயப்பா (2)

ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா
ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா
ஐயப்பா ஐயப்பா ஐயப்பா

## அச்சங்கோவில் அரசே

அச்சங்கோவில் அரசே என் அச்சம் தீர்க்கவா
பச்சை மயில் ஏறும் பன்னிரு கையன் சோதரா
இச்சை கொண்டேன் உந்தன் முன்னே ஈஸ்வரன்
மைந்தா பச்சை வண்ணம் பரந்தாமன் மகிழும் செல்வா

சுவாமி பொன் ஐயப்பா சரணம் பொன் ஐயப்பா
சபரிகிரி நாயகனே சரணம் ஐயப்பா (சுவாமி)

ஆசிரியங்காவில் வாழும் ஆண்டவனே வா
பார்வதியால் அகமகிழும் பாலகனே வா
எருமேலி வீற்றிருக்கும் இறைவனே நீ வா
தர்மஞான சாஸ்தாவே தயவுடனே வா (சுவாமி)

மலைவீடும் சபரிமலை மன்னவனே வா
குறை தீர்க்கும் குளத்துப் புழை பாலகனே வா
மன்னவன் மணிகண்டனே மகிழ்வுடனே வா
வன்புலி மேல் காட்சி தரும் வள்ளலே நீ வா (சுவாமி)

தேவர்களும் உனைப்பணிய காந்த மலையிலே
நீ ஆவலுடன் காட்சி தந்தாய் ஜோதி உருவிலே
காவலனே கண்ணாரக் கண்டோமே ஜோதி மலை
நாவார உனை அழைத்தோம் சாமியே சரணம் ஐயப்பா
(சுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரி நின்று அருள் புரியும்...

ஹரி நின்று அருள் புரியும் ஏழுமலை
ஹரன் நின்று தவம் செய்யும் கயிலைமலை
ஹரிஹரன் அருள் செல்வன் ஆளும் மலை
ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் சபரிமலை; சபரிமலை

மலை போன்ற வாழ்வருள் வாய் ஐயப்பா
மணிகண்டப் பெருமானே ஐயப்பா
கலை ஞானப் புகழ் தருவாய் ஐயப்பா
கண்கண்ட தெய்வம் நீயே ஐயப்பா
சுவாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (2)

கல்லும் முள்ளும் குத்தவில்லை ஐயப்பா
உந்தன் கருணை உள்ளம் புரிந்ததய்யா ஐயப்பா
தனிமையிலே இனிமை தந்தாய் ஐயப்பா
சரணங்கள் முழங்க வைத்தாய் ஐயப்பா

சுவாமியே சரணம் ஐயப்பா (2) (மலை)

சத்தியமான பதினெட்டாம் படியப்பா
உயிர் தநத்துவத்தைத் தாங்கும் இருமுடியப்பா
அகம் குளிரப் பாடிவந்தோம் ஐயப்பா
மகரஜோதி காண வேணும் ஐயப்பா
சுவாமியே சரணம் ஐயப்பா (2) (மலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்

பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்
ஐயனை நீ காணலாம் சபரியில் ஐயனை நீ காணலாம்
ஐயப்பா சுவாமி ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

அவனை நாடு அவன் புகழ்பாடு புகழோடு வாழ
வைப்பான் ஐயப்பன் உன்னை புகழோடு வாழவைப்பான்
ஐயப்பன் இருப்பது காடு வணங்குது நாடு
அவனை காண தேவை பண்பாடு (ஐயப்பன் சுவாமி)

பூஜைகள் போது தூய அன்போடு பெயரோடு
வாழவைப்பான்
ஐயப்பன் நல்ல பெயரோடு வாழ வைப்பான் ஐயப்பன்
அனைவரும் வாருங்கள் ஐயனை நாடுங்கள் -
அருள் வேண்டும் அன்பரை எல்லாம் வாழவைப்பான்
(ஐயப்பாசுவாமி)

பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்
ஐயனை நீ காணலாம் சபரி ஐயனை நீ காணலாம் (2)
(ஐயப்பாசுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவில் ஒளி வீசும்

நிலாவில் ஒளிவீசும் நின்னுடைய
நீலவானம் ஐயா - இந்த
உலகில் அனைவரையும் ஒன்றாக்கும்
உந்தன் நாமம் ஐயா (நிலா)

மலைகள் கடந்து வந்தோம் ஐயப்பா
மனமிரங்கி வருவாய்
அலையும் மனதினிலே ஐயப்பா
அமைதி தாராயோ (நிலா)

வனங்கள் கடந்து வந்தோம்
எமக்கொரு மார்க்கம் அருளாயோ
இருளை அடக்கிடவே என் வாழ்வில்
இன்பம் தாறாயோ (நிலா)

நியமம் ஒன்றறியேன் நின்னடியார்
நிழலில் நின்றறியேன்
கயவன் நானறியேன் ஐயப்பா
கருணை புரியாயோ (நிலா)

மதுராபுரி வதனா ஐயப்பா
மதன மோகனனே வணங்கும்
குருமுனிவன் தன் மொழியால்
மகிழும் சிவமணியே (நிலா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய ஜோதி

சத்திய ஜோதி தெரியுதையா
நித்திய வாழ்வு புரியுதையா
சாஸ்தா ஆலயம் தெரியுதையா
சங்கட மெல்லாம் மறையுதையா (சத்திய)

மாமலை ஏறிப் போகையிலே
மனதில் இன்பம் தோன்றுதையா
சபரி காட்டில் நடக்கையிலே
சாந்தி நிறைந்து தோன்றுதையா (சத்திய)

பதினெட்டாம் படிகள் தாண்டயிலே
பக்தியும் எல்லையைத் தாண்டுதையா
பந்தளக் குழந்தையைப் பார்க்கையிலே
சிந்தையில் சொர்க்கம் தோன்றுதையா (சத்திய)

ஐயனை மனதில் நினைக்கையில்
ஐயம் எல்லாம் மறையுதையா
மகரஜோதியைக் காண்கையிலே
மனதில் இன்பம் தோன்றுதையா (சத்திய)

ஓரடி ஈரடி நடந்து வந்தோம்
ஒவ்வொரு மலையாய் கடந்து வந்தோம்
இருமுடி தலையில் சுமந்து வந்தோம் - உன்
திருவடி துணையென்று நாடி வந்தோம் - (சத்திய)

சரணம் சரணம் ஐயப்பா சபரி கிரீசா ஐயப்பா
சாந்த சொரூபா ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுமலை கவலை இல்லை

சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா

காடுமலை கவலையில்லை கல்லும் முள்ளும்
பஞ்சு மெத்தை பள்ளிக்கட்டு சபரி மலையிலே
பந்தளந்த வேந்தன் அருளிலே (சரணம் சரணம்)

கார்த்திகையில் மாலையிட்டு கடும் விரதம்
தவம் இருந்து காத்திருந்த ஆவலெல்லாம்
கண் எதிரே தீருமையா
பூத்திருந்த மலர் பொழிந்து பூஜையிட்ட நேரம்
எல்லாம் புண்ணியத்தின் பலனாக புன்னகையே
அருளுதையா ஐயா உன் பாதம் சேர ஆனந்தமே மலருதையா
(சரணம் சரணம்)
காடுமலை மேடெல்லாம் காற்று வந்து கவிதை
சொல்லும் சந்தனத்தின் வாசமுடன் சன்னிதிக்கே வழி
சொல்லும்
இருமுடி தலைமீது மணிமுடியாய் ஒளி மின்னும்
பதினெட்டு படியேற பாதம் எங்கே தலையை தொடும்
பரவசம் அலைபாய கண்ணெதிரே ஐயன்முகம்
(சரணம் சரணம்)
அகிலத்தை ஆளும் எங்கள் ஐயனுக்கே அபிஷேகம்
காணுகின்ற கண்களுக்கே கண்ணீரின் அபிஷேகம்
மங்களத்து மகாராஜன் மகரஜோதி ஒளிதீபம்
கற்பகத்து அருள்வேண்டி கண்கள் எல்லாம்
சரணம் இடும் இப்பிறவி எடுத்தபயன் இனிதாக நிறைவேறும்
(காடுமலை கவலையில்லை)
(சரணம் சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் சொல்லி கூப்பிடுவோம்

சரணம் சொல்லி கூப்பிடுவோம் சபரிமலை வாசனை
வரணும் என்று அழைத்திடுவோம் வரம் கொடுக்கும் ஈசனை
அருளைத்தரும் ஆண்டவனை அன்பருக்கு மித்திரனை
சிரம் தாழ்த்தி வணங்கிடுவோம் அரிகர சுதன் ஐயப்பனை

வில்லாழி வீரனே வீரமணி கண்டனே அவர்
சொல்லெடுத்துப் பாடுவோம் சுந்தரேசன் மைந்தனை

சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (2)

சபரி மலை செல்பவர்கு சஞ்சலங்கள் இல்லை
பயம் தனையே போக்கிடுவான் பத்தளத்தின் பிள்ளை
அபயம் என்று சரணடைந்தால் அகன்றிடுமே தொல்லை
அவன் இன்றி அவனியிவே அணுவுமசைவதில்லை
வீட்டை விட்டு கட்டும் கட்டி அருள்மலை புறப்படுவோம்
கூட்டு சரணம் போட்டு எரிமேலி பேட்டை துள்ளுவோம்
சாமி தித்தக தோம் ஐயப்ப தித்தகதோம் (2)

பேட்டை துள்ளி ஆடும் போது பேரின்பம் கொள்வோம்
கோட்டை காவல் வாபர் சாமியை கொண்டாடி மகிழ்வோம்

சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (2)

சீர்மேவும் சபரிமலை நாதன் அருளோடு
ஈரொன்பது படி ஏறு ஈசன்புகழ் பாடு
பாரெல்லாம் காத்து நிற்கும் பரமனின் திருவீடு
நாராயணன் செல்வனையே நாவினிக்க பாடு

சாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கட்டு பள்ளிக்கட்டு

பள்ளிக்கட்டு பள்ளிக்கட்டு இருமுடி கட்டிக்கிட்டு
சபரிமலை சாமிக்கு சரணங்கள் சொல்லிக்கிட்டு
காடு மலை மேடு தொட்டு கல்லும், முள்ளும்
தாண்டிக்கிட்டு கன்னிமூல கணபதி காலைத்தொட்டு
கும்பிட்டோம்
சாமியே சரணமையா அருள்தரும்
ஜோதியே சரணமையா (2) (பள்ளி)

பெருவழி பாதை தூரம் இருமுடி தலையில் பாரம்
பசியுடன் தாகம் மறந்தது தெரிந்தது தேவன் பாதம்
அழகிய மரகதக் காடு அழைப்பது ஐயனின் வீடு
குழுமையின் வேகம் கடந்திட வேண்டும் பம்பா பாதம்
தரிசனம் காணாமல் தவிப்புகள் ஓயாது (11)
தயங்கிடக் கூடாதையா
சாமியே சரணமையா அருள்தரும் ஜோதியே சரணமையா
(பள்ளி)

உழவுந்தென்றல் தோழன் உதவிக்கு கஜமுகநாதன்
துணைவருவான் அவள் அருள் சேரும் ஆசி போதும்
வனங்களின் கூரை வானம் வழிச்சொல்லும் குயில்களின்
கானம்
பறவைகள் கூச்சல் இயற்கையின் பாடல் காதில் சேரும்
பரமனைக் காணாமல் பயணங்கள் ஓயாது
வழிகளில் முன்னேறுவோம்...
சாமியே சரணமையா அருள்தரும்
ஜோதியே சரணமையா (பள்ளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாதி தேவன்...

தேவாதி தேவன் திருவருள் நேசன் கண்கண்ட தெய்வம்
- மாமலை வாசன்
கருணையின் தோற்றம் அவனைத் தேடிச் செல்லுவோம்
கருணையின் தோற்றம் அவனை நாடிச் செல்லுவோம்

காடென்று சொன்னார் சபரிமலையில் காடொன்று
அங்கே இல்லை
பசுஞ்சோலையைக் கண்டேன் பூரித்து நின்றேன் தன்னை
மறந்தேன்
தேடிச் செல்லுவோம் அவனை நாடிச் செல்லுவோம்
- தேவாதி...

கல்லென்று சொன்னார் முள்ளென்று சொன்னார் கண்ணில்
- தெரியவில்லை
கும் இருட்டென்று சொன்னார் சொர்க்கத்தைக் கண்டேன்
- சபரிமலையிலே
தேடிச் செல்லுவோம் அவனை நாடிச்செல்லுவோம்
- தேவாதி...

அழுதை ஏற்றம் கரிமலை கடினம் ஏறிட வேண்டும் என்றார்
எரிமலை அடைந்து ஐயனைக் கண்டேன் கடினம்
தெரியவில்லை
தேடிச் செல்லுவோம் - தேவாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானப் பிரபுவே வாருமையா...

அன்னதானப் பிரபுவே வாருமையா இந்த ஏழை பாடும்
குரல் உனக்கு கேட்கலையா

அஞ்சுமலை விட்டு வர மனசில்லையா
எங்க நெஞ்சும் அந்த அஞ்சுமலை புரியலையா

சுவாமி சரணம் சுவாமி சரணம் சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் சுவாமியே சரணம் சரணம் ஐயப்பா
பகவான் சரணம் பகவதி சரணம் சரணம் ஐயப்பா
தேவன் சரணம் தேவி சரணம் சரணம் ஐயப்பா
(அன்னதானப் பிரபுவே)

பொன்னம்பல பித்தனே பாருமையா
இந்த ஜீவன் பாடும் பாட்டு உனக்கு கேட்கலையா
நான் பாட வேண்டும் என்பது உந்தன் இச்சையல்லவா
என் பாடலெல்லாம் நீ கொடுத்த பிச்சையல்லவா

சுவாமி சரணம் சுவாமி சரணம் சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் சுவாமியே சரணம் சரணம் ஐயப்பா
பகவான் சரணம் பகவதி சரணம் சரணம் ஐயப்பா
தேவன் சரணம் தேவி சரணம் சரணம் ஐயப்பா
(அன்னதானப் பிரபுவே)

ராஜகுல செல்வவே வரவில்லையா
உன்னை தாலாட்ட என்மனசு அழைக்குதையா
ஜாலியாக தூலியாட வரணுமையா
எங்க ஆரிராரோ ஆராரோ சரணம் ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சரணம் சுவாமி சரணம் சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் சுவாமியே சரணம் சரணம் ஐயப்பா
பகவான் சரணம் பகவதி சரணம் சரணம் ஐயப்பா
தேவன் சரணம் தேவி சரணம் சரணம் ஐயப்பா
(அன்னதானப் பிரபுவே)

அம்பலத்து தங்கமே பேசவில்லையா
ஏழை கையில் வரம் அள்ளி வீச வில்லையா
காந்தமலை ஜோதி போல வேற இல்லையா
இந்த ஏழைக்கண்ணில் நீ இருந்தா ஜோதி இல்லையா

சுவாமி சரணம் சுவாமி சரணம் சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் சுவாமியே சரணம் சரணம் ஐயப்பா
பகவான் சரணம் பகவதி சரணம் சரணம் ஐயப்பா
தேவன் சரணம் தேவி சரணம் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பை நதிக்கரையே!

பம்பை நதிக்கரையே... உந்தன்
பெருமைக்கு இணை இல்லையே...
அரிகரன் திருவருளே நீதான்
அறிந்தாய் முதன் முதலே (பம்)

ஆயிரம் கோடி பக்தர்கள் பாடி
தொழுவார் ஐயப்பன் திருவடியில்
அந்த ஐயப்பனே ஒரு குழந்தையின் வடிவில்
அருள்மழை பொழிந்தது உன் மடியில்
(Slow)அருள்மழை பொழிந்தது உன் மடியில்

அடைக்கலம் என்று இருமுடி ஏந்தி
அனுதினம் வருவார் கோவிலிலே
அவரவர் மனதில் அருளாய் இறங்கி
கருணையை பொழிவான் வாழ்வினிலே
(Slow)கருணை பொழிவான் வாழ்வினிலே

சரணம்பாடி வருவோர்க்கெல்லாம்
சாந்தியை கொடுக்கும் சபரிமலை
ஒருமுறை தரிசனம் கண்டால் போதும்
பிறவியின் பயனே தெய்வநிலை
(Slow)பிறவியின் பயனே தெய்வநிலை.

(பம்பை நதிக்கரையே...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பா ஐயப்பா

ஐயப்பா ஐயப்பா பாலனாக வந்துதித்த ஐயப்பா
ஐயப்பா ஐயப்பா பந்தளத்தின் மாமணியே ஐயப்பா
அரிஹர புத்திரனே ஐயப்பா ஐயப்பா
ஐங்கரனின் தம்பியாரே ஐயப்பா ஐயப்பா
குளத்துப்புழைப் பாலகனே ஐயப்பா ஐயப்பா (ஐயப்பா)

காந்தமலை ஜோதியப்பா ஐயப்பா ஐயப்பா
கற்பூரப் பிரியனே ஐயப்பா ஐயப்பா
நெய்யாலே அபிஷேகம் உனக்கப்பா
அதைக் காண நாங்கள் ஓடி வாறோம் ஐயப்பா (ஐயப்பா)

எரிமேலி பேட்டை துள்ளி ஐயப்பா
வாபரையும் வணங்கி விட்டு ஐயப்பா
கருப்பனும் கூட வர ஐயப்பா ஐயப்பா
இருமுடியை சுமந்து வந்தோம் ஐயப்பா ஐயப்பா (ஐயப்பா)

ஐங்கரனின் தம்பியாரே ஐயப்பா ஐயப்பா
ஐயம் எல்லாம் தீர்ப்பவனே ஐயப்பா ஐயப்பா
ஒப்பில்லாத் திருமணியே ஐயப்பா ஐயப்பா
நாங்கள் வந்து சரண் அடைந்தோம் ஐயப்பா ஐயப்பா
(ஐயப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிகண்டனே மணிகண்டனே

மணிகண்டனே மணிகண்டனே வா வா - உன்
மகரஜோதி காட்டிடவே வா வா - உன்
பக்தரெல்லாம் பூசை செய்வோம் வா வா அந்தப்
பரமசிவன் பாலகனே வா வா - மணி

அச்சங்கோவில் அரசனே வா வா
அச்சமெல்லாம் போக்கிடவே வா வா
ஆரியங்கா ஐயாவே வா வா - அந்த
ஆனந்த ரூபனே வா வா - மணி

குளத்துப் புழை பாலகனே வா வா
குழந்தை மணிகண்டனே வா வா
எரிமேலி சாஸ்தாவே வா வா
எங்கள்குல தெய்வமே வா வா - மணி

பம்பைநதி பாலகனே வா வா
பரந்தாமன் மைந்தனே வா வா
சபரிமலை நாயகனே வா வா எங்கள்
சஞ்சலங்கள் தீர்த்திடவே வா வா - மணி

காந்தமலை ஜோதியே நீ வா வா
கண்கண்ட தெய்வமே வா வா
கருணைக் கடலே வா வா -இந்த

கன்னிகளைக் காத்திடவே வா வா - மணி
மோகினியின் பாலகனே வா வா
மோகன சுந்தரனே வா வா
அகிலலோக நாயகனே வா வா எம்மை
ஆதரித்து அருள்புரிய வா வா - மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானப் பிரபுவே சரணம் ஐயப்பா

அன்னதானப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஆரியங்காவு ஐயனே சரணம் ஐயப்பா
பொன்னடியைப் பணிந்து நின்றோம்
சரணமே ஐயப்பா
கண்ணனின் மைந்தனே சரணம் பொன் ஐயப்பா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா (அன்ன)

வன்புலிமேல் அமர்ந்தவனே சரணம் பொன் ஐயப்பா
வாபர் சுவாமி தோழனே சரணம் பொன் ஐயப்பா
இன்னல்யாவும் தீர்ப்பவனே சரணம் பொன் ஐயப்பா
பந்தளனின் செல்வனே சரணம் பொன் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா (அன்ன)

எரிமேலி சாஸ்தாவே சரணம் பொன் ஐயப்பா
ஏழை பங்காளனே சரணம் பொன்னய்யப்பா
அறிந்தும் அறியாமலும் செய்த பிழைதன்னை
பொறுத்தருள்வாய் நீ சரணம் பொன் ஐயப்பா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா (2)
(அன்னதானப் பிரபுவே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணம் விளித்தால்...

சரணம் விளித்தால் மரணம் இல்லை
சாஸ்தா நாமம் அருளின் எல்லை
தருணம் இதுதான் சரணம் போடு
தர்ம சாஸ்தா பாதம் பாடு

சரணம் சரணமே சரணம் பொன் ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் பொன் ஐயப்பா 2 சரணம்
காக்கும் தெய்வம் திருமால் நாமம்

கருணை செய்யும் ஈஸ்வரன் நாமம்
கலந்து மகிழ்ந்து ஐயன் நாமம்
கூவி வந்தால் புவியில் ஷேமம்
சரணம் சரணமே சரணம் பொன் ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் பொன் ஐயப்பா 2 சரணம்

காடும் மேடும் வீடும் வாசல்
கல்லும் முள்ளும் மல்லிகை மெத்தை
ஆடும் மனத்தை அடக்கி வா வா
ஐயன் மேடை நாடி வா வா
சரணம் சரணமே சரணம் பொன் ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் பொன் ஐயப்பா 2 சரணம்

இருந்தால் உலகம் சுற்றி நிற்கும்
இழந்தால் எதுதான் பற்றி நிற்கும்
குருவை நாடு மாலை சூடு
கோடி ஞான ஜோதியைப் பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சரணமே சரணம் பொன் ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் பொன் ஐயப்பா 2 சரணம்

நெய்போல் உருகும் மனத்தில் ஐயன்
நேரில் வருவான் நிறையத் தருவான்
வள்ளல் ஜோதி வழியைக் காட்டும்
வையம் போற்றும் வானம் போற்றும்
சரணம் சரணமே சரணம் பொன் ஐயப்பா

ஐயப்பா சரணம் சரணம் பொன் ஐயப்பா 2 சரணம்

## மஞ்சமாதா கோவிலுக்கு...

மஞ்சமாதா கோவிலுக்கு மார்களியில் போவது யார்?
துள்ளி துள்ளி ஆடி வரும் கன்னிசாமி -2
காத்திருக்கும் கன்னி மனம் கிள்ளிவிட்டு போவது யார்?
கார்த்திகையில்

மாலை போட்ட கன்னி சாமி? சாமியப்பா ஐயப்பா...
சரணம் அப்பா ஐயப்பா -2
நாடு விட்டு காடு வந்த கன்னிச்சாமி.
ஒரு நாகரீகம் விட்டுவந்த கன்னிச்சாமி
கல்லும் முள்ளும் கடந்து வந்த கன்னிச்சாமி
கல்லும் முள்ளும் தாண்டி வந்த கன்னிச்சாமி
(ஒரு கட்டுப்பாடு ஒத்திருக்க வந்த சாமி) -2
சின்னச்சாமி, பெரிய சாமி, ராம சாமி,
குப்புச்சாமி, கந்த சாமி, ரங்க சாமி, மலை சாமி
இப்போ எல்லோருக்கும் கன்னிச்சாமி...
சபரி மலை ஏறிவந்த சாமி!
முதல் வருசம் மாலையிட்டு, ஐயன் முகம் காணவந்த சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி ஐயப்பா, சரணம் ஐயப்பா
மஞ்சமாதா கோவிலுக்கு மார்கழியில் போவது யார்?
துள்ளி துள்ளி ஆடிவரும் கன்னிசாமி -2
காத்திருக்கும் கன்னி மனம் கிள்ளிவிட்டு போவது யார்?
கார்த்திகையில்

மாலை போட்ட கன்னி சாமி......
ஏழுகோட்டை தாண்டி வந்த கன்னிச்சாமி! இவர் எதிரி மேல் பேட்டை துள்ளிவந்த சாமி
கூட்டிவந்த ஆசாமி குரு சாமி -2
சபரி பீடத்திலே சரங்குத்தி வந்தசாமி
பாலுசாமி, வேலுசாமி, நூறு சாமி,
மாட சாமி, தங்கசாமி தம்புசாமி பொன்னுச்சாமி
இப்ப இங்கு எல்லோரும் கன்னிச்சாமி!
இரு முடி கட்டேந்திவந்தசாமி
சரணகோகஷம் போட்டுகிட்டு
சபரிக்கு யாத்திரையாய் வந்த சாமி

குழு- நாங்கள் எல்லோரும் கன்னிச்சாமி!
இரு முடி கட்டேந்திவந்தசாமி
சரணகோகஷம் போட்டுகிட்டு-சபரிக்கு யாத்திரை வந்த சாமி
சாமியப்பா ஐயப்பா சரணமப்பா ஐயப்பா -2
மஞ்சமாதா கோவிலுக்கு மார்கழியில் போவது யார்? துள்ளி துள்ளி ஆடிவரும் கன்னிசாமி -2
காத்திருக்கும் கன்னி மனம் கிள்ளிவிட்டு போவது யார்?
கார்த்திகையில்
மாலை போட்ட கன்னி சாமி? -2
சாமியப்பா ஐயப்பா சரணமப்பா ஐயப்பா-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாறாராம் சாமி வாறாராம்

வாறாராம் சாமி வாறாராம்

வாராராம் சாமி வாராராம் வரிப்புலிதானேறி ஐயப்பன்
வாராராம்

குழு - வாராராம் சாமி வாராராம் வரிப்புலிதானேறி ஐயப்பன்
வாராராம்

கன்னிச்சாமி பூசையிலே கலந்துகிட வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

சந்நிதான மேடை விட்டு சடுதியிலே வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

அன்னதானம் எடுப்பதற்கே அன்புடனே வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

என்னவரம் வேண்டுமென்று அள்ளிதரப்போராரம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

வாராராம் சாமி வாராராம்...... (2)

குழு - வாராராம் சாமி வாராராம்...

பூசையிலே கலந்துவிட புண்ணியரு வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

பூதகணம் முன்னடக்க புலியேறி வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

வில்லெடுத்து தோளில் போட்டு வீரமணி வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

கல்லெடுத்த குன்று தாண்டி கணப்பொழுதே
வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

வாராராம் சாமி வாராராம்...... (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு - வாராராம் சாமி வாராராம்.......

தேவாதி தேவருக்கும் மூத்தவரு வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

தேடினாலும் கிடைக்காத தேவனவன் வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

கற்பூர தீபத்திலே கலந்து அவர் வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

காந்தமலை ஜோதி நம்ம கண்ணுக்குள்ளே வாராராம்

குழு - வாராராம் ஐயப்பன் வாராராம்

வாராராம் சாமி வாராராம்......-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமியே ஐய்யப்போ...

சாமியே ஐய்யப்போ! ஐயப்போ சாமியே!
சாமியே ஐய்யப்போ! ஐயப்போ சாமியே!
சாமியே ஐய்யப்போ! ஐயப்போ சாமியே!
சாமியே ஐய்யப்போ! ஐயப்போ சாமியே!

பள்ளிக்கட்ட சுமந்து கிட்டு பகவான் பேரை சொல்லிக்கிட்டு
நாற்பது நாள் விரதமேற்று சபரிக்கு வந்தோமே
ஐயன் தரிசனம் கண்டோமே...
சாமியே ஐய்ப்போ! ஐயப்போ சாமியே! -4
(பள்ளிக்கட்ட சுமந்து கிட்டு...) -1

மலையில் ஏறும் நாளப்பா!
எங்கள் மனதில் இருப்பாய் நீயப்பா... -2
பம்பா நதியின் அலையப்பா... -2
நீ பார்வையில் எங்கும் சிலையப்பா... -1
சாமியே......சரணம் ஐயப்போ
சாமியே ஐய்யப்போ! ஐயப்போ சாமியே! -4
(பள்ளிக்கட்ட சுமந்து கிட்டு...) -1

இருமுடி பாரம் ஏற்றிடப்பா! நின்
திருவடி பணிந்திட அருளப்பா... -2
காலம் முழுதும் காத்திடப்பா... -2
நீ கருணை மழையைப் பொழிந்திடப்பா... -1
சாமியே......சரணம் ஐயப்போ
சாமியே ஐய்யப்போ! ஐயப்போ சாமியே! -4
பள்ளிக்கட்ட சுமந்து கிட்டு...) -2
சாமியே ஐய்யப்போ! ஐயப்போ சாமியே! -4
(பள்ளிக்கட்ட சுமந்து கிட்டு...) -1
சாமியே ஐய்யப்போ! ஐயப்போ சாமியே! -6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பை வாசனே...

பம்பைவாசனே... பந்தள ராஜனுக்கு
பிள்ளைக்கலிதீர்த்த குணாளனே......
வில்லாளி வீரனே.....வீரமணிகண்டனே
வேண்டும் வரம் அருளும் தயாளனே... 2
ஆத்மஜோதியாய் அழுதையில் நின்று;
காத்து ரசிக்கும் அபூர்வனே... 2
ஆபத்பாந்தனாய் அவனைகாத்து நின்று
அருளும் பகவதி குமாரனே
எரிமேலியாழும் பிரதசாஸ்தாவே
எங்கும் நிறை பர பிரமம்மே.....
எல்லா உயிர்க்கும் உயிராய் நின்று எங்களைக் காக்கும்
சொருபனே......
சாமி பொன் ஐயப்பா சரணம்பொன் ஐயப்பா;
சாமியே சரணம் சரணமப்பா... 2
வாபர்சாமியுடன் கறுப்பண்ணசாமியை
வலமாய் கொண்ட வரோதயாய்... -2
கருத்தசாமியொரு வனதேவதைகள்
வாழ்த்திடவே வந்த மனோலயா
அச்சங் கோயிலில் அரசாய் நின்று அருளே புரிந்த மகோனதா
அண்டினோர் தம்மை ஆதரித்து;
அருள் அபயதாயகனே சகாயம் தா...
சாமி பொன் ஐயப்பா; சரணம் பொன் ஐயப்பா;
சாமியே சரணம் சரணமப்பா... -2
உமையாள் மைந்தன் எனவே எழுந்து
ஊமைக்கருளிய பெருமானே...... 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமையாள வந்த ஏகாந்தவாசா

இருமடி தனக்கு உறவோனே......
எண்ணிலாரூபம் எடுத்த

பூமியில் எங்கும் நிறைந்த பரமேசா.....
என்குல தெய்வமே; என் குருநாதா!

என்றாலும் மறவேன் மலைவாசா.....
சாமிபொன் ஐயப்பா; சரணம் பொன் ஐயப்பா;
சாமியே சரணம் சரணமப்பா - 2

கண்கண்ட தெய்வமே!

கலியுகநாதா கம்பன் குடிகாத்த முதலோனே... 2
கற்பூரஜோதி கருணா

சமுத்திரம் கனகாபிஷேகப் பெருமானே......
சத்துரு சம்ஹார;சபரிகிரி வாசா சம்புகமாரா மலையோனே..
சஞ்சலம் தீர்த்த சத்திய சொருப

சபரீமலை அருள் மணிகண்டா...
சாமி பொன் ஐயப்பா; சரணம் பொன் ஐயப்பா;
சாமியே சரணம் சரணமப்பா... 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களங்கள் தருபவனே...

வசனம்: -

ஸ்ரீ பூதநாத சதானந்த சர்வபூத தயாபர
ரக்ஷ்ய ரக்ஷ்ய மகா பாஹோ
சாஸ்தே துப்யம் நமோ நமஹ
சர்வ மங்கள நாயகனேய்- சரணமையப்பா!
எங்கள் குல தெய்வமேய்-சரணமையப்பா

மங்களங்கள் தருபவனே! வீரமணிகண்ட மூர்த்தியே வா...
மாலையும் சூடி வந்தோம்! சபரிமாமலை ஏறிவந்தோம்...
எங்கள் குறை தீர்ப்பவனே! ஐயப்பா! எரிமேலி நாயகனே...
திங்கள் முகம் கொண்டவனே!
நீல வண்ணத்திருமாலின் பாலகனே....
சாமியே சரணமப்பா ஐயப்பா! சாமியே சரணமப்பா... -2

பந்தளத்து குமரனே வா! ஐயப்பா!
உந்தன் பாதம் சரணடைந்தோம்
பந்தபாசம் விட்டுவந்தோம்! ஐயப்பா!
சொந்தம் என்று உன்னிடம் வந்தோம்
இருமுடி ஏற்றி வந்தோம்! ஐயப்பா! திருவடிதேடிவந்தோம்....
கரிமலை தாண்டிவந்தோம்! உந்தன்! திருமுகம்
காணவந்தோம்.....
சாமியே சரணமப்பா ஐயப்பா! சாமியே சரணமப்பா... -2

சரணங்கள் போட்டுவந்தோம்! ஐயப்பா!
உன் காதில் கேட்கவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூரம் ஏற்றிவந்தோம்; பாலா! உன்மனம் இரங்கவில்லையா?
சோதனை நீ செய்தாலும்! ஐயனே!
உன் பாதங்களை விடமாட்டோம்...
எங்கள் வேதனைகள் தீர்க்கும் தலம் ! சபரி மலையென்று
நாங்கள் உணர்ந்தோம்
சாமியே சரணமப்பா! ஐயப்பா! சாமியே சரணமப்பா.... -2

வில்லும் அம்பும் விடமாட்டோம்.....
எங்கள் வேதனைகள் தீர்க்கும் தலம் !
சபரி மலையென்று நாங்கள் உணர்ந்தோம்
சாமியே சரணமப்பா! ஐயப்பா! சாமியே சரணமப்பா... -2

வில்லும் அம்பும் கையினில் கொண்டு! ஐயப்பா!
வினைகளை களைந்திடவா!
வில்லாளி வீரனேவா! எங்கள் வீரமணி கண்டனே வா...
உன்நாமம் அமுதமப்பா! ஐயப்பா!
பொன்னம்பலத் தீரணப்பா!
பதினெட்டாம் படித்தலைவா!
புனித காந்தமலை ஜோதியப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிகரபுத்திரன் ஆனந்தமானவன்

அரிகரபுத்திரன் ஆனந்தமானவன் அருள்தரும் ஐயப்பனே!
அந்தமில்லாதவர் சந்தண சுந்தர பந்தளமன்னவனே
சபரிமலைக்கு மாலையணிந்து வந்துபாருங்க -2
சந்தியவேதன் சாஸ்தா நாமம் சரணம் பாடுங்க -2

இந்தபூமியில் எந்தநாளுமே சொந்தம் யாருங்க
வன்புலி வாகனன் மோகினி பாலனின் அருளை தேடுங்க-2
சபரிமலைக்கு மாலையணிந்து வந்துபாருங்க -1
சந்தியவேதன் சாஸ்தா நாமம் சரணம் பாடுங்க -1

அரிகரபுத்திரன்... -2
ஞாயிறு திங்கள் நாட்கள் மாறும்; ஞானம் மாறுமா?
கார்த்திகை மார்கழி காலங்கள் மாறும்; கருணை மாறுமா?
ஆடை அணிகலன் ஆசைகள் மாறும்; அருளில் மாற்றமா?
பூமகள் பாதம் தேடிவரும் பத்தியின் சரணகோசமே... -2
பாவங்கள் யாவும் தீரும் தீண்டும் வினைகள் ஓடுமே... -2
சபரிமலைக்கு மலையணிந்து வந்துபாருங்க -1
சத்தியவேதன் சாஸ்தா நாமம் சரணம் பாடுங்க -1

அரிகரபுத்திரன்... -2
பந்தள நாட்டின் இராஜ்ஜியம் துறந்த தியாக மைந்தனே.....
வன்புலித்தோழன் வாகனமாகி வாழும் வீரனே....
சேனைகள் என்ன சேவகம் என்ன காவல் காக்குமோ..?
மாளிகை மஞ்சம் அரன்மனை என்ன புனிதம் சேர்க்குமா?
பத்தியின் மூலம் பரவசம் காண தவத்தில் மூழ்கினால்... -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகை சொர்க்கம் வையகம் புகழ சபரி ஆழ்கிறான்... -2

சபரிமலைக்கு... -1

அரிகரபுத்திரன்... -2

தங்கமும் வெள்ளி வைரங்கள் தேடும் வாழ்க்கை நாடகம்;
வந்ததை எண்ணி ஆடிடும்
ஆட்டம் என்ன சாஸ்தவம்; வாழ்க்கையின் தத்துவம்
உணர்ந்தால் அவன் அருள்
கிடைக்கும் சத்தியம்; வாவரின் தோழன் வன்புலி வாகனன்
கருணை நிச்சயம்; புகலிடம்
அவனது திருப்பதம் என்றே புகழைப்பாடுவோம்;
நெஞ்சில் நடமிடும் ஐயனின்
சந்நிதி நின்றே அருளை நாடுவோம்... சபரிமலைக்கு.. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் சரணம் சுவாமி சரணம்

சரணம் சரணம் சுவாமி சரணம்;
சரணம் சரணம் சுவாமி சரணம்
படிமீது வந்து நில்லப்பா!
கடினம் கடினம் ஏற்றம் கடினம்; ஏற்றிடவே சுவாமி வரணும்;
வரவேணும் சுவாமி ஐயப்பா
பெருவழி திறந்தது இருமுடிநடந்து
உன்னோட காட்டுவழியில்
இருமுடி சுமக்கையில் இதயம் கணக்குது
உன்பேரை கேட்ட பொழுதில்

பண்டி மலையாளம் படர்ந்து விளையாகும்
உந்தன் பாதம் மாறாதோ சொல்லும் வழியில்
சரணம் சரணம்

பெருவழி திறந்து...... *1*

சுவாமியே ஐயப்போ; ஐயப்போ சுவாமியே சுவாமியே
ஐயப்போ ஐயப்போ சுவாமியே
காட்டுவழியில் கால்களின் பசிஅறியும்;
கட்டுமுடி கண்களின் பசி அறியும்!
கால்களுக்கு தேவை சபரிமலை;
கண்களின் தேவை காந்தமலை!

அழுதை நதிபோல்... விரைந்துது நடக்கும்
பயணவழியில் எதுவும் நடக்கும்.
இந்த பெருவழி, நெடுவழி உதவிட
ஒரு வழி செய்யாது போய்விடுமே... *-2*
சுவாமி மனம் செய்யாது போய்விடுமோ...
ஏத்தம் பல ஏத்தம் ஏறிவரும் கூட்டம்
நம்பியது எல்லாம் பொன்னம்பல வாசம்... *-2*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சரணம்...

பெருவழி திறந்து...
பாதம் பாதம் சுவாமி பாதம்; பாதம் பாதம் சுவாமி பாதம்
கொட்டும் பணி விழுகிற வேளையிலும்;

கட்டுமுடி சூடாய் நடக்கிறதே...
குண்டும்குழி எதிர் கொள்ளும் வேளையெல்லாம்;
சரணம் ஒரு கம்பளம் விரிகின்றதே
மகிஷ குணம் போல் மழையும் அடிக்க!
சபரி திரண்டே பாதை வழுக்க;
அங்கு அரிகரன் சுதன்களும் அடியவர் போல் வரும் வந்து
வந்து எம்மை தாங்கிடுமோ
ஏற்றங்களில் ஏற்றி விளையாடிடுமோ...
சுற்றிவரக்காடு, ஆதரிக்க யாரு, சுவாமி மனம்
வைச்சாகோரும் பம்பையாலும்... 2

சரணம் சரணம்...
பெருவழி திறந்து... -2

பாண்டிமலையாளம்
சரணம் சரணம்...
பெருவழி திறந்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தமலை வேந்தன் அவன் பவனி

காந்தமலை வேந்தன் அவன்பவனி வருகிறான்!
நீல ஆடை கூட்டத்திலே நீந்தி வருகிறான்....
பவனிவருகிறார் சாமி பவனிவருகிறார்

மத்யானை நடைபோட மணிகண்டன்
அதில் ஆட சரணங்கள் பொழிகின்றதே -2
சின்னக்குழந்தையாய் ஒரு சிகரம் அசையிது மௌன
மொழியிலே பல கதைகள் பேசுது
கோடிகண்கள் அதனைக்கண்டு சுகமாய் உருகும்!
அங்கும் இங்கும் சரணகோஷம்
மழையாய்ப் பொழியும்! சாமியே சரணமய்யப்பா...
(மதயானை...)
பூரணநிலைவை பொன்னில் அனைத்து ஐயப்ப சாமின்று
பேரும்கொடுத்து சபரிமலையில்
தவழவைத்து ஊரும் பார்க்குது... 2
பொன்னான மேனியினை வீசிவிடும்
சாமரங்கள் வெண்மேகக் கூட்டங்ளே...
சாமிமாரின் உள்ளங்களோ...
ஐயனைத்தாங்கிய யானைநடக்க
யானை நடக்கையில் ஞானம் பிறக்க
சரணகோஷம் மெல்ல எழுந்து வருமே!
சரண மழையில் சுவாமி இதயம் சுகமே...
குழு- சுவாமியே சரணம்மய்யப்பா...
மத யானை நடைபோட...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிரண்டும் பாசவலையா! நம்ம இழுக்கும் காந்த
மலையா! இதயம் எழுந்து
அவனில் விழுந்து அடைக்கலமாகும்... 2
அரையடி சிலையிலே! அகிலம் மயங்குது!
அரிகரசுதனிடம் உயிரெல்லாம் உருகுது -2
சண்டை ஒளியிலே நாதம் பிறக்க! நாத ஒளியினில் ஞானம்
பிறக்க சரணகோஷம் மெல்ல
எழுந்து வருமே.....சரணமழையில் சுவாமி இதயம் சுகமே...

குழு- சுவாமியே சரணமய்யப்பா
மதயானை நடைபோட மணிகண்டன் அதில் ஆட
சரணங்கள் பொழிகின்றதே -2
சின்னக்குழந்தையாய் ஒரு சிகரம் அசையிது!
மௌன மொழியிலே பல கதைகள் பேசுது
கோடிகண்கள் அதனைக்கண்டு சுகமாய் உருகும்!
அங்கும் இங்கும் சரணகோஷம்
மழையாப் பொழியும்! சாமியே சரணமய்யப்பா...
மதயானை நடைபோட மணிகண்டன் அதில் ஆட
சரணங்கள் பொழிகின்றதே
சரணங்கள் பொழிகின்றதே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடா கண்ணா வா

வாடா கண்ணா வா... ஐயப்பா
வாடா கண்ணா வா... 4
தங்கத்தில் தொட்டில் தாரேன்
வாடா கண்ணா வா
பாலும் சோறும் உண்ணத்தாரேன்
வாடா கண்ணா வா (வாடா கண்ணா)

குளத்துப்புளை பாலகனே
வாடா கண்ணா வா
குறைகளையும் தீர்க்க வேனும்
வாடா கண்ணா வா (வாடா கண்ணா)

பம்பை நதி நீராட
வாடா கண்ணா வா
பந்தளத்து ராஜாவே
வாடா கண்ணா வா (வாடா கண்ணா)

அச்சங்கோவில் அரசே-நீ
வாடா கண்ணா வா
அரியங்காவு ஐயாவே
வாடா கண்ணா வா (வாடா கண்ணா)

# பொன்னூஞ்சல் ஆடுகிறார்!

ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்...... 1
குழு- பொன்னூஞ்சல் ஆடுகிறார்!
ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்... 1
அச்சங்கோவிலில் அரசனாகி ஆனந்த ரூபனாகி
அன்பர்களை காத்திடவே...
ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்! ஐயப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுஞ்சல் ஆடுகிறார்...
ஆதி சத்தி மைந்தனாகி
ஆரியங்கா ஐயனாகி ஆபத்தை தவிர்த்திடவே
ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்!
ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்...
ஏரிமேலி சாஸ்தாவாகி எங்கள் குல தெய்வமாகி
ஏழைகளைக் காத்திடவே...
ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்!
ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்...
ஐங்கரனின் தம்பியாகி ஐயப்ப தெய்வமாகி
ஐயங்களை தீர்த்திடவே...
ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்!
ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்...
சுவாமியே சரணம் சரணம் சரணம்
ஐயப்பா சரணம் சரணம் சரணம்...
சுவாமியே சரணம் சரணம் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா

உடும்பறைக் கோட்டையாகி
உரங்குழி தீர்த்தமாகி உலகத்தை காத்திடவே...
ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்!
ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்...
குளத்தூரில் பாலனாகி குன்றின் மீது அமர்ந்து கொண்டு
குற்றங்களை பொறுத்திடவே...
ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்! ஐயப்பன் பொன்னூஞ்சல்
ஆடுகிறார்......
கம்பன்குடி உடைமையாக்கி காந்தமலை ஜோதியாகி
கன்னிமாரை காத்திடவே....
ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்!
ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்...
பந்தளத்து செல்வனாகி பம்பாநதி தீர்த்தமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தர்களை காத்திடவே...
ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்!
ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்...
சுவாமியே சரணம் சரணம்
சரணம் ஐயப்பா சரணம் சரணம் சரணம்...
சுவாமியே சரணம் சரணம்
சரணம் சரணம் சரணம் ஐயப்பா...

குழு- சுவாமியே...

கற்பூரப்பிரியனாகி கலியுகவரதனாகி
கண்திறந்து பார்த்திடவே
ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்!
ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்...
சபரிகிரி ஈசனாகி சாந்த சொருபனாகி
சந்ததியை காத்திடவே...
ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்!
ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்...
சுவாமியே சரணம் சரணம் சரணம்
ஐயப்பா சரணம் சரணம் சரணம்...
சுவாமியே சரணம் சரணம்
சரணம் சரணம் சரணம் ஐயப்பா...

குழு- சுவாமியே சரணம்...
பகவான் சரணம் பகவதி சரணம்
தேவன் சரணம் தேவி சரணம் ஈஸ்வரன்
சரணம் நாரணன் சரணம் சரணம் சரணம் சரணம் ஐயப்பா
குழு- சுவாமியே சரணம்...
சுவாமியே சரணம் சரணம் சரணம் சரணம் சரணம் ஐயப்பா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்ட நல்ல பொட்டு வச்சு

வட்ட நல்ல பொட்டு வச்சு
வடிவழகாய் இருப்பவனே
வன்புலி வாகனனே ஐயப்பா
வந்து, உண்னை பார்க்க வந்தோம் ஐயப்பா
(வட்ட நல்ல)

எத்தனையோ மலை இருக்கு -2
அத்தனையும் தான் கடந்து -2
சபரிமலை ஆண்டவனே ஐயப்பா
சந்நியாசியாய் நின்றவனே ஐயப்பா
(வட்ட நல்ல)

உச்சிமலை தன்னிலே -2
ஓய்யாரமாய் அமர்ந்தவனே -2
பச்சைமால் வடிவழகா ஐயப்பா
பரதேசியாய் நாங்கள் வாறோம் ஐயப்பா

கண்ணனும் சிவனும் சேர வந்து
கைதனிலே பிறந்தவனே ஐயப்பா
கையப்பா தெய்வமான ஐயப்பா
(வட்ட நல்ல)

எருமேலி பேட்டை துள்ளி -2
பம்பையில் தீர்த்தம் ஆடி -2
நீலிமலை ஒற்றத்திலே ஐயப்பா
நீக்க வைத்து சொக்க வைத்தாய் ஐயப்பா!
எங்களை நீக்க வைத்து சொக்க வைத்தாய் ஐயப்பா!
(வட்ட நல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலத்தமர்ந்தவனே

அம்பலத்தமர்ந்தவனே சபரிகரிஸ்வரா
ஆபத்வாந்தவனே சபரிகிரீஸ்வரா
ஐயன் ஐயப்பனே சபரிகிரீஸ்வரா

நெய்அபிஷேகம் செய்து நாங்கள் நெஞ்சமே உருகிநின்றோம்
பொன்மலை ஜோதி கண்டு
நாங்கள் பரவசமாகி நின்றோம்
கற்பூர ஆளியிலே உண்னைக்கண்டதும் மெய்மறந்தோம்
ஐயா கண்கள் கண்டதே உன்னையே
கொண்டவிரதமும் உண்மையே
கரகோசம் இட்டோமய்யா சுவாமி கைதூக்கி நின்றோமையா

குழு- சுவாமியே சரணம் சுவாமியே சரணம் சரணமய்யப்பா
சரணம் சரணம் சுவாமியே சரணம் சரணமய்யா... -2
நெய் அபிஷேகம் செய்து நாங்கள்
நெஞ்சமே உருகிநிற்கிறோம்
மனதோடு வேண்டி மாலையிட்டு வந்தோம்
சிகரத்தில் ஒளிக்கான என்னய்யனே
மலையாளும் என்னய்யனே
எங்கள் மனதோடு பொய்யில்லையே
வனமாளும் என்னய்யனே இன்று வந்தோமே நெய்யேந்தியே
இருமுடி பாரம் தாங்கி வரும்
யோகம் போதும் சுகமாகும் என்னய்யனே
நலம் சேரும் பொன்னய்யனே

குழு- சுவாமியே சரணம் சுவாமியே சரணம் சரணமய்யா -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சரணம் சுவாமியே சரணம் சரணமய்யா
நெய்அபிஷேகம் செய்து நாங்கள் நெஞ்சமே உருகிநின்றோம்
பொன்மலை ஜோதிகண்டு நாங்கள் பரவசமாகிநின்றோம்
பெரும்பாதை தாண்டி பேரின்பம் கொண்டோம்
மணிகண்டன் உனைக்கண்டு என்னய்யனே
கரும்பாறை ஏறி கானகத்தில் வந்தோம்
பதினெட்டாம் படி வாழும் என் ஐயனே
பகவானே என்னய்யனே நல்லபலம் காட்டு இது நாளிலே
எஜமானே என்னய்யனே என்னை வழிகாட்டு சபரீசனே
உனதடி போற்றி வேண்டி நின்றாலே போதும்
வரம் கூடும் என்னய்யனே
பலம் கூடும் பொன்னய்னே...

குழு- சுவாமியே சரணம் சுவாமியே சரணம் சரணமய்யப்பா
சரணம் சரணம் சுவாமியே சரணம் சரணமய்யா...-2

நெய்அபிஷேகம் செய்து நாங்கள் நெஞ்சமே உருகிநின்றோம்
பொன்மலை ஜோதி கண்டு நாங்கள் பரவசமாய் நிற்கின்றோம்
கற்பூர ஆளியிலே உண்ணைக்கண்டதும் மெய்மறந்தோம்
ஐயா கண்கள் கண்டதே உண்னையே
கொண்டவிரதமும் உண்மையே
கரகோசம் இட்டோமய்யா
சுவாமி கைதூக்கி நிற்கின்றோமையா

குழு- சுவாமியே சரணம் சுவாமியே சரணம் சரணமய்யப்பா
சரணம் சரணம் சுவாமியே சரணம் சரணமய்யா...-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் வாழும் சாந்தசொரூபா

குழு- காட்டினில் வாழும் சாந்த சொருபா ஐயப்பா -2
காத்திடும் எங்கள் பந்தள வீர ஐயப்பா -2
வில்லும் அம்பும் கையிலேந்தும்
வீரன்தானே ஐயன் ராஜகம்பீரமே
கல்லும் முள்ளும் மெத்தையாகும்
மாயம் தானே நம்ம ஐயன் தேய்வீகமே
அழகாக நீ வருவாயே புலி மீதினிலே உனக்கான
பெருங்கூட்டம் புவிமீதிலே
வழிகாட்டும் குருநாதனே நீயே
துணையாகும் குலதெய்வமே -2
குழு- நாலு வேதம் நாளும் சொல்லி போற்றிகின்றோமே- 2
ஆறுகால பூசை செய்து வேண்டுகின்றோமே - 2
வில்லும் அம்பும் கையிலேந்தும் வீரன்தானே
ஐயன் ராஜகம்பீரமே
கல்லும் முள்ளும் மெத்தையாகும்
மாயம் தானே நம்ம ஐயன் தேய்வீகமே
திருநாமம் சொல்லியே திருந்து
இட்டதும் வருகின்ற வினைதானே மாய்ந்திடுதே -2
மணம் வீசும் சந்தனம் நாம் சூடவே -2
அஞ்ஞானம் பறந்தோடுமே தூய
மெஞ்ஞானம் தான் கூடும் வாழ்வினிலே
குழு- நாலு வேதம் நாளும் சொல்லி போற்றிகின்றோமே- 2
ஆறுகால பூசை செய்து வேண்டுகின்றோமே - 2
வில்லும் அம்பும் கையிலேந்தும்
வீரன்தானே ஐயன் ராஜகம்பீரமே
கல்லும் முள்ளும் மெத்தையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயம் தானே நம்ம ஐயன் தேய்வீகமே
அழகாக நீ வருவாயே புலி மீதினிலே உனக்கான
பெருங்கூட்டம் புவிமீதிலே
வழிகாட்டும் குருநாதனே நீயே
துணையாகும் குலதெய்வமே -2

குழு- நாலு வேதம் நாளும் சொல்லி போற்றிகின்றோமே- 2
ஆறுகால பூசை செய்து வேண்டுகின்றோமே - 2

## புவி போற்றும் மலைகளிலே

புவிபோற்றும் மலைகளிலே புனித மலை எந்த மலை...
கேரள நாட்டினிலே கீர்த்தி மலை எந்த மலை...
தேடிவந்தோர் மனங்குளிர செய்யும் மலை எந்த மலை

சாமி ஐயப்பா சரணம் என்னும் சபரிமலை
சபரி மலை ஆ... ஆ... ஆ...
சபரிமலை...... சபரிமலை...
சாமியே சரணம் ஐயப்பா...
சபரி மலை நாயகனே ஐயப்பா...
சபரி மலை நாயகனே ஐயப்பா...
சத்திய தவக்கொழுந்தே ஐயப்பா....தேவா...
சபரி மலை நாயகனே ஐயப்பா
சத்திய தவக் கொழுந்தே ஐயப்பா...தேவா....
சபரிமலை நாயகனே ஐயப்பா
சத்திய தவக் கொழுந்தே ஐயப்பா....தேவா
சபரி மலை நாயகனே ஐயப்பா
திருவடி மலையில் இருமுடி தலையில்
திருவடி மலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுடி தலையில் ஐயா உனது தரிசனம் கண்டிடவே
சபரி மலை நாயகனே ஐயப்பா...
சத்திய தவக் கொழுத்தே ஐயப்பா... தேவா...
தை மாத சங்கராந்தி சாஸ்தாவின் திருநாளே
பத்தர்கள் பெரும் கூட்டம் ஐயப்பா...

ஆ.........ஆ......... -02
சபரிமலை நாயகனே ஐயப்பா...
சத்திய தவக் கொழுந்தே ஐயப்பா...தேவா...
சாமியே ஐயப்பா சரணம் என்றே சொல்வேன்

ஆ......ஆ....ஆ...
சாமியே ஐயப்பா சரணம்
தீவினை தீர்ப்பதற்கு தேடி வருவேன் -02
ஐந்து மலை ஏறி அம்பலம் வந்தடைவேன்
பதினெட்டு படி கடந்து பார்த்தேனே -02
சபரி மலை...... சத்திய......
அரிகர புத்திர ஐயப்ப தேவனை மறவேன் நான் மறவேன்.
சரணம் சரண் என சபரிமலைக்கே வருவேன்
நான் வருவேன் - 02
பந்தன பாலகனே ஞான போதகனே -02
பார்ப்பதெல்லாம் உனது முகம் அது பரவசமே
நாற்பது நாள் விரதமும் பலித்தது தேவா -02
காந்த மலை கண்மணியே
காந்தம் என்றும் தத்துவமே - 02
உனதிரு விழிகளும் கருணையை பொழியுது
அழகிய வடிவினில் நெய்யால் வழியுது -02
சாமியே சரணம்

ஐயப்பா...ஆ...ஆ...ஆ...
மகர ஜோதி காந்த மலை நாதா

சபரி மலை... சத்திய...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தள மன்னனுக்கு

பந்தள மன்னனுக்கு கிடைத்த முத்தல்லவோ -2
பம்பையின் ஓரம் தவழும் நிதியல்லோ -2
மணிமுத்தல்லோ......சுவாமி மணிகண்டனல்லோ...
மலையாள நாட்டின் பெருமை ஈஸ்வரனல்லோ... -2
பந்தள மன்னனுக்கு... -1
சங்கரன் மைந்தனே ஐயப்பா... -2
சங்கடத் தொல்லைகள் ஒழிப்பவனே... -2
திருமுக வடிவே காணே நான்! சந்நிதி தேடி வருவேனே -2

கலியுகவரதா கருணைக்கடலே சரணாகதி நீ தற்தருள்வாய் -2
(சரணாகதி தந்தருள்வாய்)

பந்தா மன்னனுக்கு
பரந்தாமன் மகன் ஐயப்பா... -2
மனதிலே வந்து நிறையப்பா... -2
திருவா பரணம் அணிந்திடும் உன் -2
திருக்கோலத்தைக் கண்டேன்... -2

கலியுகவரதா கருணைக்கடலே சரணாகி நீ தந்தருள்வாய் -2

சரணாகி நீ தந்தருள்வாய் (பந்தள மன்னனுக்கு...)
பரந்தாமன் மகன் ஐயப்பா... -2
மனதிலே வந்து நிறையப்பா... -2
திருவாபரணம் அணிந்திடும் உன் -2
திருக்கோலத்தைக் கண்டேனே... -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகவரதா கருணைக்கடலே சரணாகதி நீ தந்தருள்வாய் -2
(சரணாகதி நீ தந்தருள்வாய்)

பந்தள மன்னனுக்கு கிடைத்த முத்தல்லவோ -2

பம்பையின் ஓரம் தவழும் நிதியல்லோ -2

மணிமுத்தல்லோ... சுவாமி மணிகண்டனல்லோ...

மலையாள நாட்டின் பெருமை ஈஸ்வரனல்லோ... -2

பந்தள மன்னனுக்கு...

# உலகாளும் ஐயப்பன் ஐயப்பா

உலகாளும் ஐயப்பன் ஐயப்பா
என் மனக்கோயில் தீபம் நீயப்பா... -2
அருள் நிறைந்திட இருள் மறைந்திட
கலைமலர்ந்திட நிலை உயர்ந்திட
வளம் வளர்ந்திட நலம் விளைந்திட
வினையகன்றிட வழி பிறந்திட
சபரிமலைக்கு செல்வோம்.
சந்நிதியில் கூடுவோம் சரணகீதம் பாடுவோம்

உலகாளும்... -2
அறியாமை இருள்நீங்க அறிவென்னும் சுடரேந்தும்
அணையாத அருள் ஜோதி
நீயல்லவா... -2

தெரியாமல் நான் செய்த பிழை தன்னை மன்னித்து
அன்போடு அருள் சிந்தும்
தாயல்லவா? திசையோடு உன்புகழை எடுத்து சொல்லவா!
அருள்நிறைந்திட இருள் மறைந்திட கலை மலர்ந்திட... -4
உலகாளும்... -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினையாத பொழுதில்லை நீயின்றி கதியில்லை மனதோடு
மணிமாலை மணிகண்டனே
திசையேதும் தெரியாது மொழிபேதம் கிடையாது பலகோடி
மனம் பாடும் ஒரே மந்திரம்
பந்தளத்து சாஸ்தாவின் திருமந்திரம்.........
அருள்நிறைந்திட............

பிறக்கின்ற விழியோரம் திருமுகமே வரவேண்டும்
ஒலிக்கின்ற சொல்லெல்லாம் உன்நாமமே
மறையாத ஒளி நீயே! மறைவேதப் பொருள் நீயே!
மனம்மாளும் பரிகாரம் உன் பாதமே! உனை நாளும் மறவாத
மனம் போதுமே

அருள் நிறைந்திட...
உலகாளும்... -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சபரிசா பம்பா வாசா

குழு - ஸ்ரீ சபரீசா பம்பா வாசா.....-4

தனி - என்னை மறக்கலயா மாமலை வாசா சபரீசா... -2

என்னை வெறுக்கலையா மாமலை வாசா

சபரீசா... -2

என்னை மறக்கலயாஎன்னை வெறுக்கலையா

என்னில் வரல்லே ஐயா மாமலை வாசா சபரீசா...

பொன்னும் மறந்தில்லையா மாமலை வாசா

சபரீசா... -2

என்னை மறக்கலயா மாமலை வாசா சபரீசா... -2

ஆர்சீத வல்சலனே அபய மோகனம் வையாதே... -2

மாய மனோகரனே...அபய மேகனம் வையாதே... -2

ஆர்ச்சிரத வப்சலனே! மாயமனோகரனே!

ஆனந்த நாயகனே அபய மேகனம் வையாதே...

ஆராத்ய நல்ல தேவா மாமலை வாசா சபரீசா...

என்னை மறக்கலயா மாமலை வாசா சபரீசா...

என்னை வெறுக்கலையா மாமலை வாசா சபரீசா...

ஸ்ரீ சபரீசா பம்பா வாசா... -4

பிரமாண்ட நாயகனே பிரம்ம சொரூபனே ஐயப்பா!

பிராமண வஞ்யனே பல தாயகன் ஐயப்பா... -2

பிரம்மாண்ட நாயகனே! வைரவ பூஜ்ஜிதனே!

பிராமண வஞ்யனே

மாமலை வாசா ஐயப்பா

(அரிசிவன் அந்தணனே மாமலை வாசா சபரீசா)

என்னை மறக்கலையா மாமலை வாசா சபரீசா

என்னை வெறுக்கலயா மாமலை வாசா சபரீசா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சபரீசா... -4

வானவர் எல்லோரும் பாடித்துதிக்கும் நதின்னானே...

வானவர் எல்லாரும் ஓடி ஒளிக்கும் நதின்னானே...-2

வானவர் எல்லாம்! கானவர் எல்லாரும்!

மானுக்ஷ்யர் எல்லாரும்

நொந்து விழிக்குமே சாமி சாமியப்பா...

பாவங்கள் எல்லாம் முன்னிஒடுக்கும் நதின்னானே...-2

என்னை மறக்கலயா மாமலை வாசா சபரீசா...

என்னை வெறுக்கலயா மாமலை வாசா சபரீசா...

ஸ்ரீ சபரீசா.... -4

வந்தேறும் பொன்மலையில்

நெய்மணக்கும் நதின்னானே... -2

வந்தேறும் பொன்மலையில்! 18 பொன்படியில்! ஐயப்பன்

திருநடையில் தொழுது கூடுவோமே...

(ஆயிரம் நாங்கள் ஐயன்ர நாமம் துதிக்கின்ற

ந.தின்னானே.......-2

என்னை மறக்கலயா மாமலைவாசா சபரீசா...

என்னை வெறுக்கலயா மாமலை வாசா சபரீசா...

ஸ்ரீ சபரீசா.......... -4

பீரிகப் பூவிரிஞ்யே! பூங்காவனத்திண்ட மேடுகளில்

மண்டலப் பூவிரிஞ்யே ஐயப்பன் மாருட உள்ளுறையில்

பிரீக்ஷ்ரிகப் பூவிரிஞ்யே! மண்டலப் பூவிரிஞ்யே! கதிரவப்

பிரபஞ்ச சொரிந்தே

கானெனத் நிந்தை அருள்தளத்தில்.

கன்னிக் கறையப்பன் மார் மாமலை தாண்டி நடந்திடுமே...-4

கன்னிக் கறையப்பன் மார் சந்நிதி தேடி வந்திடுமோ... -4

ஸ்ரீ சபரீசா... -4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகவாசத்திலே

சுவாமியே...... சரணமய்யப்போ...

குழு : பூதநாதமே ஜோதிரூபமே கானகவாசகமே...
கோடி கோடியாய் உந்தன் கால்களில் சரணம்
சமர்ப்பணமே...-2
கானகவாசத்திலே... காந்தமலை மேட்டுநிலே
கனக வாசனேய்...
கானகவாசத்திலே காந்தமலை மேட்டுநிலே
கருப்பண்ணசாமியென வாழும் குருசாமிகளே...
ஐயப்பா; ஐயப்பா; வனராஜாஐயப்பா; ஆண்டுக்கு
ஒருமுறை வருவோமே
பாரப்பா- 02
மலையில் ஆடும் மணிகண்டா!
மாமுனி உன்னைப் போலுண்டா
இருமுடி சுமந்து மலையேறி!
உன்னைக்காண வழியுண்டா
(விரதம் ஏற்று மலையில் ஏற்று சாமி சரணம் ஐயப்பா) -2

கானக வாசத்திலே காந்தமலை மேட்டிநிலே...
கறுப்பண்ண சாமியென வாழும் குரு சாமிகளே...

குழு : ஆரண்ய வாசமே... சரணமய்யப்போ...
வேடன்போல, வேடம் பூண்டு, காடு ஏறும் சுவாமியே
வேங்கை போல, சீறும் மனதை அடக்கியாள
வேண்டுமே
பாண்டிநாடு தேடுகின்ற பரமன் போன பாதையில்
பாவி எங்கள் பாதம் தேய பயணம் போக வேண்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : மெய்ப்பசி கண்டார்க்கு சோறுட்ட தாயுண்டு
அருட்பசி எடுத்தார்க்கு ஐயா! உண்ணை விட்டால்
வேறு யார் உண்டு
எங்கள் குல தெய்வமே...
(குருசாமி நீதானப்பா! நல்ல வழிகாட்டி மலையேற்றப்பா! -2
மாலையில் ஆடும் மணிகண்டா! மாமுனி
உண்னைப்போலுண்டா
இருமுடி சுமந்து மலையேறி உன்னைக்கான வழியுண்டா
(விரதம் ஏற்றுமலையில் ஏற்று சாமி சரணம் ஐயப்பா!

கானக வாசத்திலே காந்த மலை மேட்டினிலே
கறுப்பண்ணசாமியென வாழும் குருசாமிகளே.....

குழு : கரிமலைநாதனே... சரணமய்யா...
ஜோதிலிங்கம் ஈன்ற தங்கம் ஜோதி உண்னைக்கானவே
கோடி கோடி முடியும் சூழ சபரி மலையில் ஏறவே...
பாதம் பாதம் என்று கேட்கும் பரம பாக்கியம்
தாருமே...
ஏழு கோட்டை ஏறிவாழும் எங்கள் பூத நாதமே......
slow- கடுமையான விரதம் வேண்டும்; காடு மலை ஓட
வேண்டும்
காந்தமலை ஜோதி உன்னைக்காண கண்களுக்கோர்
ஜீவன் வேண்டும்
எங்கள்குல தெய்வமே...
(குறையாவும் பொறுப்பாயப்பா! எம்மை மலையேற
அழைப்பாயப்பா... -2
மாலையில் ஆடும் மணிகண்டா! மாமுனி உன்னைப்
போலுண்டா!
இருமுடி சுமந்து மலையேறி உன்னைக்காண
வழியுண்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(விரதம் ஏற்று மலையில் ஏற்றுசாமி சரணம் ஐயப்பா!-2
கானக வாசத்திலே காந்த மலை மேட்டினிலே
கறுப்பண்ணசாமி யெனவாழும் குரு சாமிகளே
ஐயப்பா; ஐயப்பா வனராஜா ஐயப்பா! ஆண்டுக்கு ஒருமுறை
வருவோமே பாரப்பா! -2
மலையில் ஆடும் மணிகண்டா! மாமுனி உன்னைப் போலுண்டா!
இருமுடி சுமந்து மலையேறி உன்னைக்காண வழியுண்டா
(விரதம் ஏற்று மலையில் ஏற்றுசாமி சரணம் ஐயப்பா!-2
கானக வாசத்திலே காந்த மலை மேட்டினிலே...
கறுப்பண்ணசாமி யெளவாழும். குருசாமிகளே...

குழு : பூதநாதமே ஜோதிரூபமே கானக வாசகமே-கோடி
கோடியாய் உந்தன் கால்களில் சரணம்
சமர்ப்பணமே... -4

குழு : சரணம் சரணம் ஐயப்பா. சாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தள ராஜனைத் தேடி

பந்தளராஜா ஐயப்பா! பம்பாவாசா ஐயப்பா! வில்லாலிவீரா ஐயப்பா! வீரமணிகண்டா ஐயப்பா!

பந்தளராஜனைத் தேடி ஒருபடையொன்று போகுது சாமி...
கானக வாசனைத்தேடி நல்ல காணிக்கை போகுது சாமி...
அரியாசனம் அறியாதவன் சிறுபாலகன் குருசாமி...
அவன் மேனியில் நகைக்கூட்டமே பரிவாரம் போகுது சாமி...

குழு : பந்தள நாட்டு சீதனமாம் போவது சபரி கானகமாம்-2
பந்தளராஜனைத் தேடி ஒருபடையொன்று போகுது சாமி...
கானக வாசனைத்தேடி நல்ல காணிக்கை போகுது சாமி...
சிறுமதி படைத்தவன் அரிகர சுதன்தனை காட்டுக்கு அனுப்பிவைக்க...
குருமுனி என அவன் தனிமையிலே நின்று மாதவம் புரிந்திருக்க...
மகன் நலம் நலம் பெற மன்னவன் பொன்னகை சபரிக்கு போகுதய்யா
தைமுதல் மாலையில்; தங்கமே பூட்டிட தவழ்ந்தே செல்லுதய்யா... -2

குழு : பந்தள நாட்டு சீதனமாம் போவது சபரி கானகமாம்-2
பந்தளராஜனைத் தேடி ஒருபடையொன்று போகுது சாமி...
கானக வாசனைத்தேடி நல்ல காணிக்கை போகுது சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதகரி உலவிடும்; சிவஹரி பாலகன் ஆபரணம் காக்க
விறு விறு என ஒரு கருடனும் வானத்தில் கவரிகளே
வீச...
அடியவர் நெய்மணம்; அணியென அணிந்திடும்
ஆண்டவனை சேர...
துந்துவி முழங்கிட பந்தள சேனையும் புயலாய்
விரைந்திருக்க...

குழு : பந்தள நாட்டு சீதனமாம் போவது சபரி கானகமாம்-2
பந்தளராஜனைத் தேடி ஒருபடையொன்று போகுது
சாமி...
கானக வாசனைத்தேடி நல்ல காணிக்கை போகுது
சாமி...
அரியாசனம் அறியாதவன் சிறுபாலன் குரு சாமி...
அவன் மேனியில் நகைக் கூட்டமே பரிவாரம் போகுது
சாமி...

குழு : மந்தள நாட்டு சீதனமாம் போவது சபரிகானமாம்...-2
இருமுடிப்பிரியா ஐயப்பா! ஈசனின் மைந்தா ஐயப்பா!
சந்தணபிரியா ஐயப்பா!
சச்சிதானந்த ஐயப்பா!
சரணம் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கட்டு சபரிமலைக்கு

பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை;
சுவாமியே சரணமய்யப்பா......3
நெய் அபிஷேகம் சுவாமிக்கே,
கற்பூரதீபம் சுவாமிக்கே, பாலபிஷேகம் சாமிக்கே,
கும்பாவிசேகம்...
சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே
கட்டுண்ண கட்டு கட்டு இருமுடி கட்டு;
யாரோடகட்டு இது ஐயனே கட்டு-2
குருசுவாமி கையிலே இருமுடிகட்டு;
இரு வினைபோக்கிடுமே
ஐயப்பனோட கட்டு;
மண்டல விரதமிருந்து இரு முடிக்கட்டு
மகரத்தில் ஜோதிகாட்டும் ஐயனோட கட்டு......
பந்தளத்தில் கட்டின கட்டு, பாலமணிகண்டனின் கட்டு;
எந்தை இறை ஈசனை தொட்டு தந்தை அன்று கட்டின கட்டு
(இரு முடி கட்டு கட்டு)

இருமுடி கட்டு சபரிமலைக்கு;
நெய் அபிஷேகம் மணிகண்டனுக்கு
அவலும் மலரும் சுவாமிக்கே தொடரும் பயனும் சாமிக்கே
சரணகோசம் சாமிக்கே சகல செல்வம் சாமிக்கே...
சாமியே ஐய்யப்பா; ஐயப்போ சாமிக்கே
கட்டுண்ண கட்டுண்ணா கட்டுண்ணா கட்டு கட்டு
இருமுடி கட்டு; யாரோடகட்டு இது ஐயனே கட்டு...-2
கட்டுண்ண கட்டுண்ணா கட்டுண்ணா கட்டு கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுடி கட்டு; யாரோடகட்டு இது ஐயனே கட்டு... -2
பெரும்பாதை வழிநடக்க இருமுடிக்கட்டு
யாத்திரையை காத்திடவே இருமுடிக்கட்டு
கன்னியம் காத்து நிற்கும் இருமுடிக்கட்டு
புண்ணியம் சேர்த்திடுமே ஐயனோடகட்டு
முத்திரக்காய் நெய்யுமிட்டு மஞ்சள் பொடி குங்குமமிட்டு
சந்தனம்,பன்னீரிட்டு, சந்நிதிக்கே கட்டு கட்டு
இருமுடிகட்டு; அச்சுவெல்லம் வெற்றிலை இட்டு
கற்பூரமும் கற்கண்டு இட்டு ;அவல் பொரி அரிசியுமிட்டு
முந்திரியும் நலத்தில் இட்டு (இருமுடிக்கட்டு சபரிமலைக்கு
கற்பூரதீபம் மணிகண்டனுக்கு-2
தேனாபிக்ஷேகம் சுவாமிக்கே; சொர்ணா அபிசேகம் சாமிக்கே
பத்மாபிக்ஷேகம் சுவாமிக்கே; பாலாக்ஷேகம் சாமிக்கே.....
சாமியே ஐயப்போ; ஐயப்போ சாமியே

கட்டுண்ணா-1

கட்டுண்ணா கட்டுகட்டு இருமுடிகட்டு;
சுவாமிமாரின் கட்டு இது
ஐயனோடகட்டு -2 பொய்யின்றி மெய்யோடு இருமுடிகட்டு;
புறப்பட்டு திரும்பும் வரை; ஐயனோட கட்டு
அன்னை தந்தை அடிபணிந்து இருமுடிகட்டு;
இன்னும் பல ஏற்றம் ஏற்றும் ஐயனோட கட்டு
சாத்திரத்தை மனதில் இட்டு; ஏற்றிவைச்சபள்ளிக்கட்டு
இறக்கனும் குருவைத் தொட்டு,
மனதை சேர்த்துக்கட்டு இருமுடிகட்டு கட்டு
படியொரு பதினெட்டு; கடந்திட முடிகட்டு;
பகவான் அடிதொட்டு
பணிந்திட கட்டும் கட்டு; ஐயனோட கட்டு கட்டு
இரு முடிகட்டு சபரிமலைக்கு;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிப்பொன்னும் மணிகண்டனுக்கு
பஜனைப்பாடல் சுவாமிக்கே; அன்னதானம்
சுவாமிக்கே...சரணவிளியும் சாமிக்கே...
யாத்திரைப்பலனும் சாமிக்கே... சுவாமியே ஐயப்போ
ஐயப்போ சுவாமியே
கட்டுண்ண கட்டுண்ணா கட்டுண்ணா கட்டு கட்டு
இருமுடி கட்டு; யாரோடகட்டு இது ஐயனே கட்டு...-2
நெய் அபிஷேகம் சுவாமிக்கே, கற்பூரதீபம் சுவாமிக்கே,
பாலபிஷேகம் சாமிக்கே, கும்பாவிசேகம் சாமிக்கே
அவலும் மலரும் சுவாமிக்கே தொடரும் பயனும் சாமிக்கே
சரணகோசம் சாமிக்கே சகல செல்வம் சாமிக்கே...
தேனாபிஷேகம் சுவாமிக்கே; சொர்ணா அபிசேகம் சாமிக்கே
பத்மாபிஷேகம் சுவாமிக்கே; பாலாஷேகம் சாமிக்கே...
பஜனைப்பாடல் சுவாமிக்கே; அன்னதானம் சுவாமிக்கே...
சரணவிளியும் சாமிக்கே... யாத்திரைப்பலனும் சாமிக்கே...
சுவாமியே ஐயப்போ ஐயப்போ சுவாமியே
சுவாமியே ஐயப்போ..... சரணம்மய்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து மலையில் அருளும் தெய்வம்

ஐந்துமலையில்; அருளும் தெய்வம்
ஐயன்நடைவழி திறக்கிறதே...
சரணமழையில் உருகும் தெய்வம் சாமிதிருமுகம் தெரிகிறதே
ஜோதி தரிசனம் அழைக்கிறதே... -2

குழு : அரிகரசுதனுக்கு சரணமய்யா ஐயப்பசாமிக்கு
சரணமய்யா... 2
ஐந்துமலையில்; அருளும் தெய்வம் ஐயன்நடைவழி
திறக்கிறதே...
சரணமழையில் உருகும் தெய்வம் சாமி திருமுகம்
தெரிகிறதே...
ஜோதி தரிசனம் அழைக்கிறதே.....-2
அஞ்சுமலை ஏற்றம்; நெஞ்சில் எழும் பொழுது
சஞ்சலங்கள் யாவும் மறைகிறதே
பம்பை நதித்தீர்த்தம் மூழ்கி எழும்போது பக்தனது
பாவம் தொலைகிறதே
வழிகாட்டுமே ஐயன் புலிக்கூட்டமே; வலிபோக்குமே
பூங்காவனத்தோட்டமே....
மனம் தேற்றுமே; அஞ்சுமலை ஏற்றமே
பசியாற்றுமே பச்சை பசுந்தோற்றமே...

குழு : அரிகரசுதனுக்கு சரணமய்யா ஐயப்பசாமிக்கு
சரணமய்யா... 2
ஐந்துமலையில்; அருளும் தெய்வம் ஐயன்நடைவழி
திறக்கிறதே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணமழையில் உருகும் தெய்வம் சாமி திருமுகம்
தெரிகிறதே...
ஜோதி தரிசனம் அழைக்கிறதே... -2
எட்டடுக்கு தேகம்; கட்டெடுக்கும் போதே
தொட்டகுறையாவும் விலகிடுமே
நெய்மணக்கும் பாரம் மெய்சுமக்கும் பொழுது
மெய்அழைக்கும் பாதை புரிந்திடுமே
முடி பாரமே; ஒரு முடி சூட்டுமே-படி ஏற்றமே ஒருபடி
ஏற்றுமே அருள் கூட்டுமே....
ஐயன் எழில் தோற்றமே...வரம் கூட்டுமே அந்தவனக்
கோட்டமே

குழு : அரிகரசுதனுக்கு சரணமய்யா ஐயப்பசாமிக்கு
சரணமய்யா... 2
ஐந்துமலையில்; அருளும் தெய்வம் ஐயன்நடைவழி
திறக்கிறதே...
சரணமழையில் உருகும் தெய்வம் சாமி திருமுகம்
தெரிகிறதே...
ஜோதி தரிசனம் அழைக்கிறதே... 2

குழு : அரிகரசுதனுக்கு சரணமய்யா ஐயப்பசாமிக்கு
சரணமய்யா... 2
ஐந்துமலையில்; அருளும் தெய்வம் ஐயன்நடைவழி
திறக்கிறதே...
சரணமழையில் உருகும் தெய்வம் சாமி திருமுகம்
தெரிகிறதே...
ஜோதி தரிசனம் அழைக்கிறதே... -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமியே சரணமய்யப்பா
# நெய் அபிஷேகப்பிரியனே

குழு: *சுவாமியே சரணமய்யப்பா*
*நெய் அபிஷேகப் பிரியனே சரணமய்யப்பா*
*மூன்று கண்ணு தேங்காய் அதில் நெய்யை நிரப்பி வைத்து*
*அந்த அஞ்சுமலை ஏறி அவன் பாதம் பணிந்திடனும் 2*
*ஏற்றிடு ஏற்றிடு எங்கள்மேலே நம்பிக்கை வைச்சோம் உன்னருள் மேலே*
*வேண்டிட வேண்டிட வந்தருவாயே மோகனசுந்தரனே -2*

குழு: *ஜோதியே ஜோதியே ஐயப்பா ஆனந்த ஜோதியே நீயப்பா*
*பம்பா விளக்கே ஐயப்பா சரணம் உனக்கே ஐயப்பா-1*
*மூன்று கண்ணு தேங்காய் அதில் நெய்யை நிரப்பி வைத்து அந்த அஞ்சுமலை எறி அவன் பாதம் பணிந்திடனும் -1*
*தாங்கும் இருமுடிதான் அது ஐயன் திருவடிதான் விதி பாரம் குறைச்சிடும் தான் நம்ம பாவம் மறைஞ்சிடும் தான் -2*
*சொல்லுங்க சொல்லுங்க ஐயனின் நாமம் சொல்லிட சொல்லிட வந்திடும் யோகம் -2*
*கல்லென முள்ளென்ன காடென்ன மேடென்ன நாதன் இருக்கையிலே*

குழு: *ஜோதியே ஜோதியே ஐயப்பா ஆனந்த ஜோதியே நீயப்பா*
*பம்பா விளக்கே ஐயப்பா சரணம் உனக்கே ஐயப்பா! -1*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று கண்ணு தேங்காய் அதில் நெய்யை நிரப்பி
வைத்து அந்த அஞ்சுமலை எறி அவன் பாதம்
பணிந்திடனும்-1
கரிமலைஏறி நாம இறங்கிடும் போது நம்ம அரிகரன்
தானே வந்துகைகொடுக்கப்படும் -2
ஐயனின் சத்தியை வந்திங்கு பாரு சொன்னது
சொன்னது சத்தியம்பாகு -2
நாளென்ன பொழுதென்ன விளையென்ன செய்யும்
ஐயன் இருக்கையிலே -2

குழு: ஜோதியே ஜோதியே ஐயப்பா ஆனந்த ஜோதியே
நீயப்பா
பம்பா விளக்கே ஐயப்பா சரணம் உனக்கே ஐயப்பா! -1
மூன்று கண்ணு தேங்காய் அதில் நெய்யை நிரப்பி
வைத்து அந்த அஞ்சுமலை எறி அவன் பாதம்
பணிந்திடனும்-1
தூய பதினெட்டுபடியில் புறம்படும்போது வரும்
துன்பம் நொடியினிலே நம்மை விட்டு பறக்குதய்யா -2
கற்பூர ஆரார்த்தி காட்சியப்பாடு! சத்திய மூர்த்தியின்
கீர்த்தியப்பாடு -2
ஆதியும் நீதியும் ஜோதியுமாகி வாழும் குருபரனே... -2

குழு: ஜோதியே ஜோதியே ஐயப்பா ஆனந்த ஜோதியே
நீயப்பா
பம்பா விளக்கே ஐயப்பா சரணம் உனக்கே ஐயப்பா! -1
மூன்று கண்ணு தேங்காய் அதில் நெய்யை நிரப்பி
வைத்து அந்த அஞ்சுமலை எறி அவன் பாதம்
பணிந்திடனும்-1

குழு: சுவாமியே சரணமய்யா
காந்தமலை மேலே நம்ம சாந்த மகாசாசன் அந்த வான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியினிலே ஒரு ஜோதியாய் வந்தானே -2

ஆயிரம் ஆயிரம் சூரியன் இங்கே! பாருங்க பாருங்க
ஐயனை அங்கே -2
பாத்திட பாத்திட கண்ணளும் கோடி தந்திடு என்
ஐயனே... -2

குழு: ஜோதியே ஜோதியே ஐயப்பா ஆனந்த ஜோதியே
நீயப்பா -1
பம்பா விளக்கே ஐயப்பா சரணம் உனக்கே ஐயப்பா! -1
மூன்று கண்ணு தேங்காய் அதில் நெய்யை நிரப்பி
வைத்து அந்த அஞ்சுமலை எறி அவன் பாதம்
பணிந்திடனும்-2
ஏற்றிடு ஏற்றிடு எங்கள மேலே நம்பிக்கை வைச்சோம்
உன்னருள் மேலே - 2
வேண்டிட வேண்டிட வந்தருள்வாயே மோகன
சுந்தரனே -2

குழு: ஜோதியே ஜோதியே ஐயப்பா ஆனந்த ஜோதியே
நீயப்பா -1
பம்பா விளக்கே ஐயப்பா சரணம் உனக்கே ஐயப்பா! -1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாதி தேவன் திருவருள்

தேவாதிதேவன் திருவருள் நேசன் கண்கண்ட தெய்வம்
மாமலைவாசன் கருணையின் தோற்றம் அவனை தேடிச்
சொல்லுவோம்! கருணையின் தோற்றம்
அவனை நாடி செல்லுவேன் - 2
காடென்று சொன்னார் சபரிமலையில்;
காடொான்று அங்கே இல்லை
பூஞ்சோலையைக் கண்டேன் பூரித்து நின்றேன்;
தன்னை மறந்தேன்... -2

குழு: தேடிச்செல்லுவோம்; அவனை நாடிச்செல்லுவோம் -2
தேவாதிதேவன்-1
கல்லென்று சொன்னார்; முள்ளென்று சொன்னார்கள்
கண்ணில்
தெரியவில்லை கும் இருட்டென்று சொன்னான்
சொர்க்கத்தைக் கண்டேன் சபரி மலையிலே

குழு: தேடிச்செல்லுவோம்; அவனை நாடிச்செல்லுவோம் -2
தேவாதிதேவன் -1
அழுதை ஏற்றம் கரிமலை கடினம்; ஏறிடவேண்டும்
என்றார்
நீலிமலை அடைந்து ஐயனைக் கண்டேன்
கடினம்தொரியவில்லை -2
குழு தேடிச்செல்லுவோம்; அவனை
நாடிச்செல்லுவோம் -2

தேவாதிதேவன்-2
குழு: கருணையின் தோற்றம் ஆளை தேடிச் செல்லோம்;
கருணையின் தோற்றம்
அவனைநாடிச் செல்வோம் -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமிக்கெல்லாம் சாமியப்பா

சாமிகெல்லாம் சாமியப்பா;
பந்தாளத்து பாலகனே என் ஐயப்பா... -2
நீ நாடுவிட்டு காடுபோன தேன்னய்யப்பா -2

குழு:- நீ நாடுவிட்டு காடுபோன தேன்னய்யப்பா!
காடுமலை மேடு அதில்; ஆதரவு யாருமில்லை ;
தன்னந்தனியனாக வாழும் பொன்னையா

அன்பு உண்டு ஆசையுண்டு பக்தியுண்டு, பஜனையுண்டு
என்மனது கோயிலுக்கு வந்து பாருப்பா... -2
சாமிக்கெல்லாம் சாமியப்பா! பந்தளத்து பாலகனே
என்ஐயப்பா... -1
நீ நாடுவிட்டுகாடு போன தேன்னய்யப்பா... -2
வாடி அழும் பக்தர்களிகன் வாசலிற்கு தேடி வரும் பந்தளத்து
பாலகனே சரண கோசமே... -2
சபரிமரைக்காட்டினிலே நல்லவழி காட்டிவிட
ஜோதியாத்தோன்றுகிற ஞான வேதமே... -2
சாமிக் கெல்லாம் சாமியப்பா பந்தளத்து
பாலகனே என் ஐயப்பா
நீ நாடுவிட்டுகாடு போன தேன்னய்யபா -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலைக்கு யாத்திரை

சபரிமலைக்கு யாத்திரையாம்
சரணம் போடும் யாத்திரையாம் 2
சகலரும் இங்கே சரிசமமாய் சங்கமாய்
சங்கமாகும் யாத்திரையாம் -3

குழு: சபரிமலைக்கு
ஒருதாயின் பிள்ளைகள் போல் ஒன்றாய் போகும் யாத்திரையாம்
குருசாமி கருணையினால் கூட்டிப் போகும் யாத்திரையாம்...
கருவான நாள் முதலாய் கனவுகண்ட யாத்திரையாம்
ஒருபோதும் நெஞ்சம்விட்டு நீங்காத யாத்திரையாம்...
பொன்னன் மலை வாழும் புலிவாகனர், உன்னை என்னாத நாள்
சோறும் இறங்காதய்யா... -2
சபரிமலைக்கு யாத்திரை சரணம் போடும் யாத்திரையாம்... -2
பனிதூவும் மார்கழிமாதம் பஜனையோடு யாத்திரையாம்
பகவானின் அருளைத் தேடும் பக்கதர்களின் யாத்திரையாம்....
கலிபாவம் நாசம் செய்யும்; காந்தமலை யாத்திரையாம்
கருப்பசாமி நம்மை நிழலாய்; காவல் செய்யும் யாத்திரையாம்
உன்னை நினைந்தோமய்யா... -2
உன் நினை வென்றின்றினால் உலகைமறந்தோமய்யா-2
சபரிமலைக்கு யாத்திரையாம் சரணம் போடும் யாத்திரையாம் -2
கட்டும் கட்டி காடுகுளம்; தாண்டிபோகும் யாத்திரையாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டும் கட்டி கன்னிமலர்கள்; தாளம் போடும்
யாத்திரையாம்...
தட்டுத்தடவி மலைகள் ஏறும்; பழமலையானின்
யாத்திரையாம்...
பக்தியோடு பல பல கோவில் பார்த்து வரும்
யாத்திரையாம்...
மணிமாலையில் வாழும் முனி பாலகா உன் மலர்
பாதங்கள்
நாளும் மறவோமய்யா... -2

சபரிமலைக்குடித் திரையாம் சரணம் போடும்
யாத்திரையாம்... -2
சகலரும் இங்கே சஞ்சமாய்; சங்கமமாகும்
யாத்திரையாம்... -2

குழு: சபரிமலைக்கு யாத்திரையாம் சரணம் போடும்
யாத்திரையாம்

# குருவே சரணம்

சுவாமியே சரணமய்யா.....

என்குருநாதனே சரணமய்யா...

ஜோதீஸ்வ ரூபனே சரணமய்யப்பா
ஸ்லோகம் லோகவீரம் மஹாபூஜ்ஜம்
சர்வரட்க்ஷாகரம் விபும் பார்வதி ஹிருதயானந்தம்
சாஸ்தாரம் பிரணமாம் யஹம்
குருவே சரணம் குருவே சரணம் ஐயா
உன் மலைதான் என் உலகம்!
உன்விழியில் அரியும் ஹரனும் தெரிய தெரிய ஞானம்
விளங்கும்!
சரணம்; சுவாமி சரணம்; சுவாமி

குழு : சரணம் சரணம் சரணம் சுவாமி சரணம் சரணம்
சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயம் தரனும் தரனும் சுவாமி சரணம் சரணம்
சரணம்
குருவே சரணம் குருவே சரணம் ஐயா உன் மலைதான்
என் உலகம்
ஐயா உன்மலைதான் என் உலகம்.
உன்னைக்கானவே மாலையணிந்தேன்; உன்னை
நினைத்து நான் காட்டில் நுழைந்தேன்

குழு : சரணம் சரணம் சரணம் சாமியே சரணம் சரணம்...-2
கரிமலை ஏற்றத்தில் கண்கள் சிந்தும் கண்ணீரும்;
சரணங்கள் பாடுது ஐயனே.......
பதினெட்டு படியேறும் நேரத்தில் நெஞ்சினிலே
அபிஷேகம் காண ஏக்கமையா
ஐயெட்டு நாளெல்லாம் நான் கேட்ட வரமெல்லாம்;
ஆசையால் நீ தர வேண்டுமய்யா.....
சுவாமி சரணம் சுவாமி சரணம்

குழு : சரணம் சரணம் சரணம் சுவாமி சரணம் சரணம்
சரணம்
அபயம் தரனும் தரனும் சுவாமி சரணம் சரணம்
சரணம்
குருவே சரணம் குருவே சரணம் ஐயா உன் மலைதான்
என் உலகம்
உன்விழியில் அரியும் ஹரனும் தெரிய தெரிய ஞானம்
விளங்கும்!
சரணம்; சுவாமி சரணம்; சுவாமி

குழு : சரணம் சரணம் சரணம் சுவாமி சரணம் சரணம்
சரணம்
அபயம் தரனும் தரனும் சுவாமி சரணம் சரணம்
சரணம்
குருவே சரணம் குருவே சரணம் ஐயா உன் மலைதான்
என் உலகம்
ஐயா உன்மலைதான் என் உலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்பது நாட்கள் நோன்பிருந்தோம்

நாற்ப்பது நாட்கள் நோன்பிருந்தோம்;
உன்னைப்பார்த்து பலன் எனப் பணிந்து வந்தேன்
நாள்தோறும் நின்னையே நினைந்திருந்தேன்
உன் நாமமே துணையென நடந்து வந்தேன்... -2
நாற்ப்பது நாட்கள் நோன்பிருந்தேன் உன்னைப்பார்ப்பது பலன் எனப் பணிந்து வந்தேன்...
சாமியே சரணம் ஐயப்பா நின் சந்நிதி இன்பமே மெய்யப்பா! -2
காப்பது நின்னடி கமலமலர்;
நின்னைக்காண்பது நல்ல காலமன்றோ -2
ஏற்பது என்னருள் பொங்கும் வெள்ளம்... -2
இனி என்றைக்கும் தாழ்வு என் அன்பு உள்ளம்... -2
நாற்ப்பது நாட்கள் நோன்பிருந்தேன்
உன்னைப்பார்ப்பது எனப் பணிந்து வந்தேன்...
சாமியே சரணம் ஐயப்பா நின் சந்நிதி இன்பமே மெய்யப்பா! -2
சேர்ப்பது இருமுடி தலையினிலே; நின் தரிசனம் சபரி மலையினிலே -2
கேட்பது சரணம் என் குரல்கள் -2
உடன் கிடைப்பது வாழ்வில் பல நலன்கள்... -2
நாற்ப்பது நாட்கள் நோன்பிருந்தேன்
உன்னைப் பார்ப்பது பலன்எனப்பணிந்து வந்தேன் -1
நாள்தோறும் நின்னையே நினைந்திருந்தேன் -2
உன்நாமமே துணை என நடந்து வந்தேன் -2
நாற்ப்பது நாட்கள் நோன்பிருந்தேன்;
உன்னைப் பார்ப்பது பலன் எனப்பணிந்து வந்தேன் -1
சாமியே சரணம் ஐய்ப்பா நின் சன்னிதி இன்பமே மெய்யப்பா-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தகடன் தீரவில்லை

வந்த கடன் தீரவில்லை;
சொந்தக்கடன் ஓயவில்லை
எந்தகடன் தீர்ப்பதற்கு என்னைப்
படைத்தாய் ஐயா ஏழைகள் அழுவதற்கோ
கண்ணைப் படைத்தாய் -2
ஐயப்பா; மெய்யப்பா; ஐயப்பா மெய்யப்பா
வாழ்வதற்கு பட்டகடன் அப்பப்பா;
இங்கே வருவதற்கும் கடன்வாங்கி வந்தேனப்பா!
வந்தகடன் தீரவில்லை, சொந்தக்கடன் ஓயவில்லை,
எந்தக்கடன் தீர்ப்பதற்கு என்னைப்
படைத்தாய் ஏழைகள் அழுவதற்கோ கண்ணைப்படைத்தாய்,
தாய்ப்பாசம் தந்தகடன் தீராது,
ஒரு ஜென்மம் உழைத்தாலும் போதாது
தோள்சுமந்த தந்தை கடன் தேயாது இன்னும்
மறுஜென்மம் எடுத்தாலும் மறையாது!
கடலிடம் வானம் கொண்ட
நீரைமழையாக் பொழிந்தாலும் நிறையாதோ
கரிமலை நாதன் கருணையின் கடனை கண்ணீரால்
அடைத்தாலும் அடையாதோ...
ஐயப்பா; மெய்யப்பா; ஐயப்பா மெய்யப்பா
வாழ்வதற்கு பட்டகடன் அப்பப்பா; இங்கே வருவதற்கும்
கடன்வாங்கி வந்தேனப்பா!
வந்தகடன் தீரவில்லை, சொந்தக்கடன் ஓயவில்லை,
எந்தக்கடன் தீர்ப்பதற்கு என்னைப்
படைத்தாய் ஏழைகள் அழுவதற்கோ கண்ணைப்படைத்தாய்,
பொன்னோடு பொருள் வாங்கி குவித்தாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பொன்னப்பலகடன் தீர வழியேது
தண்ணீராய் கண்ணீரை இறைத்தாலும்;
ஜென்மபாவத்தின் கடன் சொல்லி மாளாது!
இருமுடி தாங்கி; திருவடிநாடும்;
கடன் தீர்க்க வருடங்கள் போதாது.வரும் ஜென்மம் எல்லாம்
வளம் தாண்டி வந்து; பணிந்தாலும்
கடன் பாரம் ஓயாதே....
ஐயப்பா; மெய்யப்பா; ஐயப்பா மெய்யப்பா
வாழ்வதற்கு பட்டகடன் அப்பப்பா;
இங்கே வருவதற்கும் கடன்வாங்கி வந்தேனப்பா!
வந்தகடன் தீரவில்லை, சொந்தக்கடன் ஓயவில்லை,
எந்தக்கடன் தீர்ப்பதற்கு என்னைப்
படைத்தாய் ஏழைகள் அழுவதற்கோ
கண்ணைப்படைத்தாய்...
ஐயப்பா ஆ... ஐயப்பா ஆ... ஐயப்பா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோகினி தந்த மன மோகனன்

மேகினி தந்த மன மோகனன் நீயே...
மாமலை சிரிக்கின்ற மாணிக்கம் நீயே... 2
குழு:
மேகினி தந்த மன மோகனன் நீயே...
மாமலை சிரிக்கின்ற மாணிக்கம் நீயே...2

மாதவர்த்தோர் வணங்கிடும் மங்களன் நீயே
மகிக்ஷயாலே சாபம் தீர்ந்த மன்மதன் நீயே
மனமுருக சரணம் போட வருபவன் நீயே
மாதா பிதா குருதெய்வம் எல்லாம் நீதானே...2

மேகினி தந்த மன மோகனன் நீயே...
மாமலை சிரிக்கின்ற மாணிக்கம் நீயே....2
மழலையாக பம்பையில் பிறந்தவன் நீயே...
மகிமையோடு பம்பையில் பிறந்தவன் நீயே
அரண்மனைக்கு புலியின் மீது வந்தவன் நீயே
அம்மாவின் நோய் தீர்த்துவைத்த ஆண்டவன் நீயே....
ஐயப்பா

மேகினி தந்த மன மோகனன் நீயே...
மாமலை சிரிக்கின்ற மாணிக்கம் நீயே... 2
கரைகாணமுடியாத வேதம் நீதானே....
கலியுகத்தின் கண்கண்ட தேவன் தேவன் நீதானே
குருமணியாய் குன்றின் மேல் கொலுவிருந்தாயே
பொல்லா மனம் நெய்யாய் தினம் உருகுது
உன்னாலே......ஐயப்பா

குழு: -
பொல்லா மனம் நெய்யாய் தினம் உருகுது உன்னாலே
ஐயப்பா
மேகினி தந்த மன மோகனன் நீயே...மாமலை சிரிக்கின்ற
மாணிக்கம் நீயே...2
slow-மேகினி தந்த மன மோகனன் நீயே...மாமலை
சிரிக்கின்ற மாணிக்கம் நீயே....2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் ஹறிகர சுதனே

ஓம் ஹறிகர சுதனே...... சரணமய்யப்பா!

குழு: -

மணிகண்ட சுவாமிக்கு மார்களிப்பூவுக்கு ஆனந்த அபிக்ஷேகம்

ஹறிகர சுதனுக்கு அருந்தவச்சுடருக்கு அடியவர் அபிசேகம்...

அபிக்ஷேக ஆராதனை ஐயனுக்கு அபிக்ஷேக ஆராதனை

மெய்யாலே ஐயன் அபிசேகம் மெய்யோடு செய்யும் அபிசேகம்

மலையாள தேசம் நின்று மலையாளும் சுவாமிக்கென்று

அடியவர் செய்து வைக்கும்

அபிக்ஷேகம், இது அடியவர் செய்து வைக்கும் அபிக்ஷேகம்

குழு: -

சுவாமி சரணம் ஐயப்ப சரணம்...2

சரணம் சரணம் சரணம் சரணம் ஐயப்பா

அபிக்ஷேக ஆராதனை ஐயனுக்கு அபிக்ஷேக ஆராதனை

சத்தியப்படி மீது வீற்றிருக்கும்; சற்குரு எழில் மேனி அபிக்ஷேகம்

திருநீறு அபிசேகம், திருச்சாந்து அபிக்ஷேகம் சுவைமிகுதேன் கொண்டு அபிசேக்ஷம்

பூத்துகுலுங்கும் துளசி எல்லாம் பொன்னான அங்கத்துக்கு அபிசேக்ஷம்

பூத நாத சுவாமி அவனின் பொன்னடிக்கு என்மனசு அபிசேக்ஷம்

ஐயன் பொன்னடிக்கு என்மனசு அபிக்ஷேகம்

குழு: - சுவாமி சரணம் ஐயப்ப சரணம்...2

சரணம் சரணம் சரணம் ஐயப்பா

அபிக்ஷேக ஆராதனை ஐயனுக்கு அபிக்ஷேக ஆராதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவச் சுடர் என்று காட்சி தரும், சித்திர சிலைமேனி
அபிஷேகம்
இளநீரில் அபிஷேகம், பன்னீரில் அபிஷேகம், பழச்சாறு
பால் கொண்டு அபிசேகம்....-2
காட்டுமலர்கள் கூட்டமெல்லாம் கற்பூர பொற்சிலைக்கு
அபிஷேகம்
வாசுதேவ ஈசமைந்தன், மெய்யழகில் என்விழிகள் அபிஷேகம்
மெய்யழகில் என் விழிகள் அபிஷேகம்...

குழு:-
சுவாமி சரணம் ஐயப்ப சரணம் ....2
சரணம் சரணம் சரணம் ஐயப்பா
அபிஷேக ஆராதனை ஐயனுக்கு அபிஷேக ஆராதனை
மெய்யாலே ஐயன் அபிசேகம், மெய்யோடு செய்யும்
அபிசேகம்
மலையாள தேசம் நின்று மலையாளும் சுவாமிக்கென்று
அடியவர் செய்து வைக்கும் அபிஷேகம்
அபிஷேகம், இது அடியவர் செய்து வைக்கும் அபிஷேகம்

குழு:-
சுவாமி சரணம் ஐயப்ப சரணம் ....2
சரணம் சரணம் சரணம் ஐயப்பா
அபிஷேக ஆராதனை ஐயனுக்கு அபிஷேக ஆராதனை
சுவாமி சரணம்... ஐய்யனே சரணம் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடுகின்ற கண்களுக்கு

தேடுகின்ற கண்களுக்கு ஓடிவரும் சாமி......
திருவிளகக்கின் ஒளியிலே குடியிருக்கும் சாமி.....
வாடுகின்ற ஏழைகளின் வறுமை தீர்க்கும் சாமி......
வஞ்சகமில்லா நல்லவர்க்கு அருள்புரியும் சாமி.......
ஐயப்பசாமி அருள்புரிவாய்நீ

கண்ணனும் நீ! கணபதி நீ! கந்தனும் நீயே.......
எங்கள் காவல் தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே
அண்டமெல்லாம் காத்தருளும் சத்தியும் நீயே
எம் மேல் அன்பு வைத்து நதிவரைக்கும் ஓடிவந்தாயே
ஐயப்பசாமி இன்னும் அருள்புரிசாமி
தேடுகின்ற கண்களுக்குள் ஓடிவரும் சாமி...
திரு விளக்கின் ஒளியினிலே குடியிருக்கும் சாமி
ஐயப்பசாமி அருள் புரிசாமி....
தந்தையுண்டு அன்னையுண்டு எந்தன் மலையிலே
ஒரு தம்பிமட்டும் பிறக்கவேண்டும் உந்தன் வடிவிலே
அன்பு கொண்டு தந்தைக்கவன் செய்யும் பணியிலே
நாங்கள் ஆண்டுதோறும் வந்து நிற்போம் உந்தன்
நிழலிலே.....
ஐயப்பசாமி அருள் புரிசாமி....
தேடுகின்ற கண்களுக்குள் ஓடிவரும் சாமி...
திரு விளக்கின் ஒளியினிலே குடியிருக்கும் சாமி
ஐயப்பசாமி அருள் புரிசாமி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரமான தேய்வமே

இஸ்ரமான தெய்வமே
ஹறிகரன் ஈன்ற செல்வமே ஐயப்பா ஆ...
ஐயப்பா ஆ... ஐயப்பா ஆ...
இஸ்ரமான தெய்வமே கரிகரன் ஈன்ற செல்வமே ஆண்டருள்
இஸ்ரமான தெய்வமே கரிகரன் ஈன்ற செல்வமே ஐயப்பா ஆ...
ஐயப்பா ஆ... ஐயப்பா ஆ...
வட்ட பந்த வடிவமாய் சின் முத்திரை காட்டி -2
அன்புப் பார்வையருள் ஒளிவீசும் ஞான தெய்வமே -2
ஆண்டருள் இஸ்ரமான தெய்வமே கரிகரன் ஈன்ற செல்வமே
ஐயப்பா ஆ...

ஐயப்பா ஆ... ஐயப்பா ஆ...
ஐயனை அன்னையாக்கி, அப்பனை தந்தையாக்கி
ஐயப்பன் என்ற உயர்பெயர்பெற்றவா ஆ...
சபரியால் ஐயன் நீற்றவா - 2
உற்றவினை தீர்த்து நாளும் உறுதுணை அருளும் தேவா - 2
உன்னையே தஞ்சமென்று சரண்புகுந்தோம் சாமி... -2
இஸ்ரமான தெய்வமே கரிகரன் ஈன்ற செல்வமே ஐயப்பா
ஆண்டருள் இஸ்ரமான தெய்வமே
கரிகரன் ஈன்ற செல்வமே ஐயப்பா ஆ...
ஐயப்பா ஆ...... ஐயப்பா ஆ...... சுவாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானகமலையில் பெருவெளியில்

கானக மலையின் பெருவழியில் காலிராமல் காத்திடப்பா...2
கட்டும் எடுத்து வரும் தருணம் மனக்கஷ்டங்கள் மாறனும் ஐயப்பா..2
கானக மலையின் பெருவழியில் காலிடராமல் காத்திடப்பா...1
கல்லிலும் முள்ளிலும் எங்களை நீ காத்திட வருவாயப்பா
புவியதன்மேல் வருவாயே... 2
கலியுக வரதா ஐயப்பா
கானக மலையின் பெருவழியில் காலிடராமல் காத்திடப்பா...2
பம்பை ஓடும் வெள்ளம் போல் என் விழியாகும் ஐயப்பா
கருணாமூர்த்தி நீயன்றோ... 2
கானகவாசா ஐயப்பா
கானக மலையின் பெருவழியில் காலிடராமல் காத்திடப்பா
கட்டும் எடுத்துவரும் தருணம்,
மனக்ககஷ்ரங்கள் மாறனும் ஐயப்பா

சரணம் சரணம் சுவாமி சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்
சரணம் சரணம் சுவாமி சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுவழிப் பாதையிலே

காட்டுவழிப் பாதையிலே...
எந்த நேரத்தில் எந்த ருபத்தில் வந்து சேருவாய் சாமியே
குழு- காட்டுவழி பாதையிலே... 1
ஆனைப்புலி அத்தனையும் உன் வடிவம்தான்!
அது அத்தனையும் காவலாகும் எங்களுக்குத்தான்
மழையென்ன பனியென்ன ஐயப்பா உன்சரணங்கள்
சுகமாச்சே ஐயப்பா

குழு: மழையென்ன பனியென்ன
காட்டுவழி பாதையிலே... 1

குழு: நீ வந்து சேருவாய் சாமியே...

காட்டாறு வெள்ளமாய்! கட்டு நிரைக்கூட்டமாம்
ஆங்காங்கே இழைப்பாற நிழலாய் வருவாயோ...
அழுதாவின் கரையோரம் அலைந்து விழையாடும்...
அலையாக நீயும் வந்து தாகம் தீர்ப்பாயோ
சிறுபிள்ளை வடிவத்தில் மணிகண்டா வருவாயோ!
தடுமாறும் பாதங்கள் வருடித்தான் விடுவாயோ
கருப்பண்ண சாமியென்று ஓடிவருவாயோ காட்டுக்குள்
பிள்ளைகளை காத்து நிற்பாயோ
இருள்ஆன நேரத்திலும் அழகான ஜோதியாக வந்தெம்மை
வழிநடத்து தெய்வமே

குழு: காட்டுவழி பாதையிலே... 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு: நீ வந்து சேருவாய் சாமியே...

குழு: பள்ளிக்கட்டுசபரிமலைக்கு கல்லும்முள்ளும் காலுக்கு
மெத்தை சாமி சரணம் ஐயப்ப சரணம்
ஐயப்ப சரணம் சாமி சரணம், சாமியே ஐயப்போ
ஐயப்போ சாமியே

ஒற்றையடிப்பாதையில் குத்திவிடும் முள்ளுண்டு உன்சரணம்
சொல்லும் போது வலியில்லையே
கரிமலையேற்றத்தில் கால் வழுக்கும் நேரத்தில், காற்றாகி
தாங்கிக்கொண்டால் பயமில்லையே
கைமாறு பாராத குருசாமி உருவாக:
நீ வந்து வழிகாட்ட விரையாயோ பயணங்கள்
மதயானை பலமாக வருவாயப்பா மலைபோகும்
வலிமையினை தருவாயப்பா....
இருளை நேரத்திலும் அழகானஜோதியாக வந்தெம்மை
வழிநடத்து தெய்வமே...2

காட்டுவழி பாதையிலே
எந்த நேரத்தில் எந்தரூபத்தில் வந்து சேருவாய் சாமியே....
ஆனைபுலி அத்தனையும் உன்வடிவம் தான்! அது
அத்தனையும் காவலாகும் எங்களுக்கு தான்
மழையென்ன பனியென்ன ஐயப்பா ! உன் சரணங்கள்
சுகமாச்சு ஐயப்பா...

குழு : மழையென்ன பனியென்ன
குழு : காட்டு வழிபாதையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிவருகுது அசைந்தாடி வருகுது

ஆடிவருகுது அசைந்தாடி வருகுது!
ஐயனின் ஆபரணப் பொட்டி வருகுது...
கருடன் வருகுது கூட கருடன் வருகுது! வானத்திலே
வட்டமிட்டு சுற்றி வருகுது...
பந்தளத்து எல்லைவிட்டு சபரிவருகுது!
ஜோதிரூபமான மேனி காணவருகுது
ஆனந்த ஊர்கோலமே ஐயன் ஆபரண ஊர்கோலமே

குழு: -
வழிவிடுசாமி. வழி விடுசாமி அது ஆடி வரும்
காட்சியெல்லாம் பரவசம் சாமி
பரவசம் சாமி பரவசம்சாமி அது ஆடிவரும் காட்சியெல்லாம்
பரவசம் சாமி
ஆடிவருகுது அசைந்தாடி வருகுது! ஐயனின்
ஆபரணப்பெட்டி வருகுது
புதிய கோவிலும் பெருநாட்டுக் கோவிலும் பாதை காட்டு
சத்திரமும் புனிதமானது
நிலக்கல் கோவிலும் அடுத்த மூளிக்கல்லுமே; ஆபரணப்
பெட்டி கண்டு அருளில் மூழ்குது
பெரியானை வட்டத்திலேலிருந்து நடக்குது! விருந்தை ஏற்று
புனித பயணம் தொடர்ந்து நடக்குது
ஆனந்த ஊர்கோலமே... ஐயன் ஆபரண ஊர்கோலமே

குழு : வழிவிடு சாமி

மலையும் ஏறுது நீலமனையும் ஏறுது நீல ஆடைப்பிரியரோட
உடமை ஏறுது
அழைக்கவருகுது அதனை அழைத்து வருகுது மேல்சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவு அழைத்துவருகுது...
பஞ்சவாத்திய முழக்கத்துடன் படியும் ஏறுது! கடலில் பாயும் நதியெனவே அவனைச்சேருது
பொன்னான ஆபரணங்கள்; அந்த பொன்மேனி சேர்ந்திடுமே ஐயப்பா...

குழு: -
பரவசம் சாமி பரவசம் சாமி ஐயன்மேனி தரிசனமே பரவசம் சாமி- 2

(Slow) பொன்னும் மணியும் மேனிதவழ்ந்து ஆஹா அங்கே வானம் திறந்து......
அந்தியில் சூரியன் வந்துதித்தது சாமி-2
கண்களில் நூறு பம்பையாறு புண்ணிய பூமி நனைந்ததுபாரு
இன்னொரு மலையாம் சரணம் குவிந்தது சாமி-2

தரிசனம் தரிசனம் கண்டோம்
புண்ணியம் இதுவெனக் கண்டோம்
தரிசனம் தரிசனம் கண்டோம் ஜோதியில் ஒன்றாய் கலந்தோம்

குழு: தரிசனம் தரிசனம் கண்டோம் ஜோதியில் ஒன்றாய் கலந்தோம்
சரணமய்யப்பா! சரணமய்யப்பா! ஜோதிரூபமே!
சரணம் சரணம் சரணம் ஐயப்பா
குழு: சரணமய்யப்பா! சரணமய்யப்பா! ஜோதிரூபமே!
சரணம் சரணம் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுநிறை கட்டலாமா

சிக்ஷ்யன் : கட்டுநிறை கட்டலாமா குருசாமி......

குரு : ஐயன் உத்தரவு வரும்வரை பொறுசாமி....

சிக்ஷ் : காடுமலை பார்க்கலாமா குருசாமி.....

குரு : அந்தக்காலம் வந்து சேரும்வரை பொறுசாமி

சிக்ஷ் : அதுவரையில் என்ன செய்ய குருசாமி....

குரு : ஐயன் பெருமைகளை பேசுவோமே கன்னிச்சாமி....

சிக்ஷ் : பெருமைகளை சொல்லுங்களேன் குருசாமி

குரு : நீங்கள் கேள்விகளை கேட்டிடுங்க கன்னிச்சாமி

குழு : குருசாமி எங்ககுரு சாமி நீங்க கண்ட உண்மை
சொல்லிடுங்க ரூபன் சாமி....

சிக்ஷ் : கட்டுநிறை கட்டலாமா குருசாமி......

குரு : ஐயன் உத்தரவு வரும்வரை பொறுசாமி

சிக்ஷ் : துளசிமாலை போடுவதேன் குருசாமி

குரு : அது துள்ளும் மனசை கட்டிப்போடும் கன்னிச்சாமி

சிக்ஷ் : நீலவண்ண ஆடை அணிவதேனோ குருசாமி

குரு : மனசு வானம் போல தெளிஞ்சிதுன்னு
சொன்னசாமி.....

சிக்ஷ் : சரணங்கள் சொல்லுவதேன் குருசாமி......

குரு : அந்த சத்தம் நம்ம வாழவைக்கும் கன்னிச்சாமி....

சிக்ஷ் : விரதம் என்று சொல்லுவதும் என்ன சாமி.....

குரு : அது மனிதர்களை தெய்வமாக்கும் வித்தை சாமி....

குழு : குருசாமி எங்க ரூபன்சாமி- நீங்க சொன்ன சொல்லு
அத்தனையும் உண்மைசாமி-2

சிக்ஷ் : கட்டு நிறை கட்டலாமா குருசாமி

குரு : ஐயம் உத்தரவு வரும்வரை பொறுசாமி.....

சிக்ஷ் : இருமுடியின் அர்த்தம் என்ன குருசாமி

குரு : நம் இருதயத்தின் வடிவமது கன்னிச்சாமி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்ஷ் : நெய்யோட அர்த்தம் என்ன குருசாமி....

குரு : அது ஐயன் மேல நாம வைச்ச அன்புசாமி....

சிக்ஷ் : அன்னதானம் போடுவதும் ஏங்க சாமி.....

குரு : அவன் பசி பொறுக்கமாட்டானே கன்னிச்சாமி

சிக்ஷ் : அன்னமிடும் கடவுளுக்கே பசியாசாமி

குரு : அது பசியல்ல பாசம் ஐயா கன்னிச்சாமி

குழு : குருசாமி எங்கரூபன் சாமி- நீங்க சொன்ன சொல்லு
அத்தனையும் உண்மைசாமி-2

சிக்ஷ் : கட்டு நிறை கட்டலாமா குருசாமி

குரு : ஐயம் உத்தரவு வரும்வரை பொறுசாமி.....
(கன்னிச்சாமி)

சிக்ஷ் : பெரும்பாதை என்பதுவும் என்ன சாமி

குரு : அந்தப் பெரியவனே நடந்து போன பாதை சாமி

சிக்ஷ் : ஆனைபுலி அங்கு உண்டா குருசாமி

குரு : அது அத்தனையும் தேவர்களாம் கன்னிச்சாமி

சிக்ஷ் : குண்டு குழி உள்ளதாமே குருசாமி

குரு : போடும் சரணங்களால் குழி நிரம்பும் கன்னிச்சாமி

சிக்ஷ் : கரி மலையும் கடினமாமே குருசாமி

குரு : அது கால்களுக்கு உறுதிதரும் கடவுள்சாமி

குழு : குருசாமி எங்க ரூபன்சாமி- நீங்க சொன்ன சொல்லு
அத்தனையும் உண்மைசாமி-2

சிக்ஷ் : வாபர் என்று சொல்லுவதும் யாரு சாமி

குரு : நம்ம தோழருக்கும் தோழனையா கன்னிச்சாமி

சிக்ஷ் : பம்பை நதி என்பதுவும் என்ன சாமி

குரு : நம்மைபண்படுத்தும் தெய்வமது கன்னிச்சாமி

சிக்ஷ் : மகரஜோதி எப்படி இருக்கும் குருசாமி

குரு : என்கண்களிடம் கேட்டுப்பாரு கன்னிச்சாமி

சிக்ஷ் : நானும் அதை காண்பது எப்போ குருசாமி

குரு : இதோ அந்த நாளும் நெருங்கிடுச்சே கன்னிச்சாமி

குழு : குருசாமி எங்க குருசாமி எங்க குருசாமி... எங்க
அறிவுக்கண்ண திறந்து வைச்சார் ரூபன் குருசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையாளம் வாருங்கையா

மலையாளம் வாருங்கையா மாலையிட்ட சாமிகளே...
மலையேறிப் பாருங்கையா மாற்றம் உண்டு வாழ்வினிலே...
பகவானை தேடுங்கையா கைவிளக்கு ஜோதியிலே...
சகவாசம் கூடுமையா நெய்மணக்கும் சீமையிலே...
ஏற்றிவிடு தூக்கிவிடு தாங்கிவிடப்பா ஐயப்பா
தேகபலம் பாதபலம் தந்துவிடப்பா ஐயப்பா...-2
மலையாளம்...-1

கன்னிச்சாமி வாங்க இங்கே அன்னதானம் போடு இங்கே
பம்பா சாமி பாரு இங்கே வந்து சேரும் அருளும் இங்கே
ஆரியங்க ஐயாவை கூப்பிடுங்க சாமி
போட்டு வச்சு பந்தியிலே குந்திடவா சாமி

குழு- ஆரியங்க ஐயாவை.......

துள்ளாட்டம் ஆடிக்கிட்டு சாஸ்தாவை வேண்டிக்
கொள்வோமே
ஏற்றிவிடு தூக்கிவிடு தாங்கிவிடப்பா ஐயப்பா
தேகபலம் பாதபலம் தந்துவிடப்பா ஐயப்பா...-2
மலையாளம்...-1

ஒன்னா கூடி வாங்க இங்கே என்ன வேணும் கூடும் இங்கே....
சொன்னால் போதும் கோகூஷம் இங்கே தன்னால் தோன்றும்
ஜோதி அங்கே... காந்தமலை ஐயாவை பாத்திடுங்க சாமி
காணவந்த ஜோதியிலே தோன்றிடுவா சாமி

குழு- ஆரியங்க ஐயாவை.......
துள்ளாட்டம் ஆடிக்கிட்டு சாஸ்தாவை வேண்டிக்
கொள்வோமே
ஏற்றிவிடு தூக்கிவிடு தாங்கிவிடப்பா ஐயப்பா
தேகபலம் பாதபலம் தந்துவிடப்பா ஐயப்பா.....-2
மலையாளம்.....-1
ஏற்றிவிடு தூக்கிவிடு....2 மலையாளம்......-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரியிலே தெரியுதுபார் மகரஜோதி

சபரியிலே தெரியுதுபார் மகரஜோதி தர்மசாஸ்தாவின் அருள் கூறும் கருணையோதி-2
சரணம்பாடி சரணம்பாடி சாந்தியைத்தேடி சந்நிதியில் கூடுகின்றார் ஆயிரம் கோடி

slow- அவன் சந்நிதியில் கூடுகிறார் ஆயிரம் கோடி
சபரியிலே தெரியுதுபார் மகரஜோதி தர்மசாஸ்தாவின்
அருள் கூறும் கருணையோதி-2
நோன்பிருந்து கார்த்திகையில் மாலைபோடுவோம்
நெஞ்சார சபரிவாசன் புகழைப்பாடுவோம்-2
இருமுடி தலையில் ஏந்தியாத்திரை செல்வோம்
திருவடியே துணையுடனே எமனையும் வெல்வோம்

slow-
அவன் திருவடியின் துணையுடனே எமனையும் வெல்வோம்
சபரியிலே தெரியுதுபார் மகரஜோதி தர்மசாஸ்தாவின் அருள் கூறும் கருணையோதி
பம்பையிலே நீராடு பாவங்கள் மறையும் பேட்டை துள்ளி
ஆடும் போது சிந்தனை தெரியும்......2
பதினெட்டுபடிகளிலே தத்துவம் புரியும் ஐயன் பாதங்களை
சரணடைந்தால் நிம்மதிமலரும்!

slow- ஐயன் பாதங்களை சரணடைந்தால் நிம்மதி மலரும்-1
சபரியிலே தெரியுதுபார் மகரஜோதி தர்மசாஸ்தாவின்
அருள்கூறும் கருணையோதி.....
மலையெங்கும் எதிரொலிக்கும் சரணகோஷம் மனம் மகிழும்
சாமிக்கு தினம் நெய்யபிஷேகம்
மணிகண்டன் போல் உலகில் தெய்வமுமில்லை மலர்பாதம்
சரணடைந்தால் துன்பமுமில்லை
slow- அவன்மலர் பாதம் சரணடைந்தால் துன்பமில்லை
சபரியிலே தெரியுதுபார் மகரஜோதி தர்மசாஸ்தாவின்
அருள்கூறும் கருணையோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தனப்பூ வாசம்

சந்தனப்பூவாசம் வீசுதையா; அது சபரிக்கு அழைக்குது
வாரோமய்யா... 2
காடுமலை தாண்டியே; சாமிவந்தோம் பெரும்பாதையே...2
மாலையிட்டோம் எதுக்கு; மணிகண்டா உணக்கு
பத்திகொண்டு நடந்து வாறோம்
ஐயா பள்ளிக்கட்டை சுமந்து வாரோம்

குழு:-
சாமியே சரணம் சாமியே சரணம், சரணம் சரணம் ஐயப்பா
சந்தனப்பூவாசம் வீசுதையா; அது சபரிக்கு அழைக்குது
வாரோமய்யா

குழு:-
சந்தனப்பூவாசம் வீசுதையா; அது சபரிக்கு அழைக்குது
வாரோமய்யா
திம்தக்கத்தோம் பாட்டு கேட்குதையா; அது சந்நிதிக்கு
அழைக்குதையா வாரோமையா
காவியுடைதாங்கியே; வந்த சாமி உன்னைக்கானவே
காத்திருந்தோம் அதுக்கு ,யாத்திரையாய் அதுக்கு, முந்திமுந்தி
நடந்து வாறோம்
ஐயா முன் பனியில் நனைந்து வாறோம்...

குழு-
சாமியே சரணம் சாமியே சரணம் , சரணம் சரணம் ஐயப்பா...
சந்தன பூவாசம் வீசுதையா, அது சபரிக்கு அழைக்குது
வாரோமையா... 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு: -

சந்தனப் பூவாசம் வீசுதையா; அது சபரிக்கு அழைக்குது

வாரோமய்யா... 2

குங்குமப்பூ வாசம் வீசுதையா; அது எருமேலி அழைக்குது

வாரோமய்யா... 2

கோட்டைப் படியேறியே; வந்தோம்; பேட்டை

விளையாடியே... 2

வானவில்லை வளைத்து வண்ணங்களை குளைத்து

அங்கமெல்லாம் பூசிவாரோம்...

ஐயா அஞ்சுமலை தேடி வாரோம்... 1

குழு- சாமியே சரணம் சாமியே சரணம், சரணம் சரணம்

ஐயப்பா... 2

ஐயா அஞ்சுமலை தேடி வாரோம்... 1

குழு- சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம்

ஐயப்பா... 2

சந்தணப் பூவாசம் வீசுதையா; அது சபரிக்கு அழைக்குது

வாரோமையா...

குழு- சந்தணப் பூவாசம் வீசுதையா; அது சபரிக்கு அழைக்குது

வாரோமையா...

கற்பூர வாசம் வீசுதையா; அது சரங்குத்தி அழைக்குது

வாரோமய்யா

வாழும் கதையேற்றிய; வந்து நின்றோம் சரம் போடவே...2

கன்னிசாமி எமக்கு; உங்க துணைஇருக்கு; பொன்னு படி

நடந்து வாரோம்...

ஐயா, உந்தனடி நினைந்து வாரோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு-

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா...2

சந்தணப் பூவாசம் வீசுதையா; அது சபரிக்கு அழைக்குது

வாரோமையா...

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம்

ஐயப்பா... 2

நெய்மணக்கும் வாசம் வீசுதைய்யா; அது நீ அழைக்கும்

செய்தியை கூறுதையா-2

சுவாமி உனைக்கணவே வந்த ஏழைமுகம் பாரம்மா... 2

மரகந்தவிளக்கு, மணிகண்டா உனக்கு அதைக்கண்டு மகிழ்ந்து

நின்றோம்

ஐயா அகிலத்தை மறந்து நின்றோம்

குழு- சாமியே சரணம்; சாமியே சரணம் சரணம் சரணம்

ஐயப்பா... 2

சந்தணப்பூ வாசம் வீசுதையா அது சரணத்தின் மகிமையை

பேசுதையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெய்யபிஷேகம் சாமிக்கே

நெய்யபிஷேகம் சுவாமிக்கே; கற்பூரதீபம் சுவாமிக்கே;
அபினும் மலரும் சுவாமிக்கே
தேனபிஷேகம் சுவாமிக்கே காணிப் பொன்னும் சுவாமிக்கே;
கல்லும் முள்ளும்காலுக்கு மெத்தை
குண்டும்குழியும் கண்ணுக்கு வெளிச்சம்;
சாமியே ஐயப்போ... சாமிசரணம்! ஐயப்பா சரணம்
பகவான் சரணம்; பகவதி சரணம்: பகவானே பகவதியே;
பகவதியே- பகவானே
தன்தனானனே தந்தனானனே சுவாமி ஐயப்பா

குழு:- என் சுவாமி ஐயப்பா...
தன்தந்தானனே;தன்தந்தானனே; ஐயப்பா;
குழு:- என் சுவாமி ஐயப்பா...
வாழவைத்திடும் தெய்வம் நீயே சுவாமி ஐயப்பா
குழு:- என் சுவாமி ஐயப்பா.....
உன்னைப்பாடவே உருகிடும் சரணம் ஐயப்பா
குழு:- என் சுவாமி ஐயப்பா.....
என் சுவாமி ஐயப்பா...

ஐந்து மலையிலே அம்பலம் கானும் அழகு யோகனே ஐயப்பா
ஹரனே ஹரியே ஹரிகர வடிவே சரணமய்யப்பா....

நெய்யபிஷேகம் சுவாமிக்கே; கற்பூரதீபம் சுவாமிக்கே;
அபினும் மலரும் சுவாமிக்கே
தேனபிஷேகம் சுவாமிக்கே காணிப் பொன்னும் சுவாமிக்கே;
கல்லும் முள்ளும்காலுக்கு மெத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டும்குழியும் கண்ணுக்கு வெளிச்சம்; சாமியே
ஐயப்போ.... சாமிசரணம்! ஐயப்பா சரணம்
பகவான் சரணம்; பகவதி சரணம்: பகவானே பகவதியே;
பகவதியே- பகவானே
தன்தனானனே தந்தனானனே சரணமய்யா...
பேசும் தெய்வமே பம்பைவாசா சுவாமி ஐயப்பா... 2
குழு:- என் சுவாமி ஐயப்பா... 2
உனைப் பேசும் போதிலே மெய்யும் சிலிர்க்குது
சரணம் ஐயப்பா 2
குழு:- என் சுவாமி ஐயப்பா...
ஆதி சபரியில் ஜோதியாகியே அபயம் தந்திடும்
ஐயப்பா... 2
அருளும் பொருளும் பெருகும் உருவே
சரணமய்யப்பா... 2
நெய்யபிஷேகம் சுவாமிக்கே; கற்பூரதீபம் சுவாமிக்கே;
அபினும் மலரும் சுவாமிக்கே
தேனபிஷேகம் சுவாமிக்கே காணிப் பொன்னும் சுவாமிக்கே;
கல்லும் முள்ளும்காலுக்கு மெத்தை
குண்டும்குழியும் கண்ணுக்கு வெளிச்சம்; சாமியே ஐயப்போ...
சாமிசரணம்! ஐயப்பா சரணம்
பகவான் சரணம்; பகவதி சரணம்: பகவானே பகவதியே;
பகவதியே- பகவானே
தன்தனானனே தந்தனானனே சரணமய்யா...

காந்தமலையிலே தோன்றும் ஜோதியே சுவாமி
ஐயப்பா... 2
குழு:- என் சுவாமி ஐயப்பா...
உன்சாந்த கோலமே உள்ளம் நிறையுதே சரணமய்யா...2
குழு:- என் சுவாமி ஐயப்பா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேங்கையேறிய பவனி வந்திடும் வேதநாதனே ஐயப்பா .2

வாபரின் தோழா வருவாய் அருள்வாய் சரணமய்யா... 2

நெய்யபிஷேகம் சுவாமிக்கே; கற்பூரதீபம் சுவாமிக்கே;
அபினும் மலரும் சுவாமிக்கே
தேனபிஷேகம் சுவாமிக்கே காணிப் பொன்னும் சுவாமிக்கே;
கல்லும் முள்ளும்காலுக்கு மெத்தை
குண்டும்குழியும் கண்ணுக்கு வெளிச்சம்; சாமியே
ஐயப்போ.... சாமிசரணம்! ஐயப்பா சரணம்
பகவான் சரணம்; பகவதி சரணம்: பகவானே பகவதியே;
பகவதியே- பகவானே
தன்தனானனே தந்தனானனே சரணமய்யா...

வாளெடுத்தவா வில்லெடுத்தவா சுவாமி ஐயப்பா! -2

குழு:- என் சுவாமி ஐயப்பா
உன் வண்ணப் பாதமோ வினைகள் தீர்க்கும்
சுரணமய்யா... 2
குழு:- என் சுவாமி ஐயப்பா
அப்பலத்தில் சங்கமித்திடும் சிந்தை நேசனே ஐயப்பா...2
அச்சங்கோயில் ஆளும் அரசே சரணமய்யப்பா... 2

நெய்யபிஷேகம் சுவாமிக்கே; கற்பூரதீபம் சுவாமிக்கே;
அபினும் மலரும் சுவாமிக்கே
தேனபிஷேகம் சுவாமிக்கே காணிப் பொன்னும் சுவாமிக்கே;
கல்லும் முள்ளும்காலுக்கு மெத்தை
குண்டும்குழியும் கண்ணுக்கு வெளிச்சம்; சாமியே
ஐயப்போ.... சாமிசரணம்! ஐயப்பா சரணம்
பகவான் சரணம்; பகவதி சரணம்: பகவானே பகவதியே;
பகவதியே- பகவானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்தனானனே தந்தனானனே சரணமய்யா...

பொங்கும் மங்களம் எங்கும் தந்திடும் சுவாமி ஐயப்பா......

குழு:- என் சுவாமி ஐயப்பா

உன்னைப்போற்றும் நெஞ்சினிலே புனிதம்

சேர்த்திடும் சரணமய்யாப்பா....

குழு:- என் சுவாமி ஐயப்பா

பூதநாதனே புண்ணியமூர்த்தியே பொன்னம்பலனே ஐயப்பா

படி பதினெட்டில் ஆளும்குருவே, சரணமய்யா...2

நெய்யபிஷேகம் சுவாமிக்கே; கற்பூரதீபம் சுவாமிக்கே;

அபினும் மலரும் சுவாமிக்கே

தேனபிஷேகம் சுவாமிக்கே காணிப் பொன்னும் சுவாமிக்கே;

கல்லும் முள்ளும்காலுக்கு மெத்தை

குண்டும்குழியும் கண்ணுக்கு வெளிச்சம்; சாமியே

ஐயப்போ.... சாமிசரணம்! ஐயப்பா சரணம்

பகவான் சரணம்; பகவதி சரணம்: பகவானே பகவதியே;

பகவதியே- பகவானே

தனி :

சுவாமி சரணமமேசரணம் பொன்னய்யா

ஐயப்போ.... சரணம் சரணம் பொன்னையப்பா

குழு-சுவாமி சரணமேசரணம் பொன்னய்யா சாமி சரணமே

சரணம் பொன்னையப்பா-1

தனி-சுவாமியே ஐயப்போ, ஐயப்போ சாமியே சுவாமி சரணம்

ஐயப்பா சரணம்

ஐயப்பா சரணம் சுவாமி சரணம்.

சுவாமியே ஒய் சரணம் ஐயப்போ

அரிகர சுதனே ஏய் சரணம் ஐயப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்கார ரூபனே...

ஓங்கார ரூபனே ஒளிவடிவானவனே
சங்கரஹறி மைந்தனே
ஐங்கரன் சோதரனே
எங்களைக் காப்பவனே... என்குலநாதனே...
எங்களின் சங்கடங்கள் ஆழியில் எரியுதையா...
ஏழையின் தோழனையா...
புண்ணியம் தந்தோமையா...
ஞான ஒளி மழையே... பாவம் ஒளிப்பவனே...
கண்கண்ட தெய்வமய்யா
கருணைக் கடலொளியே...
யாதி ஒருமையுடன் நினைக்கின்ற உத்தமரே
ஆடி மன்றாடி வந்து
பணிவோமடி மலரினை
பாடிப் புகழ்ந்திடுவோம்
வாபரின் தோழனையா
ஓங்கார ரூபனையா
ஒளி வடிவானவனே... சங்காஹறி மைந்தனே
ஐங்கரன் சோதரனே...
சுவாமி சரணமென்று;
நாம சங்கீர்த்தனையா உன்னடி சரணடைவேன்
பூலோகப் பாலகனே...
நிம்மதி நிலைநாட்டும் மனசிந்தனை
தொலைத்தெறியும் ஓங்கார ரூபனையா...
ஒளி வடிவானவனே...
சங்கர ஹறிமைந்தனே
ஐங்கரன் சோதரனே...
நாடி வருவோர்க்கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைதீர்க்கும் ஐய்யப்பனே...
துன்பங்கள் தூசாக்கும் தீயாக யொலிப்பவனே...
உள்ளத்தில் அமர்ந்திருப்பாய் யென்றும்
உள்ளம் நிறைந்திருப்பாய்...
ஓங்கார ரூபனையா... ஒளி வடிவானவனே...
சங்கர ஹரிமைந்தனே
ஐங்கரன் சோதரனே...
சங்கடம் குறை செய்வாய்
சந்தோஷம் நிறையருள்வாய்...
சாகேதன் மகன் இவனே... சர்வேஸ்வராக்குமை...
அவனிப்பாலகனே... மகிஷியை வென்றவனே...
ஓங்கார ரூபனையா... ஒளி வடிவானவனே...
சங்கரஹரிமைந்தனே...
ஐங்கரன் சோதரனே...
கற்பூரப் பிரியனே... நெய் அபிஷேகப் பிரியனே...
ஐயப்ப சுவாமி துணை
திருவாபரணம் துணை
பொன்னம்பலத்தாள்பவனே...
ஐயா வரமருள்வாய்!
ஓங்கார ரூபனையா... ஒளி வடிவானவனே...
சங்கர ஹரி மைந்தனே
ஐங்கரன் சோதரனே...
தேவாதி தேவகணம், பூசைகள் செய்யும் சாமி
மாமுனிகள் வணங்கும் ஐயன்
மாமலைமேல் வாழும் சுவாமி
சத்ய சொரூபன் ஐயன் சுவாமி
முத்தியைத் தரும் ஐயப்பன்
ஓங்கார ரூபனையா... ஒளி வடிவானவனே...
சங்கரஹரிமைந்தனே....
ஐங்கரன் சோதரனே... (3 தடவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையாண்டி பெற்றெடுத்த...

slow விண்ணுக்கும் மண்ணுக்கும் விளங்காத புதிரே
ஒரு பெண்ணுக்குள் கருவாகி மறவாத உருவே... (2)

மலையாண்டி பெற்றெடுத்த மகராசா
ஐயப்பா மகரத்தில் ஜோதியே மலரும் ஐயப்பா (2)
தலையெங்கும் இருமுடிகள் நினைவில் உன் திருவடிகள்
பக்தியுடன் காணவந்தோம் பதினெட்டு அருள் படிகள்
வெள்ளி மலையாண்டி பெற்றெடுத்த மகராசா ஐயப்பா
மகரத்தில் ஜோதியாக மலரும் ஐயப்பா... (1)
பரசுராமர் உனக்கெனவே பதினெட்டு மலைகளிலும்
பக்தியுடன் விரதம் பூண்டு பதினெட்டு கோவில் செய்தாள் (2)
அதிலைந்து மலைமகள் ரொம்ப சிறந்தமலை ஐயா நீ
வாழுகின்ற சபரிமலை (சபரிமலை...2)
வெள்ளி மலையாண்டி பெற்றெடுத்த மகராசா ஐயப்பா
மகரத்தில் ஜோதியாக மலரும் ஐயப்பா... ஆ (2)
எரிமேலி காளைகட்டி இஞ்சிப்பாறை கோட்டை வந்து
கரிமலை பம்பையாறு சபரிபீடம் சரம் பக்தியும்
கடந்தேதான் நடந்து வந்தோம்
ஐயப்பா! ஆ... காந்தமலை ஜோதி கண்டோம்
பொன் ஐயப்பா.... ஆ...
வெள்ளி மலையாண்டி பெற்றெடுத்த மகராசா ஐயப்பா
மகரத்தில் ஜோதியாக மலரும் ஐயப்பா... ஆ...
தலையெங்கும் இருமுடிகள், நினைவில் உன் திருவடிகள்
பக்தியுடன் காணவந்தோம், பதினெட்டு அருள் படிகள்!
வெள்ளி மலையாண்டி பெற்றெடுத்த மகராசா ஐயப்பா
மகரத்தில் ஜோதியாக மலரும் ஐயப்பா ஆ.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பனுக்கு மலையுண்டு

அப்பனுக்கு மலையுண்டு கைலாயம்
அன்னைக்கொரு மலையுண்டு ஏழுமலை
அண்ணனுக்கு மலையுண்டு பழனிமலை
ஐயப்பா உனக்குண்டு சபரிமலை
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4

என்னுடைய கழுத்து மணிமாலை
என்னுடைய கனவு சபரிமலை
என்னுடைய நாவு சரண மொழி
என்னுடைய வேதம் சரணமையப்பா
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4

எனக்குள்ளே இலட்சியம் சபரிமலை
எனக்குள்ளே இருப்பது சன்னிதானம்
எனக்குண்டு கதி பதினெட்டாம் படி
எனக்குண்டு மலைமேல் மகரவிளக்கு
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4

அப்பனவன் நாமம் நமசிவாய
அன்னையவள் நாமம் நாராயணா
அன்புத்தம்பி கோஷம் அரோகரா
ஐயப்பனின் கோஷம் சரணமய்யப்பா
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகாளும் ஐயன்

உலகாளும் ஐயன் ஐயப்பா என் மனக்கோயில் தீபம் நீயப்பா
உலகாளும் ஐயன் ஐயப்பா என் மனக்கோயில் தீபம் நீயப்பா

அருள் நிறைந்திட இருள் மறைந்திட
கலை மலர்ந்திட நிலை உயர்ந்திட
வளம் வளர்ந்திட நலம் விளங்கிட
வினை அகன்றிட வழி பிறந்திட
சபரிமலைக்குச் செல்லுவோம் சந்நிதியில் கூடுவோம்
சரணகீதம் பாடுவோம் (உலகாளும்)
அளியாமை இருள்நீங்க அறிவென்னும் சுடர் வந்தும்
அணையாத அருள் ஜோதி நீயல்லவா
தெரியாமல் நான் செய்த பிழை தன்னை மன்னித்து
அன்போடு அருள் சிந்தும் தாயல்லவா
இசையோடு உன் புகழை எடுத்துச் சொல்லவா
(அருள் நிறைந்திட)
(உலகாளும்)
நினையாத பொழுதில்லை நீயின்றி கதியில்லை
மனதோடு மணி மாலை மணி கண்டனே
திசையேதும் தெரியாது மொழிபேதம் கிடையாது
பலகோடி மனம்பாடும் ஒரே மந்திரம்
பந்தளத்து சாஸ்தாவின் திருமந்திரம் (அருள் நிறைந்திட)
(உலகாளும்)
திறக்கின்ற விழியோரம் திருமுகமே வரவேண்டும்
ஒலிக்கின்ற சொல்லெல்லாம் உன் நாமமே
மறையாத ஒளி நீயே மறை வேதப்பொருள் நீயே
மனம் நாடும் பரிகாரம் உன்பாதமே
உனை நாளும் மறவாத மனம் போதுமே (அருள் நிறைந்திட)
(உலகாளும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதாசிவன் மகனே

சதாசிவன் மகனே மகாகணபதியின் சோதர ஐயப்பா
எங்கள் பிதா நீயல்லவா  உன்னை தேடிவரும்
அடிமை நாங்கள் அல்லோ உன் குழந்தை நாங்கள் எல்லோ

கூட்டம் விட்டு பிரிந்து தவிக்கிறோம்
செய்தவிழையென்ன தெரியலையே
வாட்டம் போக்கி சேர்த்து விட வேண்டும் ஐயனின் கணக்கும்
புரியலையே செய்த பாவம் என்ன தெரியலையே

ஹரிஹர சுதனே சரணம் சரணம் சுவாமி ஐயப்பா
பகவான் சரணம் பகவதி சரணம் சரணம் ஐயப்பா
(சதாசிவன் மகனே)

குருவின் சொல்லையே அலட்சியமாக நினைத்தால் வந்ததோ
விரத விதிகளை மீறியதாலே இந்தநிலை வந்ததோ

சுவாமி மாரின் குல தகுதிக்கேற்ப நடத்தியதால் வந்ததோ
ஐயப்பன் மாலை அன்று ஐயப்பனாகவே
மதிக்க மறுத்ததால் நிகழ்ந்ததோ

கூட்டம் விட்டு பிரிந்து தவிக்கிறோம்
செய்த விழையென்ன தெரியலையே
வாட்டம் போக்கி சேர்த்துவிட வேண்டும் ஐயனின்
கணக்கும் புரியலையே செய்த பாவம் என்ன தெரியலையே
(ஹரிஹர சுதனே)
(சதாசிவன் மகனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிமார்களை துன்புறுத்தி பயம் காட்டியதால் வந்ததோ
தன்னிலை மறந்து ஆணவத்திமிராய்
திரிந்து அலைந்ததால் நிகழ்ந்ததோ
தொட்டதெற்கெல்லாம் தட்சணை
என்றே சுரண்டியதால் வந்ததோ
என் ஐயப்பா உனை வியாபாரமாக்கி வயிறு
வளர்த்ததால் நிகழ்ந்ததோ

கூட்டம் விட்டு பிரிந்து தவிக்கிறோம்
சோதனை தந்தது போதுமப்பா
வாட்டம் போக்கி சேர்த்துவிட வேண்டி
கறுப்பனை உடனே வரச்சொல்லப்பா
திக்கு தெரியாத காட்டுக்குள்ளே திசைக்கொரு
மூலையாய் பிரிந்துவிட்டோம்
சரண விழிகளும் கேட்கலையோ என்
ஐயப்பா உனை தெரிந்து கொண்டோம்
ஐயப்பா உனை புரிந்து கொண்டோம்

(ஹரிஹர சுதனே)
(சதாசிவன் மகனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் விளித்தால் மரணம் இல்லை

சாமியே...
சரணம் ஐயப்பா...
சரண கோஷப்பிரியனே
சரணம் ஐயப்போ...
சரணம் விளித்தால் மரணம் இல்லை
சாஸ்தா நாமம் அருளின் எல்லை
தருணம் இதுதான் சரணம் போட்டு
தர்ம சாஸ்தா பாதம்பாடு (சா)

காக்கும் தெய்வம் திருமால் நாமம்
கருணை செய்யும் ஈஸ்வா நாமம்
கலந்து மகிழ்ந்த ஐயன் நாமம்
கூவி வந்தால் புவியில் க்ஷேமம் (சா)

காடும் மேடும் வீடும் வாசல்
கல்லும் முள்ளும் மல்லிகை மெத்தை
ஆடும் மனத்தை அடக்கி வா வா
ஐயன் மேடை நாடி வா வா (சா)

நெய்போல் உருகும் மனதில் ஐயன்
நேரில் வருவான் நிறையத் தருவான்
குருவை நாடு மாலையை சூடு
கோடி ஞான ஜோதியை பாடு (சா)

சரணம் சரணமே சரணம் பொன் ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூனுகண்ணுத் தேங்கா

சுவாமியே சரணம் ஐயப்பா
நெய்யபிஷேகம் பிரியனே சரணம் ஐயப்பா

மூனுகண்ணுத் தேங்காய் அதில் நெய் நிரப்பி வைத்து
அந்த ஐந்துமலை ஏறி அவன்பாதம் பணிந்திடனும் (2)
ஏற்றிடு ஏற்றிடு எங்கள் மேலே
நம்பிக்கை வைத்தோம் உன்னருள் மேலே (2)
வேண்டிட வேண்டிட வந்தருள்வாயே

மேகன சுந்தரனே (2)
ஜோதியே ஜோதியே ஐயப்பா
ஆனந்த ஜோதியே ஐயப்பா
பம்பா விளக்கே ஐயப்பா
சரணம் உனக்கே ஐயப்பா

தாங்கும் இருமுடிதான் அது ஐயன் திருவடிதான் - விதி
பாரம் குறைந்திடும் தான் நம்ம பாவம் மறைஞ்சிடும் தான்

சொல்லுங்க சொல்லுங்க ஐயனின் நாமம்
சொல்லிட சொல்லிட வந்திடும் யோகம்
கல்லென்ன முள்ளென்ன காடென்ன மேடென்ன
நாதன் இருக்கையிலே (ஜோதியே)

கரிமலை ஏறி நாம இறங்கிடும் போது நம்ம
கரிகரன் தானே வந்து கைகொடுப்பானே
ஐயனின் சக்தியை வந்திங்க பாரு
சொன்னது சொன்னது சத்தியம் பாரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளென்ன பொழுதென்ன வினையென்ன செய்யும்
ஐயன் இருக்கையிலே... (ஜோதியே)

தூய பதினெட்டுப் படியில் பாதம் பாடும் போது
வரும் துன்பம்
நொடியினிலே நம்மை விட்டுப் பறக்குதையா!
கற்பூர ஆராத்தி காட்சியைப்பாரு
சத்திய மூர்த்தியின் கீர்த்தியைப் பாரு
ஆதியும் நீதியும் ஜோதியுமாகி
வாழும் குருபரனே... (ஜோதியே)

காந்தமலையிலே நம்ம சாந்த மகராசன் - அந்த
வான்வெளி தனியே ஒரு
ஜோதியாய் வந்தானே
ஆயிரம் ஆயிரம் சூரியன் அங்கே
பாருங்க பாருங்க ஐயனை அங்கே
பார்த்திட பார்த்திட கண்களும் கோடி
தந்திடு என் ஐயனே (ஜோதியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்முத்து மணிமாலை

நல்முத்து மணியோடு
ஒளி சிந்தும் மாலை...
நவரத்தின ஒளியோடு
சுடர்விடும் மாலை...
கற்பூர ஜோதியில் கலந்திடும் மாலை...
கனகமணி கண்டனின் துளசிமணி மாலை

ஆயிரம் சரணங்கள் சொல்லிடும் மாலை
ஐயனின் கடைக்கண்ணில்
அன்பெனும் மாலை...
அமுதையில் குளித்திடும்
அழகுமணி மாலை...
பம்பையில் பாலனின்
பவளமணி மாலை...
ஐந்துமலை வாசனின்
அழகுமணி மாலை... ஐயப்ப சுவாமியின்
அருள் கொஞ்சும் மாலை...
ஆனந்த ரூபனின் அன்பென்னும் மாலை...
உன்னியின் கழுத்தினில்
அரங்கேறும் மாலை...
முத்தோடும் மணியோடும்
முழங்கிடும் மாலை...
முக்கண்ணன் மகனான
மணிகண்டன் மாலை... கழுத்தோடு உறவாடும்
காந்தமணி மாலை...
காணவரும் பக்தருக்கு
காட்சிதரும் மாலை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்ப கவசம்

## காப்பு

அரிஹர புத்ரனை ஆனந்த ரூபனை
இரு மூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்தஸ்வரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடுவோமே (1)

ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினந்தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே (2)

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக (3)

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக (4)

பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்லினை போக்கிட வருக வருக (6)

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட் கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக (7)

பதினென்படியை மனதில் நினைக்க
பண்ணி பாவம் பொடிப்பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே (8)

சபரிகிரீசனை நினைத்தே நீறிடத்
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே கூறிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே (9)

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்க ளெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடி பணிந்தேத்துவர் (10)

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீ சா
சரணம் சரணம் சற்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க (12)

இருமூர்த்தி மைந்தன் என் இரு செவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முக பூஜ்யன் நாவினைக் காக்க (13)

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களை காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க (14)

வீரமணி கண்டன் விரல்களைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளை காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க (15)

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப் பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்மாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா தொடையினைக் காக்க (16)

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க (17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானப் பிரபு அங்மெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்கிரஹநாதன் நடுப்பகல் காக்க *(18)*

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார்அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க *(19)*

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க *(20)*

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழித்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க *(21)*

கொடிய விலங்குகளும் கொள்ளை நோய்களும்
குருதியை குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய் *(22)*

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய் *(23)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணுகாமல்
என்றுமே காப்பாய் எரிமேலி தேவா (24)

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரி கிரீசா (25)

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச்சர்யமெனும் ஐம்பெரும் பேய்கள்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய் (26)

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம் லோகம் துன்மார்க்கமல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய் (27)

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய்யாமல்
உள்ளன்புடனே உன் திருநாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயே (28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமஸ்காரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ *(29)*

பொன்னம் பலத்துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியா நமோ நமோ
கரிகா யுதமுடைய சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ *(30)*

சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் *(31)*

(பிரம்மாண்ட புராணத்தில் கேரளீய மஹா த்மியத்தில் ஸ்ரீ பரகராமரால் ஐயப்பனைத் துதிக்கப்பட்ட கவசம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் நூற்றெட்டு சரணக்கோவை

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதானப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்போனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குல தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கலியுக வரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் சிவன்மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சிவ வைணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங்கோயில் அரசே சரணம் ஐயப்பா
ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப்புழை பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணிகண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையில் பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம் நிறை மெய்ப்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறை தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சினை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலி வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இரு முடிப்பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எரிமேலி தர்மசாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்ய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டை துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பெரும்ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தி தரும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பேரூர்த்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளைகட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதைமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனை பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றமே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந் தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதித் தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீபஜோதித் திருஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பழவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருப்பம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சி குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரி பீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ணசாமியே சரணம் ஐயப்பா
ஓம் கடுத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா
ஓம் பகவானின் சந்நிதியே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய்யபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராசப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புரத்தம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினி குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் சற்குரு நாதனே சரணம் ஐயப்பா
ஓம் மகர ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெட்டாம் படிப்பாடல்

1. ஒன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

2. இரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

3. மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

4. நான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

5. ஐந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

6. ஆறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

7. ஏழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

8. எட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

9. ஒன்பதாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

10. பத்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

11. பதினொன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

12. பன்னிரெண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

14. பதினான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

15. பதினைந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

16. பதினாறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

17. பதினேழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

18. பதினெட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. படி பதினெட்டும் சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

20. படி தொட்டு வந்தனம் சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

ஓம் சத்தியமான பொண்ணு பதினெட்டு
படிகளே சரணம் ஐயப்பா

## ஸாஸ்தா ஆராத்தி தீபமங்களம்

01. தீப மங்கள ஜோதி நமோ நமோ
தூய மங்கள லீலா நமோ நமோ
தேவகுஞ்சரி பாலா நமோ நமோ அருள்தாராய்

02. ஆர்யவம்ஷசுஜாதா நமோ நமோ
வீர்ய திவ்ய விலாசா நமோ நமோ
ஸாஸ்வ தாள் குரு தேவா நமோ நமோ பஹுகோடி

03. பூதவந்திதா தேவா நமோ நமோ
பீதி நாஸன ரூபா நமோ நமோ
மோஹனாம்புஜ பாதா நமோ நமோ மண்கண்டா

04. ராஜசோள வீரா நமோ நமோ
வாஜவாசன வாஹா நமோ நமோ
நீத நிருத்ய வினோதா நமோ நமோ வீராதி வீரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. கோர ராம வினாஷா நமோ நமோ
வார நூபுரதாரி நமோ நமோ
ஜோதி சாந்சிதிபடா நமோ நமோ ஜயசீலா

06. த்யதன மங்கள ரூபா நமோ நமோ
தான சுந்தர வாசா நமோ நமோ
வாச வாள் சதர தேவா நமோ நமோ நிர்லா தாஸா

07. காந்த ஸ்துங் நிவாஸா நமோ நமோ
காந்திக தேவா நமோ நமோ
தேவவந்ய கிரீசா நமோ நமோ பரதேவா

08. மூலமந்த்ர சொரூபா
யத்ஹமூவா நமோ நமோ
புத்ரதாயக தேவா நமோ நமோ வர பாலா

09. கேசவ சூனோ நமோ நமோ
பாஷஜன்ம வினாஸா நமோ நமோ
ஆர்த்தி நாஸனமூர்த்தே நமோ நமோ திவ்யரூபா

10. தீபமங்கள ஜோதி நமோ நமோ
தூயசபரி கிரீஸா நமோ நமோ
பூரணை புஷ்களை நாதா நமோ நமோ அருள் தாராய்
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்க கறுப்பு சாமி

*எங்க கருப்பு சாமி எங்க கருப்பு சாமி*
*எங்க கருப்பு சாமி எங்க கருப்பு சாமி*

*அக்கினியில் பிறந்தவராம்*
*அரனாரின்மைந்தன் அவர் (எங்க கருப்பு சாமி)*

*முக்கொண்டை காரரவன் - முன்கோபக்*
*காரர் அவன்*
*சந்தனப் பொட்டுக்காரன், சபரிமலை*
*காவல் காரன் (எங்க கருப்பு சாமி)*

*சடைமுடிக் - காரன் அவன், சுவாமிகளை காத்திடுவான்*
*சல்லடையை கட்டு வாரான், சாஞ்சி சிஞ்சி ஆடி வாரான்*
*(எங்க கருப்பு சாமி)*

*வில்லுப்பாட்டு பாடிவாரான், விதவிதமாய் ஆடி வாரான்*
*பந்தம் கையில் பிடிச்சு வாரான், பாரி வேட்டை ஆடி வாரான்*
*(எங்க கருப்பு சாமி)*

*அச்சங்கோவில் ஆண்டவர்க்கு எழிலாக இருப்பவனாம்*
*பதினெட்டுப் படிகளுக்கு காவலாய் இருப்பவனாம்*
*(எங்க கருப்பு சாமி)*

*கச்சையை கட்டி வாரான், கையருவாள் காட்டி வாரான்*
*மீசையை முறுக்கி வாரான், முச்சந்தியில் நடந்து வாரான்*
*(எங்க கருப்பு சாமி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லாளி வீரனுக்கு வீரமணி கண்டனுக்கு
இருமுடியை சுமக்கும்போது பாதுகாக்க வருபவனாம்
(எங்க கருப்பு சாமி)

கற்பூர ஆணி முன்னே, கடவுளாக நின்றிடுவான்
கறுப்பு வேட்டி கட்டிக்கிட்டு, பாவங்களைப் போக்கிடுவான்
(எங்க கருப்பு சாமி)

எங்க கருப்பன் வாரான் - எங்க கருப்பு சாமி
கார்மேகம் போல வாரான் - எங்க கருப்பு சாமி
அந்தாவாரான் - இந்தாவாரான் - கருப்பு சாமி
நாகவழி கொண்டு வாரான் - கருப்பு சாமி
முன்கோபக் காரன் வாரான் - கருப்பு சாமி
அருவாலு தூக்கி வாரான் - கருப்பு சாமி
ஜவ்வாது வாசக் காரன் - கருப்பு சாமி
வெள்ளிப் பிரம்பு கொண்டு வாரான் - கருப்பு சாமி
மேகமாக ஆடி வாரான் - கருப்பு சாமி
வேகமாக ஓடி வாரான் - கருப்பு சாமி
வாட்டசாட்டமாக வாரான் - கருப்பு சாமி
பம்பா நதி தீர்த்தத்திலே - கருப்பு சாமி
கறுப்பன் வரும் வேளையிலே - கருப்பு சாமி
கரண்ட அளவு தண்ணியிலே - கருப்பு சாமி
தள்ளிக்கொண்டு வாரானப்பா - கருப்பு சாமி
சாமி முட்டளவு தண்ணியிலே - கருப்பு சாமி
மூழ்கி கொண்டு வாரானப்பா - கருப்பு சாமி
அரையளவு தண்ணியிலே - கருப்பு சாமி
கருப்புசாமி நீந்தி வாரார் - கருப்பு சாமி
அந்தளவு தண்ணியிலே - கருப்பு சாமி
பங்காரமா ஓடி வாரார் - கருப்பு சாமி
எங்க கருப்பன் ஓடி வாரான் - கருப்பு சாமி
பம்பையிலே குளிச்சி வாரான் - கருப்பு சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்காக வாரான் ஐயா - கருப்பு சாமி
அந்தா வாரான் இந்தா வாரான் - கருப்பு சாமி
பெரியானை வட்டம் வாரான் - கருப்பு சாமி
சிறியானை வட்டம் வாரான் - கருப்பு சாமி
கரிமலையில் ஏறி வாரான் - கருப்பு சாமி
பகவதியை வணங்கி வாரான் - கருப்பு சாமி
இளவந்தவனை கடந்து வாரான் - கருப்பு சாமி
சாமி முக்குழிய தாண்டி வாரான் - கருப்பு சாமி
அழுதாமேடு உச்சி வாரான் - கருப்பு சாமி
காளைகட்டி தொட்டு வாரான் - கருப்பு சாமி
சாமி பூங்காவனம் புகுந்து வாரான் - கருப்பு சாமி
எருமேலி வாரானப்பா - கருப்பு சாமி
வாபர் சாமி கூட வாரார் - கருப்பு சாமி

வசனம் : -

எருமேலி வந்து இறங்கிய கருப்பன் சுற்றும் முற்றும் பார்க்க எம்பெருமான் கருப்பனுக்கு மல்ர்களென்றால் கொள்ளை பிரியம். அவர் மலர்களால் சல்லடை கட்டி வருகின்ற வேளையில் ஆ... ஆ... ஆ... ஆ காணக் கண்கள் கோடி வேண்டும். அவை என்னென் மலர்கள் என்று கேட்டால்

எடுத்து வைக்கும் கால்களுக்கு சாமந்தி சல்லடையாம்
முன்னே வைக்கும் கால்களுக்கு முல்லைப்பூ சல்லடையாம்
பின்னே வைக்கும் கால்களுக்கு பிச்சிப்பூ சல்லடையாம்
அருகில் வைக்கும் கால்களுக்கு அலரிப்பூ சல்லடையாம்
துள்ளி வைக்கும் கால்களுக்கு துளசியாலே சல்லடையாம்
வீசி வைக்கும் கால்களுக்கு குந்தத்தாலே சல்லடையாம்
துள்ளி வைக்கும் கால்களுக்கு அருகம்பூ சல்லடையாம்

உச்சந்தலை கட்டி வாரான் - கருப்பு சாமி
புலியாட்டம் ராஜா வாரான் - கருப்பு சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரிமலை காவல்காரன் - கருப்பு சாமி
பங்காரமாய் ஓடி வாரான் - கருப்பு சாமி
தமிழ்நாட்டு எல்லையிலே - கருப்பு சாமி
தாண்டி தாண்டி வாரானய்யா - கருப்பு சாமி
செங்கோட்டை கருப்பன் வாரான் - கருப்பு சாமி
தென்காசி சுடல வாரான் - கருப்பு சாமி
ஆம்பூட்டு கடல வாரான் - கருப்பு சாமி
சாக்கு மர முரட்டன் வாரான் - கருப்பு சாமி
ஆங்காரமாய் வாரான் ஐயா - கருப்பு சாமி
ஆவேசமாய் வாரான் ஐயா - கருப்பு சாமி
காவலாளி வாரான் ஐயா - கருப்பு சாமி
பாவநாசம் கோட்டைக்குள்ளே - கருப்பு சாமி
மனப்பேச்சி கூட வாரான் - கருப்பு சாமி

வசனம் : -

தேவர்கள் மலர் சொரியும் சொரிமுத்து ஐயனார் கோயிலில் வந்து இறங்கிய எம்பெருமான் கருப்பன், யார் யாரை வணங்குகின்றான் என்று கேட்டால்

என்னன்னா சட்டாநாத சாமியே
திருமகாலிங்க சாமியாரே ஐயப்போ
தட்சிணா மூர்த்தி சாமி சாமியே
சங்கிலிப் பூதத்தாரே ஐயப்போ
பாதாள பூதத்தாரே சாமியே
மேல்வாசல் பூதத்தாரே சாமியே
சுடர்மாடன் சாமிகளே ஐயப்போ
தரவாய்மான சாமிகளே சாமியே
உண்டிமாடல் சாமிகளே ஐயப்போ
பள்ளிமாட சாமிகளே சாமியே
உக்கிரகாளி தாயாரே சாமியே
வடபேச்சி தாயாரே ஐயப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கம்மா தாயாரே சாமியே
வண்டிமலைச்சி தாயாரே சாமியே
கட்டராயன் சாமியாரே சாமியே
கரடிமான சாமியாரே சாமியே
அகஸ்திய மாமுனியும் ஐயப்போ
அங்கரமாய் காட்சி தந்தாய் சாமியே
அகஸ்திய மாமுனியும் ஐயப்போ

வசனம் :-

இப்படியாக தரிசித்துக்கொண்டு வந்த எம்பெருமான் கருப்பன் இந்த ஐயப்பன் பூஜைக்கு வருவதற்கு ஆவல் கொண்டு கன்னிமாரையும், சாமியாரையும், ஐயப்பமாரையும் மாளிகப்புரங்களையும், ஆன்மீக நெஞ்சங்களையும் வாழ்த்தி அருள வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இந்த ஐயப்பன் பூஜைக்கு கருப்பன் வருகின்றான். பாங்காரமாய், பரவசமாய், உக்கிரமாய் ஓடி வருகிறான்.

எங்க கருப்பு சாமி... எங்க கருப்பு சாமி...
கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கருப்புசாமி
பங்காரமாய் ஓடி வாரான் கருப்புசாமி
கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கருப்புசாமி
பங்காரமாய் ஓடி வாரான் கருப்புசாமி
ஆவேசமாய் தேடி வாரான் கருப்பு சாமி
கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கருப்பு சாமி
(எங்க கருப்பு சாமி)

சாமியே சரணம் ஐயப்போ
கருப்பண்ண சாமியே சரணம் ஐயப்போ
சற்குரு நாதனே சரணம் ஐயப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பண்ண சாமி

கருப்பண்ண சாமி ஐயா கருப்பண்ண சாமி
சங்கிலிக்காரனே - ஐயா கருப்பண்ண சாமி

வெள்ளைக் குதிரையேறி வாராரே
எங்கள் குல தெய்வத் தோழன் கருப்பனே
காடு மேடு தாவி வாராரே
எருமேலி கோவக்காரன் கருப்பனே
வேட்டையுமாடி பேட்டையும் துள்ளி வீரமாய் வந்தானே
ஆதியுமாகி ஜோதியுமாகி பாதையாய் நின்றானே
சாமி சரணம், சாமி சரணம், சாமி சரணம், ஐயப்பா
சரணம், சரணம், சரணம், சரணம், சரணம், ஐயப்பா
(கருப்பண்ண சாமி)

கறுத்த வைரமே ஐயா கருப்பண்ண சாமி
கருப்பு சகரமே ஐயா கருப்பண்ண சாமி
கருப்பண்ண சாமி ஐயா கருப்பண்ண சாமி
சிங்க நடைபோட்டு வாராரு
நீலிமலைத் தோப்புக்காரன் கருப்பனே
புலிகள் புடை சூழ வாராரே
காந்தமலை கூத்துக்காரன் கருப்பனே
பெரியானை வட்டம், சிறியானை வட்டம் வேட்டைக்கு வாராரே
சந்திரன் போல, சூரியன் போல கோட்டைக்குப் போவாரே
சாமி சரணம், சாமி சரணம், சாமி சரணம், ஐயப்பா
சரணம், சரணம், சாமி சரணம், சரணம், சரணம், ஐயப்பா
(கருப்பண்ண சாமி)

வேட்டுச் சத்தமே ஐயா கருப்பண்ண சாமி
அது சலங்கை சத்தமே ஐயா கருப்பண்ண சாமி
காட்டுச் சத்தமே ஐயா கருப்பண்ண சாமி
எங்க பாட்டுச் சத்தமே ஐயா கருப்பண்ண சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டம் கிடுகிடுங்க வாரானே
அப்பாச்சி மேட்டுக்காரன் கருப்பனே
வானம் கிடுகிங்க வாரானே
இரும்புக் கோட்டைக்காரன் கருப்பனே
ஆட்டத்தை ஆடி, கூட்டத்தைத் தேடி காவலனாய் வாரானே
ஆனந்தமாகி தாண்டவமாடி காவலாய் நின்றானே

சாமி சரணம், சாமி சரணம், சாமி சரணம்,
சாமி சரணம், ஐயப்பா சரணம்,
சரணம், சாமி சரணம், சரணம், சரணம் (கருப்பண்ண சாமி)

கருப்பு... கருப்பு... கருப்பு... கருப்பு (கருப்பண்ண சாமி)

கறுப்பு சட்டையே ஐயா கருப்பண்ண சாமி
அது முரட்டு மீசையே ஐயா கருப்பண்ண சாமி
பட்டையக்காரனே ஐயா கருப்பண்ண சாமி
எங்க பந்தக்காரனே ஐயா கருப்பண்ண சாமி
அழுதா மலையே வாரானெ
அங்சு மலைக்காத்துப் போல கருப்பனே
கரிமலை இறக்கம் ஓடி வாரானே
ஆனைமலை வேட்டுக்காரன் கருப்பனே
சாமிகளோடு சந்தனமாகி சாட்சியும் சொன்னானே
சந்தனத்தோடு குங்குமத்தோடும் காட்சியும் தந்தானே
சரணம், சரணம், சாமி சரணம், சரணம் சரணம்,
சரணம், சரணம், சாமி சரணம், சரணம், சரணம் ஐயப்பா
(கருப்பண்ண சாமி)

மகர ஜோதியே ஐயா கருப்பண்ண சாமி
மனச உருக வைக்கிறியே ஐயா கருப்பண்ண சாமி
ஐயா கருப்பண்ண சாமி ஐயா கருப்பண்ண சாமி
பதினெட்டுப்படிவீரன் வாரானே கொடிமரக் காப்புக்கட்டி
கரப்பனே
சரங்குத்தி ஆட்டமாடி வாரானே பெரிய பாதையழகன்
கருப்பனே
(கருப்பண்ண சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்ம சாஸ்தா காயத்ரி

பூத நாதார வித்மஹே
பவநந்தனாய தீமஹி
தந்தோ சாஸ்தா ப்ரசோதயாத்

சாஸ்தா பஞ்ச ரத்னம்
ஸ்ரீ சாஸ்தா அஸ்டகம்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரட்க்ஷாகரம் விபும்
பார்வதி ஹிருதயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம் (சாமியே சரணம் ஐயப்பா)

விப்ரபூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம் ஸுதம்
ஷிப்ர ப்ரசாத நிரதம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம் (சாமியே சரணம் ஐயப்பா)

மத்த மாதங்க கமனம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸ்ர்வ விக்னஹரம் தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம் (சாமியே சரணம் ஐயப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்மத் குலேஸ்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரசாதாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம் (சாமியே சரணம் ஐயப்பா)

பாண்யேச வம்ஸதிலகம்
கேரள கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்ய ஹம் (சாமியே சரணம் ஐயப்பா)

பஞ்சரத்னாக்கியமே தத்யொ
நித்யசுத்தப்படேன் நரஹா
தஸ்யப் பிரசன்னோ பகவான்
சாஸ்தா வசதி மானஸே (சாமியே சரணம் ஐயப்பா)

ஸ்ரீ பூத நாதா சதானந்த
ஸ்ர்வ பூத தயாபரா
ரட்ச ரட்ச மஹா பாஹோ
ஸாஸ்த்ரே துப்யம் நமோ நமஹ (3)
(சாமியே சரணம் ஐயப்பா)

ஓம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக்காத்து இரட்சிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சத்தியமான பொண்ணு பதினெட்டாம் படி மேல் வாழும், ஓம் ஸ்ரீ அரிஹரசுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா, காசி ராமேஸ்வரம், பாண்டி, மலையளம் இலங்கை யாழ்ப்பாணம் கந்தர்மடம் மணிகண்ட சபை சண்டிலிப்பாய் அடக்கி ஆளும் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்பன் சுவாமியே சரணம் ஐயப்பா.

தினமும் ஐயன் 108 சரண கோவையை காலை, மாலை பாராயணம் செய்து இஷ்ட சித்திகளை அடையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிநடைப் பாடல்

சாமியே — ஐயப்போ
ஐயப்போ — சாமியே
சாமி சரணம் — ஐயப்ப சரணம்
ஐயப்ப சரணம் — சாமி சரணம்
பள்ளிக்கட்டு — சபரிமலைக்கு
சபரிமலைக்கு — பள்ளிக்கட்டு
கல்லும் முள்ளும் — காலுக்கு மெத்தை
காலுக்கு மெத்தை — கல்லும் முள்ளும்
குன்றும் குழியும் — கண்ணுக்கு வெளிச்சம்
கண்ணுக்கு வெளிச்சம் — குன்றும் குழியும்
ஏற்றி விடப்பா — தூக்கிவிடப்பா
தூக்கி விடப்பா — ஏற்றிவிடப்பா
தாங்கி விடப்பா — ஏந்தி விடப்பா
ஏந்தி விடப்பா — தாங்கி விடப்பா
கடினம் கடினம் — கரிமலை ஏற்றம்
கரிமலை ஏற்றம் — கடினம் கடினம்
பாதபலம் தா — தேக பலம் தா
தேகபலம் தா — பாதம் பலம் தா
கட்டுக்கட்டு — இருமுடி கட்டு
இருமுடி கட்டு — சபரி மலைக்கு
இரட்சிக்கனும் — ஐயப்பா
காடுமலைகடினம் — ஐயப்பா
பம்பையின் பாலா — ஐயப்பா
பந்தள வேந்தா — ஐயப்பா
பாவ வினாசா — ஐயப்பா
சுவாமியே — ஐயப்பா
ஐயப்போ — ஐயப்பா
நெய்யபிஷேகம் — சுவாமிக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சுவாமிக்கே | நெய்யபிஷேகம் |
| பாலபிஷேகம் | சுவாமிக்கே |
| தேனபிஷேகம் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | தேனபிஷேகம் |
| பன்னீரபிஷேகம் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | பன்னீரபிஷேகம் |
| கதலிப்பழமும் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | கதலிப்பழமும் |
| கற்பூரதீபம் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | கற்பூரதீபம் |
| கருடன் வருவதும் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே கருடன் | வருவதும் |
| காணிப்பொன்னும் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | காணிப்பொன்னும் |
| ஆபரணப்பெட்டி | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | ஆபரணப்பெட்டி |
| பேட்டை துள்ளல் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | பேடடை துள்ளல் |
| தேவனே | தேவியே |
| தேவியே | தேவனே |
| தேவன் பாதம் | தேவி பாதம் |
| தேவி பாதம் | தேவன் பாதம் |
| தேவன் சரணம் | தேவி சரணம் |
| தேவி சரணம் | தேவன் சரணம் |
| பகவானே | பகவதியே |
| பகவதியே | பகவானே |
| பகவான் பாதம் | பகவதி பாதம் |
| பகவதி பாதம் | பகவான் பதம் |
| பகவான் பாதம் | பகவதி சரணம் |
| பகவதி சரணம் | பகவான் சரணம் |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஈஸ்வரியே | ஈஸ்வரனே |
| ஈஸ்வரன் பாதம் | ஈஸ்வரி பாதம் |
| ஈஸ்வரி பாதம் | ஈஸ்வரன் பாதம் |
| ஈஸ்வரன் சரணம் | ஈஸ்வரி சரணம் |
| ஈஸ்வரி சரணம் | ஈஸ்வரன் சரணம் |
| தேவன் மாரே | தேவிமாரே |
| தேவி மாரே | தேவன்மாரே |
| பகவான் மாரே | பகவதி மாரே |
| பகவதி மாரே | பகவான் மாரே |
| ஈஸ்வரன் மாரே | ஈஸ்வரி மாரே |
| ஈஸ்வரி மாரே | ஈஸ்வரன் மாரே |
| சுவாமி மாரே | ஐயப்பன் மாரே |
| ஐயப்பன் மாரே | சுவாமி மாரே |
| சுவாமி பாதம் | ஐயப்பன் பாதம் |
| ஐயப்பன் பாதம் | சுவாமி பாதம் |
| ஐயப்பன் சரணம் | சுவாமி சரணம் |
| ஐயப்பன் சரணம் | சுவாமி சரணம் |
| சுவாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சுவாமியே |

எப்போ போறோம் மலைக்கு
ஜோதிக்குப் போறோம் மலைக்கு
யாரைக்காண போறோம்
சுவாமியைக் காணப் போறோம்

சுவாமியைக் கண்டால் மோட்சம் கிட்டும்
எப்போ கிட்டும் இப்போ கிட்டும்
எங்கே கிட்டும் இங்கே கிட்டும்
அணியணும் அணியணும் துளசிமாலை அணியணும்
துளசிமாலை அணியணும் அணியணும் அணியணும்
போடோனும் போடோனும் அன்னதானம் போடோனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானம் போடோனும் போடோனும் போடோனும்
தெளிக்கனும் தெளிக்கனும் பன்நீரைத் தெளிக்கனும்
பூசோனும் பூசோனும் சந்தனத்த பூசோனும்
சந்தனத்த பூசோனும் பூசோனும் பூசோனும்
வேண்டோனும் வேண்டோனும் ஐயப்பன வேண்டோனும்
ஐயப்பன வேண்டோனும் வேண்டோனும் வேண்டோனும்
துள்ளோனும் துள்ளோனும் கன்னிச்சாமி துள்ளோனும்
கன்னிச்சாமி துள்ளோனும் துள்ளோனும் துள்ளோனும்
ஆடோனும் ஆடோனும் பேட்டை துள்ளல் ஆடோனும்
பேட்டை துள்ளல் ஆடோனும் ஆடோனும் ஆடோனும்
சுமக்கோனும் சுமக்கோனும் இருமுடியை சுமக்கோனும்
இருமுடியை சுமக்கோனும் சுமக்கோனும் சுமக்கோனும்
குளிக்கோணும் குளிக்கோணும் பம்பையில் குளிக்கோணும்
பம்பையில் குளிக்கோணும் குளிக்கோணும் குளிக்கோணும்
போகோணும் போகோணும் பெரியபாதை போகோணும்
பெரியபாதை போகோணும் போகோணும் போகோணும்
ஏறோனும் ஏறோனும் பதினெட்டுப்படிகள் ஏறோனும்
பதினெட்டுப்படிகள் ஏறோனும் ஏறோனும் ஏறோனும்
காணோணும் காணோணும் ஐயப்பன காணோணும்
ஐயப்பன காணோணும் காணோணும் காணோணும்
செய்யோனும் செய்யோனும் நெய்யபிஷேகம் செய்யோனும்
நெய்யபிஷேகம் செய்யோனும் செய்யோனும் செய்யோனும்
காணோணும் காணோணும் மகரஜோதி காணோணும்
மகரஜோதி காணோணும் காணோணும் காணோணும்
பார்க்காதே பார்க்காதே அக்கம் பக்கம் பார்க்காதே
அக்கம் பக்கம் பார்க்காதே பார்க்காதே பார்க்காதே
பேசாதே பேசாதே வீண்வார்த்தை பேசாதே
வீண்வார்த்தை பேசாதே பேசாதே பேசாதே
ஈப்பிஞ்சப்பா ஐயப்பா
லாலல் லோனா ஐயப்பா
லல்லல் லோனா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

மாமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கே மங்களம்
தவமுனிவர் போற்றும் அந்த சன்னதிக்கு மங்களம்
இபமுகவன் முருகனுக்கு இளையவனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்
புலிமிசையே பவனிவரும் புனிதனுக்கு மங்களம்
புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்
அன்புடனே அருள்புரியும் ஐயனுக்கு மங்களம்
அழகேவுருவான எங்கள் மெய்யப்பனுக்கு மங்களம்
வெற்றி தரும் வில்லெடுத்த வேந்தனுக்கு மங்களம்
வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு மங்களம்
பம்பை நிதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தளன்பேர் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்
கந்தர்மடம் தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
ஸ்ரீ ஐயப்பா மணிகண்ட சேவா சங்க மங்களம்
சண்டிலிப்பாய் தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்
மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்
நித்திய சுப மங்களம்
நித்திய சுப மங்களம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிவ ராஸனம்
# சுவாமியே சரணம் ஐயப்பா

சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா

ஹரிவ ராஸனம் ஸ்வாமி விஸ்வமோஹனம்
ஹரித தீஸ்வரா ஸ்வாமி ராத்யபாதுகம்
அரிவிமர்த்தனம் ஸ்வாமி நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

சரண கீர்த்தனம் ஸ்வாமி சக்தமாசனம்
பரணலோலுபம் ஸ்வாமி நர்த்தனாலயம்
அருணபாஸுரம் ஸ்வாமி பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

ப்ரணய ஸத்யகா ஸ்வாமி ப்ராணநாயகம்
ப்ரணத கல்பம் ஸ்வாமி சுப்ரபாஞ்சிதம்
ப்ரணவ மந்திரம் ஸ்வாமி கீர்த்தப் பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

துரக வாஹனம் ஸ்வாமி ஸுந்தரானனம்
வரகதாயும் ஸ்வாமி வேதவர்ணிதம்
குரு க்ருபாகரம் ஸ்வாமி கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

த்ரிபுவனார்ச்சிதம் ஸ்வாமி தேவதாத்மகம்
த்ரிணயனம் பிரபும் ஸ்வாமி திவ்யதேசிகம்
த்ரிச பூஜிதம் ஸ்வாமி சிந்தி தப்பிரதம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவபயாபஹம் ஸ்வாமி பாபுகாவுகம்
புவன மோஹனம் ஸ்வாமி பூதிபூஷணம்
த்வள வாரணம் ஸ்வாமி திவ்யவா ஹணம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

களமிருதுஸ்மிதம் ஸ்வாமி சுந்தரானனம்
களப கோமளம் ஸ்வாமி காத்ர மோஹனம்
களப கேசரி ஸ்வாமி வாஜி வாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

ச்ரித ஜனப்பிரியம் ஸ்வாமி சித்திரப்தம்
சுருதி விபூசணம் ஸ்வாமி ஸாது ஜீவனம்
சுருதி மனோகரம் ஸ்வாமி கீதலாலயம்
ஹரிஹாத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

## மங்களம்

பஞ்சாத்றீஸ்வரி மங்களம் ஹரிஹரப் பிரேமாறுதே மங்களம்
பிஞ்சாலங்க்றுத மங்களம் ப்றணமதாம் சிந்தாமணி மங்களம்
பஞ்சாஸ்யத்வஜ மங்களம் த்றிஜகதாமாத்யப்பிறபோ மங்களம்
பஞ்சாஸ்த்றோபம மங்களம் ஸ்றுதிசிறோலங்கார சன் மங்களம்

ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நிம்மதி!

வாழ்க்கை இனிமையானது. எப்போது என்று நினைக் கிறீர்கள்? எமது கடமைகளைத் தவறாது செய்யும் போது. நாம் எதிர்பார்த்தவை கிடைக்கும் போது. நிஜமாக வாழ்க்கை இனிமையாக அமைய வேண்டுமானால் இறை நம்பிக்கை எமக்கு அவசியம் வேண்டும். அதற்கு எமது பெற்றோர், அயலவர், நாம் வாழும் சூழல் யாவும் உயர் நோக்கம் கொண்டவையாக அமைய வேண்டும். இறை நம்பிக்கை எமது வாழ்க்கைக்கு பக்க பலமாகவும் ஆதாரமாகவும் அமைய வேண்டும்.

இறைவழிபாட்டின் முதற்படி பிரார்த்தனை. இதுவே சமய வாழ்வின் பால பாடம். என்னவெல்லாம் எமக்கு அவசியமோ எவை எவையெல்லாம் எமக்கு அமைய வேண்டி உள்ளதோ அவற்றையெல்லாம் இறை நம்பிக்கை மூலம் பெற்றுவிடலாம் என்பதை அருளாளர்களின் வாழ்க்கை வரலாறு மூலம் யாம் அறிய முடிகின்றது. இங்கேதான் நிம்மதி பிறக்கின்றது.

இறை நம்பிக்கையும் பிரார்த்தனையும் எமக்கு அளிக்கும் பற்பல நன்மைகளில் மிகச் சிறந்தவை உயர்ந்த மனநிம்மதி, மனோலயம். நிம்மதி எமக்குக் கிடைக்குமாயின் வேறென்ன எமக்கு வேண்டும்? எல்லாமே கிடைத்த மாதிரித்தான். எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும், மனதிலே, வீட்டிலே, நாட்டிலே. இது அனுபவ உண்மை. இல்லையா...?

அறிஞர் "Tolstoy' யின் வாழ்வில் ஒரு சம்பவம். 'Tolstoy' என்ற மிகப்பெரிய அறிஞரிடம் கல்வி அறிவு இருந்தது. புகழ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம், வளமான வாழ்வு மொத்தத்தில் எல்லாமே இருந்தது. ஆனால் அவருக்கு என்னவோ மனதிலே நிம்மதியிருக்க வில்லை. நிம்மத்தியைத் தேடினார் அவர். நிம்மதியற்ற நிலையில் வயல் வெளியே அவர் சென்றுகொண்டிருந்த போது ஒரு ஏழை விவசாயியைச் சந்திக்கிறார். அவன் கடுமையான வயல் வேலை செய்யும் சாதாரண ஒரு மனிதனாக வாழ்ந்த போதும் அவன் மிகுந்த நிம்மதியோடும் மன நிறைவோடும் பாடிக்கொண்டு உல்லாசமாகக் காணப்பட்டதை உணர்ந்தார் 'Tolstoy'. அவன் பாடிக்கொண்டிருந்த பாட்டிலே அவனது மனதின் நிறைவை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

அவனது நிம்மதியான வாழ்க்கையின் காரணத்தை அவனிடம் அறிய முயன்றார் 'Tolstoy'. அதற்கு அவன் அளித்த பதில், “நான் எனது கடமைகளைச் சரிவரச் செய்கின்றேன். வேறு பெரிதாக ஒன்றும் யான் செய்துவிடவில்லை. எனது மனம் நிறைவாகவே இருக்கின்றது“. இது விவசாயி அவருக்கு அளித்த பதில்.

வீடு திரும்பிய 'Tolstoy'தன்னைச் சுய பரீட்சை செய்தார். எவ்வளவோ படித்தேன், என்னென்னவற்றை எல்லாம் எழுதினேன். ஆனால் ஆத்மார்த்தமாக யான் யாது செய்தேன்? ஒன்றையுமே செய்யவில்லையே, நிதானம் இல்லை, தியானம் இல்லை, பின் ஏது நிம்மதி? 'Tolstoy'சிந்திக்க ஆரம்பித்தார். நிர்மலமாக. அதுவே தியானமாக மாறியது. அவருக்கு நிம்மதி தோன்ற ஆரம்பித்தது. நிம்மதி எமக்கு வேண்டியதொன்று. அதனைப் பெறின் யாம் தேவ குணங்களைப் பயில வேண்டும். பின்பற்ற வேண்டும். கருணை, பொறுமை, கொடை, அன்பு, இரக்கம் போன்றவை தேவ குணங்களாம். இவற்றை யாம் பின்பற்றினால் அவை எமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லை. உதாரணத்திற்கு உங்களுக்கு ஒரு கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்தில் ஏகநாதர் என்ற பாண்டுரங்க பக்தர் ஒருவர் கங்கைக் கரையிலே வாழ்ந்து வந்தார். அவர் தனது பாவங்கள் தீருமாறு தினமும் ஒருமுறை கங்கையில் நீராடி வந்தார்.

ஒரு நாள் மூடன் ஒருவன் அவர் கங்கையில் மூழ்கி நீராடிக் கரையேறியதும் அவர் மேல் வெற்றிலை பாக்கு எச்சிலை உமிழ்ந்தான். திடுக்குற்ற ஏகநாதர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மறுபடியும் கங்கையுள் மூழ்கி நீராடிக் கரையேறி னார் அவர் கரையேறியதும் மீண்டும் அந்த மூடன் வெற்றிலை எச்சிலை அவர்மேல் உமிழ்ந்தான். மீண்டும் ஒன்றும் பேசாது, மூடன் மேல் சினம் கொள்ளாது ஏகநாதர் கங்கையில் மூழ்கிக் கரையேறினார். அவர் கரையேறியதும் மீண்டும் மூடன் அவர் மேல் எச்சிலை உமிழ்ந்தான். மீண்டும் பொறுமையைக் கடைப்பிடித்தார் ஏசுநாதர். இவ்வண்ணம் 108 முறை நடந்தது. 108ம் முறை மூர்க்கன் மனம் மாறி மனம் வருந்தி ஏசுநாதரின் பொறுமையக் கண்டு வியந்து அவரின் காலில் விழுந்து மனிப்புக்கோர ஆயத்தமானான். ஆனால் ஏசுநாதர் அதற்கு விடாமல் தானே மூடனின் காலில் வீழ்ந்தார். பின்னர் கூறினார்.

"அப்பனே! உனக்கு எதுக்கு மன்னிப்பு! நான் அல்லவா உனக்கு நன்றி சொல்ல வேண்டும். மிகப் புனிதமான இந்தக் கங்கையில் ஒரு முறை மூழ்கி எழுந்தாலே மிகுந்த புண்ணியம் கிடைக்கும். இன்று உன்னுடைய தயவால் 108 முறை கங்கையில் நீராடிய புண்ணியத்தைப் பெற்று விட்டேன். உன் கருணை இல்லாவிட்டால் ஒரு முறை தானே நீராடியிருப்பேன்" என்றார். மூடன் தன் தவறை அப்போதுதான் உணர்ந்தான். ஏகநாதர் தான், தேவன் ஆனதோடல்லாமல் மூடனையும் தேவனாக்கிவிட்டார். தேவ குணங்கள் தான் வாழ்வில் வேண்டிய நிம்மதியைத் தரவல்லன. கடைப்பிடிப்போமா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேழமுகத்து விநாயகன்

வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும் என்பது அனுபவ உண்மை. சிவனுக்கும் உமைக்கும் மூத்த பிள்ளை விநாயகர், வல்லவர், நல்லவர், பொலிவானவர், நிறைவானவர், எக்கருமத்தை தொடங்கும் போதும் விக்னேஸ்வரனை முதலில் தொழுது கருமத்தை ஆரம்பிப்பது தொன்று தொட்டு எம்மிடையே இருந்து வரும் மரபாகும். நாம் ஒன்றை எழுத ஆரம்பிக்கும் முன் பிள்ளையார் சுழி இடுவதும் இதனாலே தான். ஆனால் இன்றைய இளைய தலைமுறையினர் பலரிடம் இவ்வழக்கம் காணப்படுவதாக இல்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயம். பெற்றோர் முதலில் இதனை தம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஆரம்பம் இடையூறின்றி இருந்தால் தானே முடிவில் வெற்றி கிட்டும். இல்லையா? கர்நாடக இசைக் கச்சேரியைக் கேட்டுப் பாருங்கள்! பாடுபவர் ஹம்சத்வனி ராகத்தில் அமைந்த "வாதாபி கணபதிம் பஜேம்" என்ற கீர்த்தனையை ஆரம்பித்து, சங்கடமில்லாமல் கச்சேரியைத் தொடருவார். இங்கும் கணபதி காப்புத்தான்.

விநாயகப் பெருமானைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான சம்பவம் சொல்கிறேன் கேளுங்கள்.

எழுத்தை ஆள்பவன் எழுத்தாளன் என்று சொல்வார்கள். உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவர் தான் வியாசர். அவருக்கும் ஒரு பிரச்சனை எழுந்தது. என்ன பிரச்சினை என்று நினைக்கிறீர்கள் அவருக்கு!

அவர் சொல்லும் வேகத்தில் எழுதி முடிக்க ஆள் கிடைக்காத பிரச்சினை தான் அவருக்கு. இலக்கியத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையாக வடித்தெடுத்த அவருக்கு அவற்றை எழுது விப்பது ஒரு பிரச்சினையாகி விட்டது. தன் நண்பர் நாரதரிடம் ஆலோசனை கேட்டார் வியாசர்.

பிள்ளையாரைப் பிடித்தால் பிரச்சினை தீரும் என்று பதில் தந்தார் நாரத முனிவர். மகிழ்ந்தார் மகிரிஷி வியாசர்.

பிள்ளையாரைப் பிடித்தால் பிரச்சினை தீரும் என்று பதில் தந்தார் நாரத முனிவர். மகிழ்ந்தார் மகிரிஷி வியாசர். பிள்ளையாரும் பிரசன்னம் தந்தார். நான் சொல்லும் வேகத்தில் எழுதுங்கள். சுவாமி! வியாசர் கூறினார்.

"நான் எழுதும் வேகத்தில் உங்களால் சொல்ல முடியுமா?" திருப்பிக் கேட்டார் விநாயகப் பெருமான்.

பிரச்சினையின் விளிம்பில் புதிய பிரச்சினை தோன்றி விட்டது. இது தானே வாழ்க்கை.

நீங்கள் எழுதும் வேகத்தில் சொல்ல வேண்டுமா? சொல்கின்றேன்.

அது எப்படி முடியும்?

உங்கள் அருள் இருந்தால் முடியும். வியாசர் பதில் அளித்தார்.

விநாயகப் பெருமான் சிரித்தே விட்டார்.

சின்னக் கண்கள் குவிய பெருவயிறு குலுங்க கணபதி சிரித்தார். எத்தனை அழகான சிரிப்பு.

சற்று கற்பனை செய்து பாருங்கள்!

வியாசர் சொல்லிக் கொண்டேயிருந்தார். கணபதி எழுதிக் கொண்டேயிருந்தார். இங்கே விஷேசம் என்ன என்றால், மனிதன் இட்ட பணியைக் கடவுள் செய்கிறார். மக்கள் பணியே மகேசன் பணி என்பது இது தானோ! கடவுள் தொண்டர்க்கு அடிமை, இப்படியும் சொல்லலாம். தனக்கென்று ஒரு தலைவன் இல்லாத விநாயகப் பெருமான் தொண்டர்க்கு பணி செய்யும் அழகுதான் அழகு. கடவுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணையும் மனித முயற்சியும் இணைந்தால் எது தான் சாத்தியமில்லை! எதிலுமே வெற்றிதான். திடீரென கணபதியின் எழுதுகோல் முறியவே கணபதி தன் அழகான தந்தங்களில் ஒன்றை திடீரென முறித்து அதைக்கொண்டு எழுதலானார்.

இது கண்டு பதறினார் வியாசர்.

சுவாமி! அழகான தந்தம் அதை முறித்து மூளியாக்கி விட்டீர்களே!

கணபதி புன்னகையோடு பதில் தந்தார். அழகு என்பது பார்த்து ரசிப்பதற்கு மட்டுமா? பிறருக்கு பயன்பட வேண்டாமா? அழகாக இருக்க ஆசைப்படுபவர்கள் கருத்துக்கும் அழகாய் இருக்க வேண்டாமா? அழகை இழந்தாகிலும் அடுத்தவர்க்குப் பயன்பட வேண்டாமா? இது விநாயக தத்துவம்.

இச்சம்பவம் அருணகிரிநார் மனதில் கொண்டார். என்ன அநியாயம்! வியாசர் சொல்லியா பாரதத்தை கணபதி எழுத வேண்டும்? அவருக்கு இது முன்கூட்டியே தெரியாதா?

வார்த்தைகள் உதிர்ந்தன.

"முத்தமிழ் அடைவின் முற்படுகிரிதனில்

முற்பட எழுதிய முதல்வோனோ" என்றார்.

எனவே கஷ்டங்கள் வந்தால் கவலை வேண்டாம். வேண்டுங்கள் கணபதியை, கைகொடுக்க ஓடி வருவார்.

மனிதன் கடவுளுக்காகவா? அல்லது கடவுள் தான் மனிதனுக்காகவா?

சற்று சிந்தியுங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்விற்கு நல்லவை

மக்கள் வாழ்வு மிக எளிமையான தன்மையையும் உயர்வான எண்ணங்களையும் கொண்டதாக விளங்க வேண்டும். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னையும் பிறரையும் தங்களைச் சுற்றியுள்ள உயிரினங்களையும் வாழ்விற்கும் வண்ணம் வாழ வேண்டும். தன்னுயிர் போல மனினுயிரையும் பேணி வாழும் வாழ்வே சிறந்தது. பகைவரிடத்தும் பெருந்தன்மையுடன் பழக வேண்டும். மறந்தும் பிறருக்கு கேடு நினைக்கக் கூடாது. இரக்கம், நல்லொழுக்கம், அடக்கம் என்பவற்றை தம் உயிரினும் மேலாக மதித்து வாழ வேண்டும். இத்தகைய பண்புகள் மனித வாழ்வு செம்மையுற உதவுவனவாகும். ஆயினும், இவற்றுடன் வேறு சில பண்புகளும் மனித வாழ்வைச் செம்மைப்படுத்துவன. அவற்றை இங்கு நோக்கலாம்.

**இன்சொல்**

பிறருக்கு எந்த வகையிலும் துன்பத்தை ஏற்படுத்தாத சொல்லே இன்சொல்லாகும். மக்கள் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் அறம் செய்ய வேண்டும். அதிலே மொழியாற் புரியும் அறமாகத் திகழ்வது ஆண்டவன் திருநாமத்தையும் புகழையும் பாடுவதும், பேசுவதும் மற்றும் பிறருக்குத் துன்பம் பயவாத இன்சொற்களைப் பேசுவது மாகும். பேச்சினுக்கு உயிர்நாடியாக அமைவது இன்சொல்லா கும்.

"வாயே வாழ்த்துக் கண்டாய்" என்கிறார் நாவுக்கரசர். வாழ்த்துவது மட்டுமன்றி வழங்குவதுங்கூட நாவினது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாடாகும். மனிதன் தனது எண்ணங்களையும் கருத்துக்களையும் பிறருக்கு வழங்குகின்றான். அதுவும் ஒரு விதமான தானமே.

பெரும் பொருட் செலவு செய்து புரியும் ஈகையை விட அன்புடன் முகம் மலர்ந்து பிறருக்கு இன்சொல் கூறுவது மிகச் சிறந்ததாகும்.

"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே" என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். சொற்கள் மந்திரமாகவும் போற்றப்படுகின்றன.

"நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே" என்பது நாவுக்கரசர் வாக்காகும்.

**நன்னடத்தை**

மனிதர் தனித்து வாழ முடியாது; சமூகத்துடன் சேர்ந்தே வாழ வேண்டும். மனிதன் ஒருவன் தான் வாழும் சமூகத்திற்கும் தனக்கும் நன்மை பயக்கும் வகையிலே கடமைகளைப் புரிய வேண்டும். அதனை நாம் நன்னடத்தை எனலாம். எப்போதும் நல்லனவற்றைச் சிந்திப்பதே சிறந்தது. நல்லனவற்றையே பார்த்து, நல்லனவற்றையே பேசி, நல்லனவற்றையே செய்யவும் வேண்டும். நன்மைகள் செய்ய முடியாவிட்டாலும் தீமை களைப் பிறருக்குச் செய்யாமல் தவிர்த்தலும் நன்னடத்தை யாகும். திரிகரணங்களும் தூய்மையாக விளங்கும் போது, நன்னடத்தை உருவாகும். மனிதர்களிடையே உயர்வு தாழ்வுகள் பிறப்பினாலே ஏற்படுவனவல்ல. அவை அவர்களது நடத்தையினாலும் ஒழுக்கத்தினாலும் ஏற்படுவனவல்ல. நன்னடத்தை உயடைவர்கள் மேலானவர்கள். அவர்கள் நற்கருமங்களிலும் நற்செய்கைகளிலும் ஈடுபடுவதனால் சான்றோராகின்றனர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் களும் இவர்களே. நன்னடத்தைகள் ஏற்பட வேண்டுமானால் உண்மை, நேர்மை, தியாகம், தன்னலமறுப்பு என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்திலே ஏற்பட வேண்டும். மனமது செம்மையானால் பேச்சிலும் செயலிலும் செம்மை உண்டாகும். அதனால் சிறந்த நல்லொழுக்க வாழ்வு வாழ வழியேற்படும்.

## நீதி

"மேன்மை கொள் சைவநீதி", என்பது ஆன்றோர் கூற்று. நீதி சைவத்தினால் போற்றப்படுகிறது. சிவபெருமான் நீதியே வடிவமானவர். நீதி என்றால் என்ன? .......... என்ற கேள்வி எமக்குள் எழலாம். பிறருக்கு எது துன்பம் என்று தோன்றுகின்றதோ அதனைப் பிறருக்கு நாம் செய்யக் கூடாது. அதுவே நீதியாகும்.

"உற்றநோய் நோன்றலுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு"

என்னும் குறளும் இக்கருத்தையே விளங்குகின்றது.

"தன்னுயிர் போல மனினுயிரையும் ஓம்பும் வாழ்வு" சைவ நீதியாகும். ஒவ்வொருவரும் எந்த அளவிற்கு நீதியைச் சார்ந்து நிற்கின்றனரோ அந்த அளவிற்குக் கடவுளைச் சார்ந்திருப்பவர் ஆவார்.

"மாலும் அயனும் காணாத நீதியே"

என சிவபெருமானை மணிவாசகப் பெருமான் குறிப்பிடுகின்றார். நீதி இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் செறிந்து காணப்படுகின்றது. ஆனாலும், அந்நீதி எல்லோர் கண்களுக்கும் எளிதிலே புலப்படமாட்டாது. நான், எனது என்ற அகங்கார, மமகார உணர்வுகள் இருப்பவர்களுக்கு அந்த நீதி புலப்படாது. ஆதலால், நாம் அன்புள்ளவராகவும், பண்புள்ளவராகவும் மன்னுயிர் ஓம்புபவராகவும் நீதிநெறியில் நின்று வாழ்ந்தால்தான் இறையருளைப் பெறமுடியும்.

தேடல் : செ.நிகேதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளாந்த கடமைகளில் இறை சிந்தனை

**வீட்டில் சைவம்**

மனித நாகரிக வளர்ச்சியுடன் வீடு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மனிதர்களின் வாழ்வின் அனைத்து அம்சங் களும் வீட்டினைத் தொடர்புபடுத்தியே பின்னப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமான இடத்தை சமயம் வகிக்கின்றது. சைவசமயிகள் அனைவரும் தமது இல்லங்கள் தோறும் சமய சிந்தனையுடனேயே கருமங்கள் அனைத்தையும் ஆற்றுகின்றனர். நாம் காலையில் எழுவதிலிருந்து நித்திரைக்குச் செல்லும் வரை இறை சிந்தனையுடனேயே செயற்படு கின்றோம். காலையில் நித்திரை விட்டெழும்போதே "சிவசிவ" என்று சொல்லிக்கொண்டே எழுகின்றோம். இதுவே ஒவ்வொரு நாள் தொடக்கத்திலும் நாம் ஆற்றும் முதல் இறை வணக்கமாகும். பின்னர், சூரிய நமஸ்காரம் இடம்பெறு கின்றது. தொடர்ந்து வீட்டைக் கூட்டிச் சுத்தப்படுத்தி தொடர்ந்து, மஞ்சள்நீர், சாணம் என்பவற்றால் வீட்டையும், வீட்டுச் சூழலையும் சுத்தப்படுத்துகின்றோம். "தூய்மையான இடங்களில் மட்டுமே இறைவன் உறைவான்" என்பதை நாம் உணர்கின்றோம்.

தினமும் சுத்தமான நீரில் நீராடிய பின்னர், வீட்டிலே சுவாமி அறையிலுள்ள தெய்வப் படங்களுக்குப் பூவும் நீரும் வைத்து, தூபம் காட்டி, பஞ்ச புராணம் பாடி, இறையருளை வேண்டி நிற்கின்றோம். வழிபாட்டின் இறுதியில் "சிவ சிவ" என்று கூறிக்கொண்டு, நெற்றியில் விபூதி தரிக்கின்றோம். இவ்வாறாக நாம் காலைப் பொழுதுகளில் தினமும் வீடுகளில் இறை வழிபாட்டில் ஈடுபடுகின்றோம். சைவசமயிகள் எல்லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுகளிலும் ஜீவகாருண்யம் மிக்கவர்களாக இருக்க வேண்டும். அதன் பொருட்டு வீட்டில் வளர்க்கும் பசு முதலிய பிராணிகளுக்கு உணவளித்தல், அவற்றைத் தெய்வங்களாகக் கருதுதல், வறியவர்களுக்கும், இல்லாதோருக்கும் இன்முகத்து டன் உணவளித்தல், பிறருடன் இனிய வார்த்தைகளால் அன்புடன் உரையாடுதல் போன்றன செய்தல் வேண்டும். இவற்றை நாம் நித்திய கருமங்களாக எண்ணி ஆற்றுதல் வேண்டும். சைவசமயிகள் தமது வீட்டுச் சூழலில் ஒரு சிறு பகுதியையாவது ஒதுக்கி, நந்தவனம் அமைத்தல் வேண்டும். நித்தமும் அங்குள்ள பூங்கன்றுகளுக்கு நீர்ப்பாய்ச்சுவதோடு, அதிலிருந்தே பூசைக்குரிய மலர்களையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அத்துடன் துளசிமாடம் அமைத்து, துளசிச் செடியை வலம் வந்து வணங்குதல் வேண்டும். நாம் உணவு உண்ணுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறைவனுக்கு நன்றி செலுத்தி விட்டே உண்ணுதல் வேண்டும். நம் முன்னோர்கள் கையாண்ட சமய நற்பண்புகளில் இதுவும் ஒன்று. நாவுக்கரசரின் பின்வரும் தேவாரத்தினை ஓதிய பின்னர் நாம் உணவருந்தும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்வது சாலச் சிறந்ததாகும்.

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குத் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே

திருச்சிற்றம்பலம்

நாம் வீட்டிலிருந்து வெளியில் அல்லது வேலைக்குச் செல்லும் போதும் கடவுளை வணங்கி விட்டே செல்லுதல் வேண்டும். அத்துடன் நாம் மீண்டும் வீடு திரும்பியதும் கை, கால், முகம் கழுவிய பின்னர் இறைவணக்கத்தில் ஈடுபடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை வேளைகளில் விளக்கினை ஏற்றித் தூப தீபம் இட்டு, திருமுறைப் பாடல்களைப் பாடுதல், நித்திரைக்குச் செல்வதற்கு முன்னர் இறைவனைத் துதித்தல், அன்றைய நாள் முழுவதும் செய்த செயல்களை எண்ணிப்பார்த்து அவற்றில் தவறிளைத்த செயல்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டல் வேண்டும்.

வீட்டில் இடம்பெறும் விசேட தினங்களின் போதும் நமது செயற்பாடுகள் அனைத்தும், இறை சிந்தனைப் பாற்பட்டே காணப்படுகின்றன. குறிப்பாக விரதங்கள், பண்டிகைகள், சடங்குகள் ஆற்றப்படும் சந்தர்ப்பங்களில் இறை சிந்தனை மேலோங்கிக் காணப்படுகின்றது. நாம் அனுஷ்டிக்கும் ஒவ்வொரு விரதங்களின் போதும், தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி முதலான பண்டிகைக் காலங்களிலும் நாம் சமய ரீதியாகப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும்.

- வீட்டையும், வீட்டுச் சூழலையும் சுத்தப்படுத்துதல்
- வாசலில் மாக்கோலம் போடுதல்
- மாவிலை தோரணம் கட்டுதல்
- கும்பம் வைத்தல்
- மருத்து நீர்வைத்து நீராடுதல் (சித்திரை வருடப்பிறப்பு)
- தோய்த்துலர்ந்த அல்லது புதிய ஆடைகளை அணிதல்
- புதிய பாத்திரங்களில் சமைத்த உணவை இறைவனுக்கு நிவேதித்தல்
- பஞ்ச புராணம் ஓதுதல்
- தானம் செய்தல்

வீட்டுடன் இணைத்து ஆற்றப்படும் சடங்குகள் மனித வாழ்வில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அச்சடங்குகள் இருவகைப்படும். அவை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பூர்வக் கிரியைகள்

2. அபரக் கிரியைகள் என்பனவாகும்

உயிர் உடலில் இருக்கும் போது ஆற்றப்படும் சடங்குகள் பூர்வக் கிரியைகள் எனப்படும். குறிப்பாக, பெயர்சூட்டுதல், ஏடு தொடக்குதல், உபநயனச் சடங்கு, திருமணச் சடங்கு போன்றன அவற்றுள் சிலவாகும். இவை அனைத்தும் இறை சிந்தனையுடன் நடத்தப்படுவதோடு, இக்காலங்களில் வீடுகளும் சைவ இல்லங்களாகவே காட்சி தரும்.

உயிர், உடலை விட்டுப் பிரிந்ததும் ஆற்றப்படும் சடங்குகள் அபரக் கிரியைகள் எனப்படும். இதில் முதன்மை பெறுவது மரணச்சடங்காகும். இதன்மூலம் இறந்த ஆன்மாவை இறைவனுடன் இரண்டறக் கலக்கச் செய்வதற்காகச் சீவனைச் சிவனாகப் பாவித்து, பல சமயக் கிரியைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறாக, தினமும் காலை முதல் இரவு வரையிலும் மற்றும் விசேட காலங்களிலும் சைவசமயிகள் இறைசிந்தனையுடனும், பக்தியுடனும் தங்களது கருமங்களை ஆற்றி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியப் பண்புகளைக் கடைப்பிடிப்போம்

மனித வாழ்வு மேம்பாடானது எனக் கருதுவதற்கு உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே விழுமியங்கள் எனப்படுகின்றன. எமது வாழ்வில் போற்றி வளர்க்க வேண்டிய உயர்ந்த மனிதப் பண்புகள் பல உள. அவை யாவும் மனிதனை மனிதனாக வாழ வைப்பன. மனித விழுமியங்களில் முதன்மையானதும் அடிப்படையானதும் அன்பே ஆகும். அதற்கு மாபெரும் ஆற்றல் உண்டு. எனவேதான் உலக மகாசக்தி என அன்பு போற்றப்படுகின்றது. அன்பை அடிப்படையாகக் கொண்டு எழும் எல்லாச் செயலும் மேம்பாடு உடையதாகும். இவ்வகையில் மனித விழுமியங்கள் பல உள. அவற்றுள் உளத்தூய்மை, சகிப்புத்தன்மை, சமாதானம், அமைதி, உதவிசெய்தல், தலைமைத்துவம் ஆகியவை பற்றி இங்கு பார்ப்போம்.

**உளத்தூய்மை**

மனம் தூய்மையாய் இருத்தல் உளத்தூய்மையாகும். புறத்தூய்மை நீரால் அமையும். அகத்தூய்மை அன்பால் அமையும், அகத்தூய்மை அன்பால் அமையும். சிந்தனை, சொல், செயல் என்பன தூய்மையானதாக அமைய அன்பு வேண்டும். இதனால் பொய், களவு, குரு நிந்தனை போன்ற பஞ்சமாபாதகங்கள் இல்லாது ஒழியும். உள்ளம் தூய்மையாய் இருக்கும் போது அங்கே பொறாமை இருக்காது.

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன
ஆகுல நீரபிற" என்பது வள்ளுவர் வாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதிலே அழுக்கில்லாதிருத்தல் எல்லா அறங்களிலும் மேலானது. மனிதனுடைய உள்ளத்திலே அன்பு இருந்தால் பேரவா, கோபம், அதன் காரணமாக கொடுமையான சொற்கள் என்பன இடம்பெறாது. புலமையான அறிவு மட்டும் உயர்நிலை விழுமியமாகாது. ஒருவர் வாழும் பொருட்டுச் சம்பாதிக்க அது உதவலாம். வாழ்வின் சவால்களுக்கு முகம் கொடுக்க கூடியவாறு அறப் பண்புடைய உளத்தூய்மையே மனிதனை உயர்ந்தவனாக்குகின்றது. அன்பு மனத்தூய்மையை மேம்படுத்தும். தூய்மை தெய்வீகத்தை மலரச் செய்யும். எனவே மனிதன் உளத்தூய்மையுடன் இருக்கும் போதே அவன் வாழ்வில் அமைதியையும் சகிப்புத்தன்மையையும் ஆனந்தத்தையும் பெறுகின்றான்.

**சகிப்புத்தன்மை**

மனத்தூய்மை உள்ள இடத்திலேயே சகிப்புத்தன்மை ஏற்படும். அந்நிலையில் சமாதானம் பிறக்கும், இந்நிலையில் பிறருக்கு உதவி செய்தல் நிகழும். உண்மையான தலைமைத்துவப் பண்பும் மனத்தூய்மையால் விருத்தி அடையும் மனத் தூய்மையே அதி உயர்ந்த விழுமியங்களில் ஒன்றாகும். ஒருவர் மற்றவருடன் பழகும் போதும், அண்டை அயலவருடன் பழகும் போதும் சகிப்புத்தன்மை இல்லாது விட்டால் உறவு கொள்ள முடியாது. மற்றவர் கூறும் கருத்துக்களில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் அவற்றை செவிமடுத்தல் சிறந்த பண்பாகும்.

மாணவர்கள் தங்கள் வகுப்பு, மாணர்களிடையே ஏற்படும் கருத்து மோதல்களால் வேற்றுமை பாராட்டாது உறவு பேண வேண்டும். நாம் பொறுமையாக இருந்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம். எனவே அடுத்தவர்கள் எங்களுடன் ஆத்திரப்பட்டாலும் பொறுமையாகச் சகித்துக்கொள்வோமேயானால் நாம் பகைக்காது உறவாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். மனிதனை உயர்ந்த பண்புள்ளவனாக்கும் பொறுமையும், அதனால் உண்டாகும் சகிப்புத்தன்மையும் வாழ்வில் வெற்றியைத் தருகின்றது. "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலை" என்கிறது பொய்யா மொழி. மற்றவர்கள் எமக்கு தீங்கு செய்யும் போது அவர்களைப் பகைக்காது அவர்களுடன் அன்பாக உறவாடுவது சிறந்த அறச்செயலாகும்.

வாழ்க்கையில் வெற்றிக்குரிய சிறந்த நற்சாட்சியாக அமைவது பணிவாகும். மகிழ்ச்சிக்கு உறுதியைத் தருவதும் பணிவாகும். இத்தகைய பணிவுள்ள இடத்திலேயே சகிப்புத்தன்மை ஏற்பட முடியும். மனம் மாசில்லா இடத்தி லேயே சகிக்கும் தன்மை ஏற்படும். அகம்பாவம் உள்ள இடத்தில் சகிப்புத்தன்மை நிலை கொள்ள முடியாது. "பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார்" என்பது முதுமொழி. சகிப்புத்தன்மை இழந்தவன் வாழ்வில் அமைதி இழந்தவனாவான்.

**சமாதானம்**

நாம் மற்றவருடன் மனப்பூர்வமாக நல்லிணக்கத்துடன் இருத்தல் சமாதானமாகும். நாம் நமது பெற்றோருடனும், சகோதரர்களுடனும், குடும்பத்திலுள்ள பெரியவர்களுடனும், அயலவர்களுடனும், சமூகத்தில் வாழும் அனைவருடனும் அன்புடன் வாழ்வதன் மூலம் அனைவரும் நலமாக வாழலாம். உள்ளத்தில் அன்புள்ள போதே மனிதன் அமைதி அடைய முடியும். அமைதி உள்ள போதே சமாதானம் நிலைபெறும். அன்பில்லா வாழ்க்கை அமைதியற்றது. ஏனெனில் அன்பில்லாத போதும் மனம் அமைதி இழந்துவிடுகின்றது. அதனால் சமாதானம் தொலைந்து விடுகின்றது. உலகியல் அறிவு வாழ்க்கைக்கு அவசியம் என்பது சந்தேகத்துக்கு இடமற்றது. அறிவைத் தேடிக்கொள்ளும் அதேவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான வாழ்க்கை பற்றிய அடிப்படை உண்மை பற்றியும் ஒழுகலாறு பற்றியும் தெரிந்திருத்தல் அவசியம். நாம் மற்றவர்களை உண்மையாக விசுவாசிப்பதன் மூலமே உண்மையான சமாதானத்தை வளர்த்துக்கொள்ளலாம்.

**உதவி செய்தல்**

எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாது செய்யும் சேவையே உதவியாகும். மனித வாழ்வு இயற்கையுடன் இணைந்துள்ளது. இயற்கையின் பேருபகாரத்தால் மனிதன் தான் வாழ்ந்து கொண்டிருப்பதை அறிந்து தானும் மற்றவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டும். எதிர்பார்ப்பு எதுவுமற்ற உதவியின் மூலம் இறையருள் கிட்டும் பிள்ளைகள் வீட்டில் பெற்றோருக்கும் குடும்பத்தில் வசிக்கும் முதியோருக்கும் உறவினர்களுக்கும் உதவிபுரிய வேண்டும். அயலவருக்கு உதவுதல் நல்ல பண்பாகும். சமூகத்தில் யாருக்கு உதவி தேவையோ அவர்களுக்கு மனப்பூர்வமாக உதவி செய்ய வேண்டும்.

மனம் நொந்து இருப்பவருக்கு ஆறுதல் வார்த்தை கூற வேண்டும். பராமரிக்க யாருமே இல்லாதவரை பராமரித்தல் வேண்டும். நோயாளர், அங்கவீனர், வயோதிபர் அனைவருக்கும் நம்மாலான உதவிகளைச் செய்வது சிறந்த பண்பாகும். பாடசாலையில் நடைபெறும் கொண்டாட்டங்களுக்கும் ஆலயத்தில் இடம்பெறும் நிகழ்வுகள், விழாக்களுக்கும் மனமுவந்து உதவி செய்தல் சாலச்சிறந்தது. சைவர்கள் எல்லா உயிரிலும் சிவன் உறைபவன் என்ற நம்பிக்கை உள்ளவர்கள். எனவே எந்த உயிரின் துன்பத்தைப் போக்கவும் உதவி செய்வது சைவசமயத்தவரின் உடமையாகும். அமைதியான மனதினாலே ஆண்டவனை வழிபடலாம். இதனால் சிவனருள் கிட்டும். இன்பமாக வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமைத்துவம்**

உரிய விடயத்தை உரிய காலத்தில் முன்னெடுத்துச் செல்லும் தகைமை தலைமைத்துவப் பண்பாகும். ஒவ்வொரு மாணவனும் தளரா உறுதியும் நேரிய நோக்கும் கொண்டவனாக பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் சமூகத்தாலும் வளர்த்தெடுக்கப்படும் நிலையிலேயே அவன் தலைமைத்துவப் பண்புடையவனாகின்றான். சுயநலத்தின்றும் விடுபட்டு பிறர்நலம் பேணும் ஒருவரே உண்மையான தலைவனாக முடியும். சிறந்த ஒரு தலைவன் நேரக் கட்டுப்பாடுடையவனாகவும் சூழலை ஒட்டியவனாகவும் சிறந்த ஒருங்கிணைப்பாளராகவும் இருப்பான். மேலும் சிறந்த நல்ல ஒழுக்கலாறுகளைப் பேணுபவனாகவும் சூழ்நிலைகளை அறிந்து செயற்படுபவனாகவும் மற்றவரின் கருத்துக்கு மதிப்பளிப்பவனாகவும் மொழிப் புலமை உடையவனாகவும் இருப்பான். மொழியாற்றல் ஒரு தலைவனுக்கு இன்றியமை யாப் பண்பாகும்.

தலைவன் தான் எடுத்துக் கொண்ட விடயத்தை முடிப்பதற்கு ஏனையவர்களின் உதவி கிடைக்காவிட்டாலும் தனித்து நின்றேனும் செயற்படும் திறன் பெற்றிருக்க வேண்டும். மாணவர்கள் தமக்குரிய உரிமைகள் பற்றித் தனித்துக் கவனம் செலுத்தாமல் தமக்குரிய கடமை களை பொறுப்புக்கள் பற்றிய கரிசனை உடையவர்களாக இருத்தல் அவசியம். பொறுப்புக் களை விரும்பி ஏற்றுச் செய்யும் சேவை தலைமைத்துவப் பண்புகளுளொன்றாகும். குடும்பத்திலும், சமூகத்திலும், நாட்டிலும் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் அதனால் ஏற்படும் துன்பங்களுக்கும் நல்லதோர் தீர்வை எட்டச் செய்பவனே தலைவன். நாயன்மார்கள் நாட்டில் ஏற்பட்ட துன்பங்களைத் தீர்க்க தலைமை ஏற்று நடந்தமை குறிப்பிடத்தக்கது. தூய உள்ளத்தோடு சமூகத்திற்கு சேவை செய்வதற்கு தம்மை தாமே ஆக்கிக்கொள்ளும் திறனை மாணவரிடையே விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதே ஆசிரியரின் தலையாய பணியாகும். மாணவர்கள் பாடசாலையில் கற்கும் காலத்திலே அவர்களிடையே தலைமைத்துவப் பண்பை வளர்ப்பவராக ஆசிரியர் விளங்க வேண்டும். பாடசாலையில் அமைக்கப்பட்டிருக்கும் பல்வேறு மன்றங்களில் மாணவர்கள் இணைந்து அந்த அமைப்புக்களின் மூலம் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்தல் சிறப்புடைய தலைமைத்துவத்தை எடுத்துக் காட்டுவதாகும். உதாரணமாக சைவ மன்றத்தினூடாக மாணவர் செயற்படும் போது சைவ வாழ்வினைப் பிரதிபலிப்பவராக சிறந்த ஒழுக்க சீலராகக் காணப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானத்தின் சிறப்பு

சைவ சமயிகள் மேற்கொள்ளும் சமூகப் பணிகளில் தானதருமங்கள் மிக உன்னத நிலையினைப் பெறுகின்றன. பொதுவாக தானம் எனில் கொடை எனப் பொருள்படுகின்றது. எவ்விதமான பிரதி உபகாரமுமின்றி ஒரு பொருளை ஒருவர் மற்றவருக்கு வழங்குவது உண்மையான தானமாகும். இவற்றிலே அன்னதானம் நித்திய தானம் என்னும் வகைக்குள் உள்ளடக்கப்படுகின்றது.

அன்னதானம் சாத்வீக தானம் எனப் பகவத்கீதை கூறுகின்றது. அதாவது, கைம்மாறு கருதாமல் தகுந்த இடத்தையும் காலத்தையும் தகுதியானவரையும் நோக்கிச் செய்யப்படும் தானமாகும். பல தானங்கள் நூல்களிலே கூறப்பட்டாலும் அவற்றிலே முதன்மையானது அன்னதான மாகும். ஏனெனில் இத்தானத்தினாலேதான் ஒருவரை முழுமையாகத் திருப்திப்படுத்த முடியும். ஆலய வழிபாட்டிலே "மகேஸ்வரர் பூஜை" என்று அன்னதானம் சிறப்பிக்கப் படுகிறது.

வேதத்தின் பகுதியான தைத்திரீய உபநிடதத்தில் அன்னத்தை மிகுதியாக உண்டாக்க வேண்டும். அது அன்னத்தைக் கேட்டுவந்த எவரையும் தள்ளி விடக்கூடாது என்று கூறப்படுகிறது. உயிருள்ள உடம்பினைக் காப்பாற்ற உணவு மிக அவசியம். இதனால் தான் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" எனப் புறநானூற்றுப் பாடலில் கூறப்படுகிறது. மணிமேகலை என்ற நூலில் பசிப்பிணி போக்கும் அட்சய பாத்திரச் சிறப்பு கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகார முடிவிலே "தானம் செயலின்; தவம்பல தாங்குமின்" எனச் சிறப்பிக்கப்படுகிறது. பௌத்த சமயத்திலே புத்தபெருமான் அன்னதான மகிமையைத் தனது சீடர்களுக்கு எடுத்துரைக்கும் போது "நீங்கள் மிகுந்த பசியில் இருக்கும் போது உங்கள் தட்டிலுள்ள உணவினை உங்கள் அருகில் பசியில் இருப்பவர்களுக்கு வழங்கினால், உங்கள் பலம் அந்த உணவு உண்பதைக் காட்டிலும் அதிகமாகும் என்று கூறினார். திருமூலர் தனது திருமந்திரப் பாடலில் "யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" என்று அன்னதானம் வழங்குவதன் சிறப்பை எடுத்துக்காட்டுகிறார். அதாவது பசி என்று வந்தவர்களுக்கு நீங்கள் உண்ணுவதற்கு முன்னர் ஒருபிடி சோறாவது கொடுங்கள் என்று குறிப்பிடுகிறார்.

தமிழ் நீதி நூல்களிலே அறவொழுக்கவியல் சிந்தனைகள் சமூகத்திற்கு எடுத்துக் காட்டப்படுகிறது. அவற்றிலே விருந்தோம்பல் என்னும் செயற்பாட்டிலே அன்னதானம் வழங்குவதே முன்னிலைப்படுத்தப்படுகிறது. குறிப்பாக திருக்குறள், நல்வழி போன்ற நூல்களிலே உணவு அளிப்பதன் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்படுகிறது.

பசிப்பிணிக்கு முன் எவ்வகையான தகுதியும் நிலைக்காது என்பது ஒளவைப்பாட்டியின் கருத்தாகும். அதாவது மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, காமுறுதல் ஆகிய பத்தும் பசிவந்திடப் பறந்து போகும். என்பதிலிருந்து பசிப்பிணிக்கு உணவு அளிப்பதன் முக்கியத்துவம் ஒளவையாரால் வலியுறுத்தப்படுகிறது. இந்துக்களின் வாழ்க்கைப் படிநிலைகளில் கிருகஸ்த நிலையில் உள்ளோரே ஏனைய நிலையில் உள்ளோருக்கு உணவளிக்க, தகுதி உடையவர் என்று குறிப்பிடப்படுகிறது. இதனைத் திருவள்ளுவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடியார்க்கு அமுதூட்டல்

சைவசமய மரபிலே பசிப்பிணி போக்கி உணவளிக்கும் தகுதி பெற்றோர்களில் சிவனடியார்கள் சிறப்புக்குரியவர்கள். பெரியபுராணத்திலே சிவனடியார் வழிபாடு "சங்கமவழிபாடு" என அழைக்கப்படுகிறது. சிவபெருமானிடம் மெய்யன்பு பூண்டொழுகுவோர் சிவனடியார் ஆவார். அவர்கள் சிவபெருமானை நினைத்தலிலும், அவரைப் பற்றிக் கேட்டலிலும், திருத்தொண்டு புரிவதிலும், திருவைந்தெழுத்தை ஓதுவதிலும் இன்புறுவர். பெரியபுராணத்திலே சிவனடியார் வழிபாடு மூலம் முத்தியடைந்தவர்களாக சிறுத்தொண்டர், இளையான்குடிமாற நாயனார், திருநீலகண்டர், இயற்பகையார், காரைக்காலம்மையார் முதலியோர் குறிப்பிடப்படுகின்றார். பெரியபுராண வரலாற்றிலே சிவன் அடியவர் வேடம் தாங்கி சிவனடியார்களைச் சோதித்தமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

சமயகுரவர்கள் தலயாத்திரை செல்லும் போது சிவனடியார்களுக்கும் மக்களுக்கும் உணவளித்து பசிப்பிணி போக்கிய சம்பவங்கள் அவர்களுடைய வரலாற்றிலே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதேபோல சமயகுரவர்களுக்குச் சிவனடியார்கள் திருவமுது செய்வித்த சிறப்புகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிவனடியார்களுக்கு அமுதூட்டிய சம்பவங்கள் சில வருமாறு;

- இளையான்குடிமாற நாயனார் வறுமையிலும் சிவனடியாருக்கு திருவமுது ஊட்டும் செயலை ஆற்றியமை
- சிறுத்தொண்ட நாயனார் வன்பக்தி ஊடாக திருவமுது செய்வித்தமை
- திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இணைந்து திருவீழிமிழலையில் பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனிடம் படிக்காசு பெற்று பஞ்சம் தீர்த்தமை

- மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டிய மன்னன் குதிரை வாங்கக் கொடுத்த பொற்காசுகளைச் செலவுசெய்து சிவனடியார்களுக்கு திருப்பெருந்துறையிலே திருவமு தூட்டியமை
- அப்பூதியடிகள் திருநாவுக்கரசருக்கு திருவமுது ஊட்டியமை

**சிவனடியார் அமுதூட்டும் செயல் மூலமாக கிடைக்கப்பெறும் நன்மைகள்**

- உள்ளத்திலுள்ள கீழ்த்தர எண்ணங்களை அகற்றி, உயர்ந்த எண்ணங்களை உண்டாக்குகின்றது.
- உலகப் பற்றை நீக்கித் தெய்வீகப்பற்றை வளர்க்கின்றது.
- உள்ளம் தூய்மையடைந்து பக்தி, வைராக்கியம் வளர்க்கப்படுகின்றது.
- அன்பு, பகிர்ந்துண்ணல், இரக்கம், புரிந்துணர்வு போன்ற பண்புகள் விருத்தியடைகின்றன.

## வறியவர்களுக்கு அன்னமிடல்

சைவசமயம் குறிப்பிடும் சமூகப் பணிகளில் வறியவர்களுக்கு அன்னமிடுதல் முக்கியமானதொரு பணியாகும். குறிப்பாக வீடு வாசல் இல்லாமல் வாழ்பவர்கள், நிராதரவாக வாழ்ந்து வரும் வயோதிபர்கள், அநாதைச் சிறுவர்கள், ஊனமுற்றோர்கள், வறியவர்கள் என்ற ரீதியில் அன்னதானம் வழங்குவதற்கு தகுதியுடையவர்கள் ஆவார். இருந்தபோதிலும் விருந்தோம்பல் என்ற வகையில் விரதங்கள், பண்டிகைகள், ஆலய வழிபாடுகள், சடங்குகள் முதலியவற்றின் போது எல்லோரும் அன்னதானம் பெறுவதற்கு உரித்துடையவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக அநாதை இல்லங்களிலே அன்னதானம் வழங்குவதால் அதிக பலன்கள் கிடைக்கின்றன. அதேபோல பழைமையான சிவாலயங்களில் அன்னதானம் வழங்குவதால் தெய்வீக சக்தி அதிகமாகக் கிடைக்கின்றது. இந்தியாவிலே காஞ்சி காமாட்சி, அண்ணாமலை சிவன் கோயில் முதலிய ஆலயங்கள் அன்னதானம் வழங்குவதில் பிரபல்யம் பெற்றுள்ளன. ஈழத்திலே தொன்மை வாய்ந்த சிவாலயங் களிலே அன்னதான மடங்கள் அமைக்கப்பட்டு வறியவர் களுக்கு அன்னமிடப்படுகின்றது. நயினாதீவு நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் தினமும் அன்னதானம் சிறப்பாக நடைபெறுகிறது. இதனைவிட ஈழத்திலே "அன்னதானக் கந்தன்" எனச் சிறப்பிக்கப்படும் செல்வச்சந்நிதி எனும் முருகன் ஆலயம் வறியவர்களுக்கு அன்னமிடும் சிறப்பான ஆலயங்களில் ஒன்று. மேலும் எமது நாட்டிலே உள்ள சைவசமய நிறுவனங்கள், ஆதினங்கள், மடங்கள் என்பன அன்னதானம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

நம்முன்னோர் தாம் செய்த கர்மவினை நீங்க ஆடி அமாவாசை, புரட்டாதி அமாவாசை, தை அமாவாசை ஆகிய நாட்களில் தாம் வாழும் ஊரில் உள்ள பழமையான சிவாலயங்களில் அன்னதானம் வழங்குவதனை மரபாகக் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக வறியவர்களுக்கு அன்னமிடுவதால் பின்வரும் பலாபலன்கள் பெற்றுக்கொள்ளலாம்.

- பாவங்கள், சாபங்கள் நீங்கப்பெறும்
- தோச நிவிர்த்தி ஏற்படும்
- மனநிம்மதி ஏற்படும்
- தொழில், பதவி உயர்வுகள் கிடைக்கப்பெறும்
- விருந்தோம்பல் பண்பு வளர்க்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சிறுவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை

01. எம் கருமத்தை ஆற்றுவதற்கு முன்னர் கடவுளை வழிபடும் பண்பினைக் கடைப்பிடித்தல்

02. கடவுள் எங்கும் உள்ளார், எல்லாம் அறிவார், எம்மைக் காப்பவர் என்ற உணர்வினைப் பேணல்

03. சூரிய உதயத்தின் முன் நித்திரை விட்டெழும்புதல்

04. காலையில் வீட்டு முற்றத்தில் மாக்கோலம் போடுதல்

05. காலையும் மாலையும் வீட்டில் விளக்கேற்றிச் சுவாமியை வணங்குதல்

06. காலை எழுந்தவுடன் பெற்றோர்களின் பாதங்களைப் பணிந்தெழுதல்

07. பிறந்த தினம், விசேட தினங்கள் போன்ற நாட்களில் வயது முதிர்ந்தவர்களிடம் ஆசி பெறுதல்

08. வெளியில் செல்லும் போது விபூதி அணிந்து செல்லுதல்

09. தினந்தோறும் ஆலய வழிபாட்டில் ஈடுபடுதல். வெள்ளிக் கிழமைகள், விசேட தினங்கள், பண்டிகை நாட்களில் தவறாது ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல்

10. ஆலயங்களில் வீண் வார்த்தைகள் பேசாது அமைதியாக இறைவனை வழிபடுதல்

11. ஆலயங்களின் உள்ளே விளையாடுதல், சண்டையிடுதல், குப்பை போடுதல், எச்சில் உமிழ்தல், உணவு உண்ணல் (பிரசாதம் தவிர்ந்த) தலைமயிர் சீவுதல், பாதணிகள் தொப்பிகளுடன் செல்லுதல் போன்றவற்றைத் தவிர்த்தல்

12. ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களைத் தொட்டு வணங்காதிருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கைகளைக் கூப்பியபடியும் "ஓம் நமசிவாய" என்று திருவைந்தெழுத்தை ஓதியபடியும் ஆலய வீதியை வலதுபுறமாக வலம் வருதல்

14. ஆலயத் தொண்டுகளில் ஈடுபடுதல்

15. பூந்தோட்டம் அமைக்கும் போது மணம் வீசக்கூடிய, இறைவனுக்குச் சாத்துவதற்கு உகந்த பூச்செடிகளையே நாட்டுதல்

16. பூசைக்காகப் பூக்களைப் பறிக்கும் போது நல்ல பூக்களைத் தெரிந்தெடுத்துக் காம்புடன் வலது கையினால் பறித்தல்

17. பூக்களை முகர்ந்து பார்க்காமலும் கீழே விழுத்தாமலும் கோயிலுக்குக் கொண்டுசெல்லல்

18. பூக்களைப் பறிக்கும் போது பூமாலை கட்டும் போதும் இறை சிந்தனையுடன் இருத்தல்

19. தோத்திரங்கள் பாடும் போது சரியான மெய்ந்நிலையில் நின்றும் பிழையின்றியும் இராகத்துடனும் பக்தியுடனும் உணர்ந்து பாடுதல்

20. சமய குரவர்களைப் போற்றி அவர்களது குருபூசைத் தின வழிபாடுகளில் ஈடுபடுதல்

21. வீட்டில் விளக்கேற்றியபின் வீட்டைக் கூட்டுவதையும், பூக்களைப் பறிப்பதையும் தவிர்த்தல்

22. வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தல்

23. உணவு உண்ணும்போது காகத்திற்கு வைத்த பின் உண்ணுதல், இறைவனை வணங்கிய பின் உண்ணத் தொடங்குதல்

24. இல்லையென்று வருவோர்க்கு உதவுதல்

25. முதியவர்கள், உடற்குறைபாடுடையவர்களுக்கு உதவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியே சரணம் ஐயப்பா!

சண்டிலிப்பாய் வேவிற்பதி

பூர்ணா புஷ்கலாதேவி சமேத

ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம்

# 18 படிகளின் தத்துவம்

தர்ம சாஸ்தாவின் 18 படிகளும் தத்துவத்தை விளக்குகின்றன.
ஒவ்வொரு படியிலும் அடியெடுத்து வைக்கும் போது
ஒவ்வொரு தீய பழக்கமும் நம்மை விட்டு நீங்குவதாக ஐதீகம்

1ம் படி - காமம்
2ம் படி - குரோதம்
3ம் படி - லோபம்
4ம் படி - மோகம்
5ம் படி - மூர்க்கம்
6ம் படி - மாச்சர்யம்
7ம் படி - வீண் பெருமை
8ம் படி - அலங்காரம்
9ம் படி - பிறரை இழிவுபடுத்தல்
10ம் படி - பொறாமை
11ம் படி - இல்லறப் பற்று
12ம் படி - புத்திர பாசம்
13ம் படி - பணத்தாசை
14ம் படி - பிறவி வினை
15ம் படி - செயல் வினை
16ம் படி - பழக்க வினை
17ம் படி - மனம்
18ம் படி - புத்தி



TwinStar IT Unit. Main Street. Chanknanai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org